தமிழ் மாலை

ஒன்பதாம் வகுப்பு

மங்கள நூலகம்

சென்னை-6

தமிழ் மாலை

ஒன்பதாம் வகுப்புக்குரியது

[புதிய பாடத் திட்டப்படி]

தொகுத்தோர் :
பேராசிரியர் அன்பு கணபதி
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம் : : சென்னை-34

[விலை ரூ. 2·25

பதிப்புரிமை]

1095/4

171526

இந்நூல் 15·4 கிலோ கிராம் வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.

73
O31,1x(D
N65

MANGALA NOOLAGAM

MADRAS-34

1965

M. W. N. PRESS, MADRAS-5.

முன்னுரை

நம் அரசினர் அண்மையில் புதிய ஒன்பதாம் வகுப்புக்கெனத் தந்துள்ள புதிய பாடத் திட்டத்திற்கு ஏற்ப இத் தமிழ் மாலை தொகுக்கப்பெற்றுள்ளது.

செய்யுட் பகுதியிலே அதிக வரிகள் சேர்க்கப்பட்டிருப்பது, மாணவர்களிடையே தமிழார்வம் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என நன்னோக்கம் கொண்டேயாகும். உரைநடைப் பகுதியிலே பாடத் திட்டத்தில் கண்ட பல்வேறு தலைப்புக்களை ஒட்டிய தொகுப்புக்களை இயன்ற அளவு எடுத்துத் தந்துள்ளோம்.

ஒவ்வொரு தலைப்பின் முடிவிலும் அருஞ்சொற் பொருள், வினாக்கள், இலக்கணக் குறிப்புகள், பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

அருந்தமிழாசிரியர் உலகம், இம்மாலை மேலும் மணங் கமழ, கூறும் அரிய கருத்துக்களை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

இம்மாலை அழகுபெற, தொகுத்துதவியவர்க்கும், தத்தம் கவிதைகளையும் கட்டுரைகளையும் எடுத்தாள அன்புடன் அனுமதி தந்துதவிய ஆசிரியப் பெருமக்களுக்கும், பதிப்பகத்தினருக்கும் எங்கள் வணக்கம் கலந்த நன்றி.

நூலகத்தார்.

பொருளடக்கம்

செய்யுள்

வாழ்த்து			பக்கம்
1.	கடவுள் வாழ்த்து	...	1
2.	தமிழ்மொழி வாழ்த்து	...	1
3.	நாட்டு வாழ்த்து	...	1
	அறவுரை		
1.	திருக்குறள்	...	3
2.	நாலடியார்	...	10
3.	ஏலாதி	...	11
4.	சிறுபஞ்சமூலம்	...	12
	தொடர்நிலைச் செய்யுள்		
1.	சிலப்பதிகாரம்	...	21
2.	மணிமேகலை	...	23
3.	கம்பராமாயணம்	...	28
4.	பெருங்கதை	...	33
5.	வில்லிபாரதம்	...	38
6.	திருத்தொண்டர் புராணம்	...	43
7.	பாஞ்சாலி சபதம்	...	51
	பல்சுவை		
1	வருணனை	...	54
2.	சீட்டுக்கவி	...	55
3.	சிலேடைகள்	...	55
4.	தனிப்பாடல்கள்	...	56
5.	சிறு பிரபந்தங்கள்	...	56
6.	முருகக் கடவுள் துதி	...	57
*7.	நல்லுரை	...	57
*8.	இறைவன் தன்மை	...	58
*9.	சிரித்த முல்லை	...	59

---

*இக்குறி இடப்பெற்றவை ஆசிரியர் அல்லது உரிமையாளர் இசைவுடன் பதிப்பிக்கப்பட்டவை.

உரைநடை

பக்கம்

1: பிள்ளையவர்கள் முன் முதல் நாள் ... 65
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

2. கொல்லிமலை வீரன் ... 74
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

3. சேக்கிழார் ... 77
சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார்

4. இளைஞர்களுக்கறிவுரை ... 82
திரு நெ. து. சுந்தரவடிவேலு, M.A., L.T.

5. விவேகானந்தர் விடுத்த சுடிதம் ... 90
சுவாமி விவேகாநந்தர்

6. இலக்கிய ஓவியங்கள்-முத்தொள்ளாயிரம் ... 97
புலவர் சரவண ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.

7. தேக சுகம் ... 103
டாக்டர் K. S. கிருஷ்ணன்

8. எது அறிவு ... 110
திரு. கி. ஆ பெ. விசுவநாதன்

9. மகாபலிபுரம் ... 115
திருமதி. R. S. ருக்மணி, M.A.

10 சிலப்பதிகாரம் தோன்றிய வரலாறு ... 124
வித்துவான் வே. க. ரங்காச்சாரி

11. பல நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் ... 129
"சோம.லெ."

12. குடும்பக்கலை ... 139
திரு. எஸ். சுவாமிநாதன், B.A., L.T.

13. மாணவர் இலக்கியப் பேரவை ... 145
வித்துவான் பூவாளூர் சுந்தரராமன், B.O.L.

14. குமணன் (நாடகம்) ... 151
புலவர் 'அரசு'

15. சிறு சேமிப்பு ... 163

16. அருள் உணர்ந்த அண்ணல் ... 171
திரு. அன்பு - கணபதி அவர்கள்

கட்டுரைகள் ஆசிரியர் அல்லது உரிமையாளரின் இசைவுடன் பதிக்கப்பட்டவை.

மனப்பாடப் பகுதி

	வரிகள்
கடவுள் வாழ்த்து	4
தமிழ் மொழி வாழ்த்து	6
திருக்குறள் ஏதேனும் 10 குறட்பாக்கள்	20
மணிமேகலை 35—50	16
கம்பராமாயணம் 19, 20	8
வில்லி பாரதம் 4	8
திருத்தொண்டர் புராணம் 8, 25, 26	12
தனிப்பாடல்கள் 2	4
மறம்	8
பிள்ளைத் தமிழ்	8
இறைவன் தன்மை	8

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல ஜமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா,

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கல தாயக ஜயஹே

பராத பாக்ய விதாதா,
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்

நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

உறுதி மொழி

என்னுடைய தாய்நாடு இந்தியா. இந்தியர்கள் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் தாய்த் திருநாட்டை நான் உளமார நேசிக்கிறேன் வளமும், வேறுபாடும் நிறைந்த அதன் மரபினை எண்ணி இறும்பூதடைகிறேன். அன்னதன் புகழுக்கேற்பத் தகுதியுடைய நன்மகனாய் விளங்க நான் என்றும் முயல்வேன்.

அன்புடன் என்னை ஈன்ற அன்னை, ஆருயிர்த்தந்தை, ஆசிரியப்பெருந்தகை, ஆன்ற முதியோர் அனைவரையும் வணங்குவேன். மாண்புடைய அன்னவர் அனைவரையும் நன்னயம் துலங்க நடத்துவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் என் வந்தனை என்றும் உரியது. என் நாட்டவர் வாழ்வின் நலமும், வளமுமே என் போற்றரும் இன்பம் என்று உளம் பூரிப்பேன்.

செய்யுள்

1. வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து

தாயே தந்தையென்றும் தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தே னுன்னைக்காண்பதோ
ராசையினல்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்திரு வேங்கடவா!
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக்
கொண்டருளே.

—திருமங்கையாழ்வார்

2. தமிழ்மொழி வாழ்த்து

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினு
மோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்
துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

3. நாட்டு வாழ்த்து

இருதொடர் கடலோ ரத்தில் இலகுகன் னியைவ ணங்கப்
பருவதப் படிக ளேறப் பனிவரை வீற்றி ருந்தே
குருசிவ சக்தி யிந்தக் குவலயக் கோயி லெங்கும்
அருளர சாட்சி செய்யும் அரியணை போன்ற நாடே.

—யோகி சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

1. **கடவுள் வாழ்த்து:** இது ஆழ்வார்கள் பன்னிருவரால் திருமாலைப்பற்றிப் பாடப் பெற்ற பாடல்களின் தொகுப்பாகிய நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்னும் நூலில் உள்ள பெரிய திருமொழி என்ற பகுதியைச் சார்ந்தது. இதனைப் பாடியவர் திருமங்கையாழ்வார் என்பவர். இவரது இயற்பெயர் நீலன் என்பதாகும்.

பிறப்பிடம் திருக்குறையலூர். திருமாலிடம் இணையற்ற பக்தி யுடையவர். இவர் சோழ மன்னன் படைத் தலைவராக இருந்தார். இவருடைய காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டு என்பர். இவரது மனைவியார் பெயர் குமுதவல்லி அம்மையார்.

2 தமிழ் மொழி வாழ்த்து: இப்பகுதி மனோன்மணீயத்தி லிருந்து எடுக்கப்பட்டது இதன் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. இவரது தந்தையார் பெருமாள் பிள்ளை; தாய் மாடத்தி அம்மையார். இவ ருடைய ஆசிரியர் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள். இவர் திருவி தாங்கூர் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராக இருந்தார். கி. பி. 1855ஆம் ஆண்டு பிறந்தார். 1897இல் விண்ணுலகெய்தினார்.

3. நாட்டு வாழ்த்து: இப் பாடல் பாரத சக்தி மகாகாவியத்தி லுள்ளது. இதனை இயற்றியவர் யோகி சுத்தானந்த பாரதியார். அழகாகப் பாடல் பாடும் திறமை பெற்றவர். வ. வே சு. அய்யர், ரமண மகரிஷி, அரவிந்தர், பாரதியார் இவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

பாரத நாடு ஓர் அரியணை போன்றது. இமயமலை பீடமாகும். சாத்பூரா மலைகள் படிகள். வீற்றிருப்பவர் உமையும் சிவபெருமானு மாவர். இவ்விருவரும் அருளாட்சி புரிகின்றனர்.

பனிவரை - இமயமலை.

வினாக்கள்

1. திருமங்கை யாழ்வார் திருமாலை யாது வேண்டுகின்றார்?
2. ஆழ்வார் தம் எளிமையை எவ்வாறு தெரிவிக்கின்றார்?
3. தமிழின் சிறப்பினை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்றார்?
4. "எல்லையறு பரம்பொருள்.........இருப்பதுபோல்" என்ற உவமையை விளக்கிப் பொருத்துக.
5. சுந்தரம் பிள்ளையைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
6. பாரத நாடு எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது?

பிரித்து எழுதுக:

1. பூம்பொழில் 2. பல்லுயிர் 3. சீரிளமை 4. உன்னுதரத்து.

இலக்கணக் குறிப்புக் கூறுக:

1. சிதையா 2. வாழ்த்தும் 3. காண்பது 4. நல்கி 5. கிளை.

பொருள் கூறுக:

1. கிளை 2 தாரம் 3. அளித்து 4. கவின் 5. உதரம்.

II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்(கு)
யாண்டு மிடும்பை யில. 1

வான் சிறப்பு

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 2

நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. 4
ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 5

இல்வாழ்க்கை

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். 6

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 7
சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 8

புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 9

அன்புடைமை

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. 10

விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 12

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். 13

செய்ந்நன்றி யறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 14

நடுவுநிலைமை

கெடுவலியா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 15

அடக்கமுடைமை

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 16

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 17

பொறையுடைமை

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 18

அழுக்காறுமை

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து 19

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 20

தீவினையச்சம்

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 21

ஒப்புரவறிதல்

ஒப்புரவி ஞல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. 22

ஈகை

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 23
அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி. 24

புகழ்

ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதொன் றில். 25
வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெருஅ விடின். 26

புலான் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். 27

தவம்

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். 28

கூடாவொழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். 29

வாய்மை

வாய்மை யெனப்படுவதி யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். 30

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். 31

இன்ஞ செய்யாமை

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 32

நிலையாமை

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 33

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 34

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்க மிவைமூன் றன்
நாமங் கெடக்கெடு நோய். 35

கல்லாமை

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய் து
சொல்லாடச் சோர்வு படும். 36

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 37

ஊழ்

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 38

இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம். 39

கல்வி

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 40

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 41

கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 42

அறிவுடைமை

எவ்வ துறைவ துலகு முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 43

பெரியாரைத் துணைக் கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 44

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 45

தெரிந்து செயல்வகை

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். 46

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 47

வலியறிதல்

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும் 48

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 49

காலமறிதல்

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 50

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்தவி டத்து 51

இடனறிதல்

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். 52

தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்ற மாவாவின்மை இந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. 53

சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 54

பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 55

செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 56

வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. 57

கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 58

ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கைய திஃஇல்லார்
மரமக்க ளாதலே வேறு. 59

ஆள்வினையுடைமை

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 60

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 61

அமைச்சு

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். 62

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 63

வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. 64

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம். 65

படைச்செருக்கு

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் ணாளை யெடுத்து. **66**

நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. **67**

நட்பாராய்தல்

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். **68**

பழமை

பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். **69**

சூது

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். **70**

மானம

புகழின்றால் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. **71**

சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. **72**

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. **73**

நாணுடைமை

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. **74**

குடிசெயல் வகை

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. **75**

உழவு

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லாள் நகும். 76

நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 77

இரவச்சம்

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ள தூஉ மின்றிக் கெடும். 78

கயமை

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். 79

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 80

—திருவள்ளுவர்

---

2. நாலடியார்

பொறையுடைமை

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ரு ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றும் துணையும் பொறுக்க பொருஅயின்
தூற்ருதே தூர விடல். 1

கல்வி

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர்செறின் வவ்வார்
எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. 2

நட்பிற் பிழை பொறுத்தல்

இன்னு செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னுகப் போற்றிக் கொளல்வேண்டும்-பொன்னெடு
நல்லில் சிதைத்ததீ நாள்தொறும் நாடித்தம்
இல்லத்தி லாக்குத லால். 3

—சமண முனிவர்கள்

---

3. ஏலாதி

பெரியோர்க்கு உரியவை

கொல்லான் கொலேபுரியான் பொய்யான் பிறர்மனேமேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை. 1

நன்மை-தீமைச் சொற்கள் தோன்றுமிடங்கள்

மையேர் தடங்கண் மயிலன்னுய் சாயலே
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளே கடுஞ்சொற் பயனிலசொ ணுன்கும்
மறலேயின் வாயினவா மற்று. 2

விண்ணேர்க்கு வேந்தனுவான்

பொய்யுரையான் வையான் புறங்கூறுன் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்
—எய்யுரையான்
கூந்தன் மயி லன்னுய்! குழீஇயவான் விண்ணேர்க்கு
வேந்தனு மிவ்வுலகம் விட்டு. 3

செல்வராய் வாழ்பவர்

ஊணெடு கூறை யெழுத்தாணி புத்தகம்
பேணெடு மெண்ணு மெழுத்திவை—மாணெடு
கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கீந்தா ரிம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து. 4

மண்ணும் விண்ணும் ஆளத்தக்கவர்

ஐயமே பிச்சை யருந்தவர்க் கூணுடை
ஐயமே யின்றி யறிந்தீந்தான்—வையமும்
வானும் வரிசையாற் ருனளு நாளுமே
யீனமே யின்றி யினிது. 5

—கணிமேதையார்

4. சிறுபஞ்சமூலம்

ஒவ்வொன்றுக்கும் வனப்பு

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல்
—பண்வனப்புக்
கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன் தன்நாடு
வாட்டான் நன்றென்றல் வனப்பு. 1

கல்வியின் பெருமை

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்பமிலேம் பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. 2

அறிவில்லான் தன்மை

பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலு மூவார் நூல்தேற்ருதார்—பாத்தி
புதைத்தாலும் நாருத வித்துள பேதைக்கு
உரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 3

மாதர்க்குரிய சிறப்பு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையும் எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 4

இனிது வாழ்பவர்

புண்பட்டார் போற்றுவர் இல்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார்-கண்கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்தவர்க்கு ஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து. 5

—காரியாசான்

குறிப்புரை

1. திருக்குறள் : அழகிய குறள் வெண்பாக்களினுல் ஆன நூல் என்று பொருள். இத்தொடர் அடையடுத்த கருவியாகு பெயர். இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சார்ந் தது. இதன் ஆசிரியராகிய திருவள்ளுவர் வரலாற்றைப்பற்றியும், வாழ்ந்த காலத்தைப்பற்றியும், அவரது சமயத்தைப்பற்றியும் ஒன்றும் துணிந்து கூற இயலவில்லை. இவர் கி. பி. 2 ஆம் நூற் ருண்டில் வாழ்ந்தவர் என்றும், மயிலையில் பிறந்து மதுரையில் வாழ்ந்தார் என்றும், நெய்தல் தொழிலை மேற்கொண்டிருந்தார் என் றும், ஆராய்ச்சியாளர் உரைப்பர். "நாலுமிரண்டும் சொல்லுக் குறுதி", "பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்பவை போன்ற பழமொழிகளால் இதன் சிறப்பை உணரலாம். பொது மறை, தமிழ்மறை, தெய்வநூல், முப்பால் முதலியன இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர்கள்.

1. வேண்டுதல்-விழைதல். வேண்டாமை-வெறுப்பு. இடும்பை - துன்பம்; பிறவித் துன்பங்களைக் குறிக்கும். அவை தன்னைப் பற்றி வருவன, பிறவுயிர்களைப்பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன என மூன்ரும்.
2. விசும்பு-மேகம் ; இடவாகுபெயர். காண்பு - காண்டல் ; தொழிற் பெயர் ; காண் + பு.
3. இருமை - பிறப்பு, வீடு ஆகிய இரண்டு. அறம்-துறவறம். பிறங்குதல் - உயர்தல்.
4. சிறப்பு-சிறந்த மோட்ச இன்பம். அறத்தினூஉங்கு-அறத்தைக் காட்டிலும் ; இன்னிசையளபெடை.
5. ஒல்லும் வகை - இயலும் திறம். செயல்-செய்க; வியங்கோள்.
6. ஆறு-வழி. அறத்தாறு-பழியஞ்சிப் பகுத்துண்டல் முதலியன. புறத்தாறு - வீட்டை விட்டு வனம்புகும் நிலை. போஒய்- இசைநிறையளபெடை.
7. திண்மை-கற்பு என்னும் கலங்கா நிலை. 'கொண்ட கணவனிற் சிறந்த தெய்வமில்லை' என்று பெற்ரேராலும் பிறராலும் கற்பிக்கப்படுதலால் கற்பு எனப் பெயர் பெற்றது.
8. நிறை-தன் மனத்தைக் கற்பு நெறியில் நிறுத்தல். காப்பே- ஏகாரம் பிரிநிலை. தலை-சிறந்தது.
9. மன்னுயிர்-நிலைபெற்றுள்ள உயிர். தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்குத் தம்மின் இனிது என்று கூட்டுக. மாநிலம்-உரிச்சொற்ரெடர்.
10. சார்பு-துணை. மறத்திற்கும் அஃதே துணை-அதருமத்தை நீக்க அன்பு துணையாகும் என்பதாம்.
11. வேளாண்மை - உதவி. பொருட்டு - நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு. விருந்தோம்பாவிடின் இல்வாழ்க்கை பயனற் றுப்போகும் என்பது கருத்து.

12. ஈரம் - அன்பு. அளைஇ - கலந்து ; சொல்லிசையளபெடை ; வினையெச்சம். செம்பொருள் - தருமம்.

13. நல்லவை-நன்மை பயக்கும் சொற்கள். அல்லவை-பாவங்கள். தேய-குறைய.

14. செய்யாமற் செய்த வுதவி-தனக்கு, முன் எத்தகைய உதவியும் செய்யா திருக்கத் தான் பிறருக்குச் செய்த உதவி. வையகம் - மண்ணுலகம்.

15. நடுவு ஒரீஇ - நடுவு நிலை ஒழிந்து. கெடுவல் - கெட்டுவிடுவேன் ; தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. கெடு-பகுதி ; அல் - தன்மை ஒருமை விகுதி ; வ்-எதிர்கால இடைநிலை. கெடுவல்+ யான் = கெடுவலியான். ஒரீஇ - ஒருவி என்பதன் விகாரம்.

16. பொருள்-உறுதிப்பொருள். காக்க-வியங்கோள்.

17. பணிதல்-அடங்குதல். தகைத்து-சிறப்பினையுடைத்து. செல்வர்க்கே-ஏ பிரிநிலை.

18. ஒறுத்தாரை - தண்டித்தவரை. பொதிந்துவைத்தல் - இடைவிடாது நினைத்தல்.

19. அல்லவை - தருமமல்லாதவை. ஏதம் - துன்பம். படுபாக்கு - உண்டாக்கும் வழி. படு - பகுதி ; பாக்கு; விகுதி ; தொழிற்பெயர்.

20. அஃகாமை - சுருங்காமை. வெஃகாமை - வேண்டாமை.

21. இலன்-வறியன். ஈதல் - வியங்கோள் வினை முற்று

22. ஒப்புரவு-உதவி. கேடு-பொருளின் அழிவு. கோள் தக்கது - கொள்ளுதற்குத் தக்கது.

23. வறியார்-ஒரு பொருளும் இல்லாதவர். குறியெதிர்ப்பை - அளவு குறித்து வாங்கி, வாங்கியவாறே எதிர்கொடுப்பது - குறித்த எதிர்ப்பை; எதிர்ப்பை-தொழிற்பெயர் ; எதிர்+பை.

24. அற்றார் - ஏழைகள். அழிபசி - மிக்க பசி. தீர்த்தல் - தீர்க்க ; வியங்கோள். வைப்புழி - வைக்குமிடம்.

25. ஒன்று-ஒப்பற்றதாக. ஆ-ஆக என்பதன் விகாரம். பொன்றுது-அழியாது.

26. எச்சம்-எஞ்சு பகுதி; அம் விகுதி; எஞ்சியிருத்தல். இசை-புகழ். பெறுஅ-செய்யுளிசை யளபெடை.

27. பெருக்கற்கு-வளர்ப்பதற்கு. ஊன் - உடல். ஊ-பகுதி ; ன் - சாரியை.

28. செய்தவம் - வினைத்தொகை ; செய்யப்படும் தவம். ஈண்டு - இம்மைக்கண்.

29. மழித்தல் - தலைமயிரை எடுத்தல். நீட்டல்-மயிர் வளர்த்தல். உலகம் பழித்தது - தீயவொழுக்கம்.

30. வாய்மை-மெய்ம்மை ; பண்புப் பெயர். சொலல்-கூறுதல்.
31. சினம் தன்னைக் கொல்லுவதாவது, தன்னைக் கெடுக்கும் கடுந் துன்பங்களை எய்துவிக்கும்.
32. நோய்செய்தார் - பிறருக்குத் துன்பமிழைத்தவர். நோய் - பால் பகாவஃறிணைப் பெயர்.
33. நெருநல் - நேற்று. பெருமை-நிலையாமையின் மிகுதி.
34. யார் யார் - அடுக்குத் தொடர். வாய்க்கேட்பினும் - சொல்லக் கேட்பினும்.
35. காமம்-விருப்பு. வெகுளி - வெறுப்பு. மயக்கம் - அறியாமை. நோய் - வினைப்பயன். நாமம் - பெயர்.
36. தகைமை-மதிப்பு. தலைப்பெய்து-கண்டு. சொல்லாட-உரையாட.
37. ஏனையவர்-கல்லாதவர். படித்தவர் மக்களிற் சிறந்தவர் என்பது கருத்து.
38. நன்று-நல்வினை. விளையுங்கால்-பயன் தரும் போது. அல்லல்-துன்பம்.
39. காட்சி-காண்டல். மீக்கூறும்-உயர்வாகப் புகழ்ந்து சொல்லும்.
40. எண்-கணிதம். எழுத்து-இலக்கியம் முதலியன. என்ப, என்னும் இரண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்கள். கண் என்ப, உயர்திணைப் பன்மை வினை.
41. உவப்ப-மகிழுமாறு. உவப்ப, உள்ள-வினையெச்சங்கள்.
42. வாய் - ஆகுபெயர். அரிது-குறிப்பு வினைமுற்று. நுணங்கிய கேள்வி-நுணுக்கமான கேள்வியறிவு.
43. எவ்வது-எந்த வழியால். உறைவது-ஒழுகுவது. எவ்வது-எ, பகுதி. அவ்வது-அ, பகுதி.
44. தம்மின்-தம்மைவிட. தமர்ஆ-உறவினராக. வன்மை-வலிமையுடைய பொருள் ; பண்பாகு பெயர்.
45. இடிப்பாரை-வலியுறுத்தி உறுதிச் சொல் கூறத்தக்க பெரியோரை. ஏமரா-காவலற்ற.
46. ஆக்கம்-ஊதியம். ஊக்கார்-மேற்கொள்ளார் ; வரப்போகும் இலாபத்தை யெதிர்பார்த்து உள்ளதான முதலை அறிவுள்ளவர் இழக்கமாட்டார் என்பது கருத்து.
47. ஆற்றல்-உபாயம். ஆற்றுக்கடை-ஆராய்ந்து செய்யாவிடின் ; கடை விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சம்.
48. நுனிக்கொம்பர்-பின் முன்னாகத்தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. அஃது இறந்து-அவ்வளவினைக் கடந்து. கொம்பர்-போலி. இக்குறட்பா பிறிது மொழிதல் அணி.
49. ஆகும் ஆறு-பொருள் வரும் வழி. கேடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

50. செயின்-எதிர்கால வினையெச்சம். அருவினை-பண்புத்தொகை. கருவியான் ; ஆன்-மூன்றனுருபு.

51. கூம்பும் பருவம்-போர் செய்யாது ஒய்ந்திருக்கும் காலம். கொக்கு ஒக்க-கொக்கு உள்ளது போல. குத்தொக்க-குத்து +ஒக்க.

52. எஞ்சாமை-இடைவெளியின்றி. எஞ்சாமை-எதிர்மறை வினை யெச்சம்.

53. அன்பறிவு-அன்பும் அறிவும். தேற்றம்-கலங்காமை.

54. பற்று-செல்வம் ; ஆகுபெயர்.

55. பொச்சாப்பு-மறதி. இச்செய்யுள் உவமை அணி.

56. ஒறுத்தல்-தண்டித்தல். பைங்கூழ்-பயிர் ; பசுமை+கூழ்.

57 பேஎய்-செய்யுளிசை அளபெடை. இன்னு-வெறுப்பு.

58. உலகியல்-உலகநடை. பொறை-பாரம்.

59. உரம்-வலிமை. வெறுக்கை-மிகுதி. இச்செய்யுள் வேற்றுமை யணி ; முதலில் ஒப்புமைகூறிப் பிறகு வேற்றுமையை உரைப் பது வேற்றுமை அணி.

60. தாளாண்மை - முயற்சி. வேளாண்மை - உபகாரம். வாள் ஆண்மை-வாளை ஆளுதல். ஆண்மை-உபயோகித்தல்.

61. விதி என வாளா விராது மெய்வருந்தி உழைத்தால் முயற்சி பாழாகாது.

62. அறி+கொன்று-அறிவை அழித்து. உழையிருந்தான்-அமைச் சன் (அருகிலுள்ளவன்).

63. ஈன்ருள்-தாய். அமைச்சர் சான்ரேர் பழிக்கும் செயல்களை எந்தக் கேடு நேரிடினும் செய்யக்கூடாது.

64. வினைத்திட்பம் - செயலாற்றுவதில் திண்மை. மனத்திட்பம்-மனவுறுதி.

65. அடுத்தது-அடுத்துள்ள பொருளின் நிறத்தை; ஆகுபெயர். பளிங்கு-படிகம். உவமையணி.

66. விழுப்புண்-முகத்திலும் மார்பிலும் பட்ட புண்; சிறந்த புண்; உரிச்சொற்ருெடர் ; விழுமம்+புண்.

67. நூல் நவில்தொறும்-நூற்பொருளைக் கற்குந்தோறும் ; உவமை யணி.

68. பேதையார் - அறிவில்லாதவர். ஒரீஇ - சொல்லிசையளபெடை. ஒருவிஎன்பது ஒரீஇ என்று விகாரப்பட்டது.

69. நோதக்க-வெறுக்கத்தக்க. கிழமை-உரிமை.

70. சிறுமை-துன்பம். சீர்-புகழ்.

71. புத்தேள்நாடு-சுவர்க்கம். மற்று-வேறு என்னும் பொருளில் வந்தது.

72. கொல்லாநலம்-உயிர்களைக் கொல்லாமையான தருமம்.

73. சால்பு-குணங்களால் நிறைந்திருக்கும் தன்மை; பண்பாடு எனலாம்; சிறப்பு உம்மை. பயத்ததோ-ஓகாரம் அசை.

74. பீடு-பெருமிதம். ஓகாரங்கள் எதிர்மறை.

75. உலகு-ஆகுபெயர். வாழ்வானை-வினையாலணையும் பெயர்.

76. இலம் என்று-ஏழை என்று. நகும்-நகையாடுவாள். அசைஇ-சோம்பி.

77. நற்பொருள் - மெய்ப்பொருள். பொருள் சோர்வு - பொருளின்மை.

73. இரவு-இரந்து நிற்றல். உள்ளுதல்-நினைத்தல். கரவு - இல்லையென மறுத்தல். இரவினும் கரவு கொடிது என்பதாம்.

79. கயவர்-கீழ்மக்கள். மேவன-மேவுவன; விரும்புவனவற்றை; பலவின் பால் வினையாலணையும் பெயர். வஞ்சப்புகழ்ச்சியணி.

30. மறை-இரகசியம். பறை ஒரு வகைத் தோற்கருவி. அறை பறை-வினைத்தொகை.

---

2. நாலடியார்: குறள் வெண்பாக்களாலான நூலுக்குக் "குறள்" எனப் பெயரானாற்போல், நாலடி வெண்பாக்களாலான இந்நூலுக்கு நாலடியார் என்று பெயர் வந்தது. 'ஆர்' சிறப்பு விகுதி. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. சமண முனிவர் பலரால் இயற்றப்பட்டது. காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டு. வேளாண்வேதம், நாலடிநானூறு என்பன இந்நூலின் வேறு பெயர்கள்.

1. விடல் - அல்லீற்று வியங்கோள். தேற்று ஒழுக்கம் - தீயவொழுக்கம்.

2. மற்று - அசை. விச்சை - வித்தை. எச்சம்; எஞ்சு - பகுதி, அம் - விகுதி; வலித்தல் விகாரம்.

3. வீடு, செல்வம் முதலியவற்றைச் சுட்டாலும் தீயை நாள் தோறும் வீட்டிலேயே வைத்துக் கொள்ளுதல் போன்று துன்பம் தரினும் விடத் தகாதவர்களுடன் நட்புக் கொள்ளவேண்டும்.

3. ஏலாதி: இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனாசிரியர் கணிமேதையார் ஆவார். இவரை மாக்காயனார் என்பவருடைய மாணாக்கர் என்பர். கடைச் சங்க காலத்தவர். ஏலம் முதலியன ஒரு பொருளை நறுமணம் கமழும்படி செய்வது போன்று இந்நூலின்கண் கூறப்பட்ட கருத்துக்கள் கடைபிடிக்கப்படுமாயின் மாந்தரின் வாழ்க்கை அனைவராலும் விரும்பப்படும் என்பதாம்.

1. கொல்லான் - தான் உயிரைக் கொல்லாதவன். கொலை புரியான் - பிறர் கொலை செய்தலையும் விரும்பாதவன். சிறியார் இனம் - கீழ்மக்கள் கூட்டம். மறையில்-இரகசியங்களில். மூங்கை- ஊமை.

2. மை ஏர் - மை தீட்டிய அழகான. உணர்ந்தார் - சான்றோர். சாயல் - நல்ல சொற்கள். குறளை - கோள் சொல்லுதல். மறலை - கீழ் மக்கள். மற்று - அசை.

3. வையான் - எவரையும் இகழாதவன். மெய்யுரையான் - பிறர் துன்பத்தை நீக்குவதற்காக நடந்த உண்மையைச் சொல்லா தவன். உள்ளன - தன்னிடம் உள்ள பொருள்களை. எய் உரை யான் - வறுமையைக் கூறுதவன்.

4. வேட்டு - விரும்பி, பேணெடு - விருப்பத்தோடு. எண் - கணக்கு. கூறை - உடை. ஒடு - உடனிகழ்ச்சிப் பொருள்.

5. ஐயம் - சந்தேகம். வரிசை - முறைமை. ஈனம் - குறைவு ஏற்போர்க்கிடுவது ஐயம்; துறவிகள்முதலியவர்க்கிடுவது பிச்சை.

4. **சிறுபஞ்சமூலம்:** இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் ஆகியவை பஞ்சமூலங்களென மருத்துவநூல் கூறும். இந்த வேர்களாலான மருந்து மாந்தர் உடற் பிணிகளைத் தீர்ப்பதுபோல, இந்நூலின்கண் அமைந்துள்ள செய்யுட் களின் ஐந்தைந்து பொருள்களும் தம்மை உணர்பவர் உளநோயைப் போக்கி நன்னெறியினைக் காட்ட வல்லன. ஆதலின் இவ்வாறு பெயர் பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் காரியாசான். இவ ருடைய ஆசிரியர் மாக்காயனர். கடைச் சங்க காலம்.

1. கண்ணேட்டம் - கருணை கூர்ந்து நோக்குதல். காலுக்கு வனப்பு பிறரிடம் யாசிக்கப் போகாமை. எண் - ஆராய்ச்சி. இத் துணையாம் - இத்தகையது என்று துணிந்து கூறுதல். பண் - இசை. கண் வனப்பு, கால் வனப்பு, எண் வனப்பு, பண் வனப்பு இவை நான்கும் நான்காம் வேற்றுமைத் தொகைகள்.

2. நூலைக் கற்றவர் தேவரோடொப்பர்; கல்லாதவர் பூதங் களோடொப்பர். முன் - முதுமைப் பருவம் வருவதற்கு முன்பு. ஆதர் - அறிவில்லாதவர். "தேவரனையர் புலவரும்" என்னும் நான்மணிக்கடிகை ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

3. பூத்தாலும் காயாத மரங்கள் பாதிரி போன்றவை. மூத் தாலும் - ஆண்டுகளால் முதிர்ந்திருந்தாலும். வித்து - விதை. நாருத - முளையாத. உணர்வு செல்லாது - அறிவு தோன்றுது. நாரு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

4. வழக்கு - செலவு. வெருவாமை - பயமுறுத்தாது. வீழ்ந்து - விரும்பி. தேற்றம் - தெளிவு.

5. கண்கெட்டார் கண் - குருடரித்து. கண்பட்டு - கருணை கூர்ந்து.

திருக்குறள்

வினாக்கள்

1. திருக்குறள் என்பதன் பெயர்க்காரணத்தையும் இலக்கணத்தையும் எழுதுக.
2. எவர்க்குப் பிறவித்துன்பங்கள் இல?
3. இல்வாழ்க்கையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" எப்பொழுது?
5. மாநிலத்து மன்னுயிர்க்குத் தம்மினும் இனிது எது?
6. 'மறத்திற்கு மஃதே துணை'—எவ்வாறு?
7. இன்சொல்லின் இலக்கணம் யாது?
8. நன்றியறிதலின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டது?
9. யான் கெடுவல் என்பது எவ்வாறு அறியப்படும்?
10. 'அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து'-விளக்குக.
11. அஃகாமை செல்வத்திற்கு யாது?
12. 'அழுக்காற்றி னல்லவை செய்யார்' ஏன்?
13. ஈகையின் இலக்கணம் யாது?
14 செல்வமுள்ளவர்க்குப் பொருள் வைக்குமிடமாகக் கூறப்பட்டது யாது?
15. வாய்மையின் இலக்கணம் யாது?
16. ஆசிரியர் 'சினங்காக்க' என்று கூறுவதற்குக் காரணம் யாது?
17. நோயின்மை வேண்டுபவர் யாது செயல் வேண்டும்?
18 நிலையாமை பற்றி ஆசிரியர் உரைப்பது யாது?
19. அறிவு எனப்படுவது யாது?
20. அரசன் எத்தகையவனுக இருக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றுர்?
21. மாந்தர்க்கு எவை இரு கண்களாம்?
22. புலவர்களின் தொழில்கள் யாவை?
23. வன்மையுள் எல்லாம் தலை எது?
24. கெடுப்பாரிலாது கெடுபவன் எவன்?
25. அறிஞர் எத்தகைய செயலைப் புரியமாட்டார்கள்?

26. எவர்க்குச் செய்ய இயலாத செயலே இல்லை ?

27. எவரிடம் தெளிவு என்பது இடம் பெற்றிருக்கும் ?

28. 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்' எது போன்றது ?

29. ஊக்கமுடைமையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டது ?

30. பேடி கை வாள் ஆண்மை எதற்கு உவமையாகக் கூறப் பட்டது ?

31. வினைத்தூய்மையின் இன்றியமையாமையை ஆசிரியர் எவ்வாறு வற்புறுத்துகின்றார் ?

32. அடுத்தது காட்டும் பளிங்கு எதற்கு உவமையாகக் கூறப்பட்டது ?

33. பண்புடையாளர் தொடர்பு எத்தகையது ?

34. சூதின் கேடு எவ்வாறு கூறப்பட்டது ?

35. சான்றோர்க்கு அணி எது ? பிணி எது ?

36. தேவரனையர் என்ற குறளில் உள்ள நகைச்சுவையை விளக்குக.

37. நல்குரவின் கொடுமை யாது ?

38. கயவரை அறைபறை என்று கூறக்காரணம் என்ன ?

2. நாலடியார்

1. இந் நூலின் பெயர்க் காரணத்தையும் இலக்கணத்தையும் கூறுக.

2. ஆசிரியர் கல்வியின் சிறப்பை எப்படி விளக்குகின்றார் ?

3. 'விடற்பால ரல்லாரைப் பொன்னுகப் போற்றிக் கொளல் வேண்டும்' ஏன் ?

4. தேற்று ஒழுக்கத்தை ஒருவனிடம் கண்டால் யாது செய்ய வேண்டும் ?

பிரித்துக் கூறுக :

1. வாய்த்தீயில் 2. கோட்படா

3. நல்லில் 4. கலந்திருவர்

இலக்கணக் குறிப்பு வரைக :

1. விடல் 2. தேற்று 3. செறின் 4. கொளல்

3. ஏலாதி

வினக்கள்

1. பெரியார்க்கு உரிய இயல்புகள் யாவை?
2. நன்மை தீமைச் சொற்கள் தோன்றுமிடங்கள் யாவை?
3. தேவர்க்கும் தலைவனுக்கும் தன்மை உடையவன் எவன்?
4. செல்வராய் வாழ்பவர் எவர்?
5. மண்ணும் விண்ணும் ஆளத்தக்கவர் எவர்?
6. ஏலாதி ஆசிரியரைப்பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

பயிற்சி

பொருள் கூறுக: வேட்டல், வரிசை, ஈனம், மறையில், கூறை, மையேர், மறலை.

இலக்கணம் கூறுக: அருந்தவர், ஈந்தவர், விரிந்து, ஆளும்.

4. சிறு பஞ்சமூலம்

வினக்கள்

1. பஞ்சமூலங்கள் எவை?
2. இந் நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. எவ்வெவற்றிற்கு எவ்வெவை வனப்பாகும்?
4. கல்வியின் சிறப்பு எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
5. அறிவிலான் எத்தகையவன்?
6. பெண்டிர்க்குரிய சிறப்புக்கள் யாவை?
7. இனிது வாழ்பவர் எவர்?

III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி

1. சிலப்பதிகாரம்

வழக்குரை காதை

நீர்வார் கண்ணை ; எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்ன செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி

மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகியென்பதென்பெயரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேல் கொற்றங் காண்என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

—இளங்கோவடிகள்

குறிப்புரை

சிலம்பு + அதிகாரம்-சிலம்பால் விளைந்த வரலாற்றினைக் கூறும் நூல் என்பது பொருள். இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. இதனை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் செங்குட்டுவனது இளவல். நெடுஞ்சேரலாதனது இளைய மைந்தர். இளமையில் துறவு பூண்டவர். சமயம் சமணம். காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டு. பண்டைத் தமிழகத்தின் வரலாற்றையறிய இந்நூல் மிகவும் பயன்படுகிறது. இதனை முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் கூறுவர்.

1. நீர்வார் கண்ணை-விளி; நீர் ஒழுகும் கண்களை உடையவளே. மடக்கொடி - பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; உவமையாகுபெயராகவும் கொள்ளலாம்.

எள்ளறு - இகழ்தலில்லாத. புள் - பறவை; புறா. புன்கண் - துன்பம். ஆழி - தேர்க்கால்; தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்றவன் மனுநீதிச் சோழன்.

ஏசாச்சிறப்பு - பழிப்பில்லாப் பெருமை.
பெண்ணணங்கு - தேவதை போன்ற பெண்.
கொற்றம் - அரச நீதி.

அரி - பரல். தேமொ - தேன்போலும் மொழியினை உடையவள்; அன்மொழித்தொகை செவ்வைநல்மொழி - நீதிமொழி. மன்பதை - மக்கள். தென் புலம் - பாண்டிய நாடு. என் முதல் பிழைத்தது - என்னை முதலாகக் கொண்டு தவறுற்றது. கெடுக - வியங்கோள். குலைந்தனள் - முற்றெச்சம். "கணவனைக் காட்டுவதில்லென்று" தாய் தந்தை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுதல் கூடும்; ஆனால் கணவனை இழந்தவர்க்கு அவ்வாறு கூறுதல் இயலாது.

வினாக்கள்

1. சிலப்பதிகார ஆசிரியரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. இதற்குள்ள வேறு பெயர்கள் யாவை ?
3. நீ யார் என்ற அரசனுக்குக் கண்ணகி கூறியன யாவை ?
4. புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன் - இவர்கள் யாவர் ?
5. அரசன் கண்ணகிக்குக் கூறிய விடை யாது ?
6. 'தன் கணவன் கள்வனல்லன்' என்பதைக் கண்ணகி எங்ஙனம் உறுதிப்படுத்தினள் ?
7. மணிகண்ட அரசனது நிலை எங்ஙனம் கூறப்பட்டுள்ளது ?
8. இலக்கணக் குறிப்புக் கூறுக:
மடக்கொடி, தேமொழி, கெடுக, குலைந்தனள்.

2. மணிமேகலை

விழாவறை காதை

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்
பலர்புகழ் மூதூர் பண்புமேம் படீஇய
வோங்குயர் மலயத் தருந்தவன் உரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று.

"மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென"
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்

மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டுஞ்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகிக்
கரந்துரு வெய்திய கடவு ளாரும்

பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்

மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
இடிக்குரல் முழக்கத் திடும்பை செய்திடும
தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டும்

ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
ஏற்றுரி போர்த்த விடியுறு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை

முரசு கடிப்பிகூஉ முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானம் மும்மாரி பொழிக; மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக;
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்

ஆயிரங் கண்ணோன் தன்னோ டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோர் இயல்பின தாகிப்

பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலிற்
றோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்

காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாம முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியு மன்றமும்

பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
கதலிகைக் கொடிங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்;
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறுக

வேறு வேறு சிறப்பின் வேறு வேறு செய்வினை
யாறறி மரபி னறிந்தோர் செய்யுமின்!
தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்

பட்டி மண்டபம் பாங்கறிந் தேறுமின்;
பற்று மாக்கள் தம்முட னாயினுஞ்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளுந்

தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
வொளிறுவான் மறவருந் தேரு மாவுங்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையு நீங்கி

வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

—சீத்தலைச்சாத்தனார்

குறிப்புரை

இஃது, ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. கோவலனுக்கு மாதவியிடத்தில் தோன்றிய மணிமேகலை வரலாற்றைக் கூறுவது. இதனை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருமானவர். சீத்தலை என்பது இவரது ஊரின்

பெயரென்பர். மதுரையில் தானிய வியாபாரஞ் செய்து வந்தவர்; சிறந்த தமிழறிஞர். இவர் காலம் கி. பி. 2ஆம் நூற்ருண்டென்பர். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் இவர் காலத்தவர். பௌத்தம் இவருடைய சமயம் ஆகும்.

1—5 உலகம் - நன்மக்களுடைய ஒழுக்கம்; ஆகுபெயர். மேம்படீஇய - மிகும்பொருட்டு: படீஇய: செப்பிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மலயம் - பொதியமலை. தூங்கு எயில் - ஆகாயத்தில் அசைகின்ற மதில்கள். தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் - ஒரு சோழ அரசன் பெயர். ஆகாயத்தில் அசையும் கோட்டைகளுடன் இருந்து பிறருக்குத் துன்பமியற்றி வந்த அரக்கர்களைச் சோழ அரச னெருவன் அகத்திய முனிவர் சொற்படி கோட்டைகளுடன் அழித்தனன் என்பது ஒரு வரலாறு.

5—10 வான்பதி - சிறந்ததாகிய காவிரிப்பூம்பட்டினம். கவரா - தடுமாறுதல் இல்லாத. கடவார் - பிழையார், தவருர்.

11—15 மெய்த்திறம் - மெய்ம்மையை உணர்த்தும் நூல்வகைகள். வழக்கு - உலகியல். வீடு - முத்தி. தம்துறை போகிய - தம் வழியில் நேர்ந்த. அமையக் கணக்கர் - காலங்களைக் கணக்கிட்டுக் கூறுபவர்; சோதிடர். கரந்து - மறைந்து.

16—20 பாடை-மொழி. ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனுதிபதியார், தூதுவர், சாரணர் என்போராவர்.

எண்பேராயம் - கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்பவர்.

குழீஇ-கூடி; சொல்லிசையளபெடை. கொற்றவன் - முசுகுந்தன் என்னும் அரசன். பூதம் - நாளங்காடிப் பூதம். விழாக்கோள் - விழா நடத்தல்.

21—25 எயிறு - பல். இடிக்குரல் - இடிபோன்ற குரல்; உவமைத் தொகை. தொடுத்த - கட்டிய. மாயிரு ஞாலம் - மிகப் பெரிய உலகம்.

26—30 ஆயிரங்கண்ணோன்-இந்திரன். கால்கொள்கென - தொடங்குக என்று கூற. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதம் இருக்கும் கோயில். மணம்கெழு முரசம்-விழாவை அறிவிப்பதற்குப் பயன்படுத்தும் முரசு; விழா முரசு. ஏற்று உரி-வெற்றி பெற்ற எருதின் தோல். கூற்றுக் கண் விளிக்கும் - இயமனை அழைக்கும். கண்-அசைநிலை.

31—35 கடிப்பிகூஉ-முரசடிக்கும் குறுந்தடியால் அதனை அடித்து. கடிப்பு-முரசு அடிக்கும் சிறிய தடி. கோள்நிலை-கோள்கள் (கிரகங்கள்) நிற்கும் நிலை. திரியா-மாறுபடாத; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தீவகச்சாந்தி-இந்திர விழா.

36—40 நால்வேறு தேவர் - அட்டவசுக்கள், பன்னிரு ஆதித்தர், பதினொரு உருத்திரர், அசுவினி தேவதைகள் இருவர் ஆகிய நான்கு வகைப்பட்ட தேவர்கள். பால் - பகுதி. பால்வேறு தேவர் - பதினெண் கணங்கள். கரிகால் வளவன் நீங்கிய நாள் - கரிகாற் சோழன் பகைவரை வெற்றி கொள்ளுவதற்கு வடதிசை நோக்கிச் சென்ற நாளில்.

41—45 பொன்னகர் - தேவருலகம். வறிது - வறுமையடையும்படி (ஒருவருமில்லாது போகும்படி). தோம்அறு - குற்றமில்லாத. பொலம் - பொன். பாவைவிளக்கு - பதுமை வடிவில் செய்யப் பெற்ற விளக்கு.

46—50 பத்தி - வரிசை. வேதிகை - திண்ணை. தூணம் - தூண். மன்றம் - ஊருக்கு நடுவில் அனைவரும் கூடியிருப்பதோர் பொதுவிடம்.

51—55 காழ் - காம்பு. விலோதம் - கொடி. மதலை - கொடுங்கை. நுதல் விழி நாட்டத்து இறையோன் - நெற்றிக் கண்ணை யுடைய சிவ பெருமான். சதுக்கத்தெய்வம் - சதுக்கப்பூதம்.

56—60 ஆறு அறி மரபின் - நிருத்தம், சிக்கை, வியாகரணம், சோதிடம், சந்தம், கற்பம் என்ற வேதாங்கங்கள் ஆறினையும் உணர்ந்த முறைமையையுடைய. பொதியில் - அம்பலம்.

61—65 ஒட்டிய - சபதம் கூறிய. பட்டி மண்டபம் - விவாத அரங்கு; கலையாராய்ச்சி செய்யுமிடமுமாம். பற்றுமாக்கள் - பகைவர். செற்றம் - விரோதம்; நீண்ட காலம் மறையாத கோபம். கலாம் - சண்டை; கலகம். துருத்தி - ஆற்றிடைக் குறை; திட்டு. துறை - நீர்த்துறை.

66—70 ஒளிறு-விளங்குகின்ற. கண்முரசு - முகத்தையுடைய முரசம். கண் - அடிக்கப்பெறும் முற்பக்கம். பகை - உட்பகை.

71—72 வசி - மழை. வளன் - செல்வம். அகநகர் - உள்நகரம்; அஃதாவது பட்டினப்பாக்கம்.

வினாக்கள்

1. மணிமேகலை இயற்றிய ஆசிரியர் பெயர், காலம், சமயம் இவற்றைக் குறிப்பிடுக.
2. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?

3. "தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்" - இப் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்துக.

4. விண்ணவர் தலைவனை வணங்கி, சோழ அரசன் கூறியது யாது?

5. ஐம்பெருங்குழு, எண்பேராயம்—விளக்குக.

6. இந்திரவிழா நடைபெறுதிருப்பின் நேருந் துன்பங்கள் எவை?

7. முரசறைவோன் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுக.

8. "மன்னன் கரிகால் வளவன் நீங்கிய நாள் இந்நகர் போல்வ தோர் இயல்பினதாகி" - இடஞ்சுட்டி விளக்குக.

---

3. கம்பராமாயணம்

மந்தரை சூழ்ச்சிப் படலம்

[அயோத்தி மன்னன் தசரதன் இராமனுக்கு முடிசூட்ட முடிவு செய்ததையறிந்து கைகேயியின் தாதியாகிய மந்தரை கைகேயியின் மனத்தைக் கலக்கின்ருள். அதனைக் கேட்ட அவள் மந்தரையைப் 'போ'வெனச் சினந்துரைத்தனள்.]

மந்தரை கூற்று

அஞ்சு மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநலிந் தென்னந்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும். 1

மந்தரையின் தீமையுரை

மூத்த வற்குரித் தரசெனு முறைமையி னுலகங்
காத்த மன்னனி லிளையனன் ரேகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்ருல்
மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனே? 2

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதா
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தா
லிறலு றும்படி யியற்றுவ ரிடையரு வின்னல். 3

புரியுந் தன்மக னரசெனிற் பூதல மெல்லா
மெரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றுற்
பரியு நின்குலப் புதல்வற்கு முனக்குமிப் படிமேல்
உரிய தென்னவ னுதவிய வொருபொரு ளல்லால். 4

தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரா
லீண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னேயால்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி. 5

சிந்தை யென்செயத் திகைத்தனை யினிச்சில நாளில்
தம்தம் இன்மையும் எளிமையும் நிற்கொண்டு தவிர்க்க
வுந்தை யன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய். 6

மற்ற நுந்தைக்கு வான்பகை பெரிதுள மறத்தார்
கெற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவில்
கொற்ற மென்பதோன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடச் சுடுதுயர்க் கடல்விழத் துணிந்தாய். 7

கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீ
ருடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கு
மடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள். 8

கைகேயி மனம் மாறுபாடடைதல்

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றுள வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்; 9

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்க மின்மையன் றேவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புகழ் அமுதினைப் பருகின் றதுவே. 10

கைகேயி பரதனுக்கு முடிசூட்ட உபாயம் வேண்டுதல்

அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பினள் நோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்ருள். 11

மந்தரை உபாயம் கூறுதல்

மாழை யொண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் துணைவல்ல னென்றடி தொழுதாள்
தாழு மென்னினி யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு முன்னொரு பெருமகற் காக்குவ னென்ருள். 12

நாடி யொன்றுநன் குரை செய்வ னகுமணி யனையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை
யாடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டுங்
கோடி யென்றன ளுள்ள முங் கோடிய கொடியாள். 13

இருவரங்களின்னவையெனக் கூறுதல்

இருவ ரத்தினு மொன்றினு லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்வ தொன்றினுல் செழுநில மெல்லா
மொருவ ழிப்படு முன்மகற் குபாயமீ தென்ருள். 14

கைகேயி மந்தரையைப் புகழ்தல்

உரைத்த கூனியை யுவந்தனள் உயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
யிரைத்த வேலைசூ ழுலகமென் ஞெருமகற்கீந்தாய்
தரைக்கு நாயகன் தாயினி நீயெனத் தணியா; 15

கைகேயி சபதம்

நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டும்
இன்றெய் தாவெனி லரசன்மு னென்னுயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்ருள். 16

கைகேயி தன்னை அலங்கோலஞ் செய்துகொள்ளுதல்

கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழல் கற்றையில் சொருகிய மாலை
வான வார்மழை நுழைதரு மதிநிற் பாள்போல்
தேன வாவுறு வண்டின மலமரச் சிதைத்தாள். 17

விளையந் தன்புகழ் வல்லியை வேர றுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளை துறந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுதல் அரும்பெறல் திலதமு மழித்தாள். 18

தாவின் மாமணிக் கலன்மற்றுந் தனித்தனிச் சிதறி
நாவி யோதியை நானிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்டகண் ணஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவு திர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப்
புரண்டாள். 19

கைகேயியின் நிலை

நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாம் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கேகயன் தனயை. 20

குறிப்புரை

கம்பரால் இயற்றப்பட்ட இராமனது வரலாற்றினைக் கூறும் நூல் என்று பொருள். நூலாசிரியர் இதற்கு இட்ட பெயர் இராமாவதாரம். கம்பர் தேரழுந்தூரில் உவச்சர் குலத்தில் ஆதித்தன் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றினர். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் காலம் கி பி. 12ஆம் நூற்றாண்டு என்பர். இவரை ஆதரித்தவன் அநபாயன் என்று சிறப்பித்துக் கூறப்படும் இரண்டாம் குலோத்துங்கன் என்னும் சோழ மன்னனாவான். திருவெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளல் தூண்டுதலால் இவர் கம்பராமாயணத்தை இயற்றினர் என்பர்.

1. நஞ்சு-விடம். வஞ்சி - வஞ்சிக்கொடி. தஞ்சம் - பற்றுக்கோடு. தவிரேன் - நீங்கேன். மிசை—ஏழனுருபு. நலிந்து-நலிந்தது; விகாரம்.
2. கடல்வண்ணன் - கடல்போன்ற நிறமுடைய இராமன் மீத்தரும்-மேன்மைதரும். நீள்முடி-பெரிய கிரீடம்
3. அறம்-தருமம். அருந்தவர்-அருமை+தவர்-பண்புத்தொகை. மறம்-கொடுமை. உமை - உம்மை. இறல் - துன்பம்,

4. பரியும் - அன்பு செய்யப்படும். எரியும் சிந்தனை - பொறாமை இப் படிமேல்-இவ்வுலகத்தில்; இ+படிமேல்.

5. தொடர் தர-தொடர்ந்து நிற்க. இருநிதி-மிக்க செல்வம் ஈதி-கொடுப்பாய்; முன்னிலை ஏவல்வினை; ஈ-பகுதி; இ-விகுதி.

6. இன்மை-இல்லாமை. எளிமை-தாழ்வு. உந்தை-மரூஉமொழி; உன்+தந்தை. மாற்றவள் - சக்களத்தி.

7. நுந்தை-உன் தந்தை. வான்பகை-பெரும்பகை. கொற்றம்-வெற்றி. சுடுதுயர்க்கடல்-வினைத்தொகை; துயர்க்கடல்-உருவகம்.

8. கிளர்நீர்-விளங்கும் கடல். கோமைந்தர்-சிறந்த புதல்வர்.

9. தீய மந்தரை-பெயரெச்சத் தொடர். இமையோர்-தேவர். அருந்தவம்; அருமை+தவம்; பண்புத்தொகை.

10. அல்லவர்-அரக்கரல்லாதார். துரக்க-ஏவ. மடமான்-அடை யடுத்த உவமையாகுபெயர். தொல்புகழ்-தொன்மை+புகழ்.

11. கைகயன் அன்னன்-கேகயன் மகளான கைகேயி. இனியை-நல்லவள். விரும்பினள்-முற்றெச்சம். புகலுதி-புகல்; பகுதி, உ-சாரியை; இ-முன்னிலை ஒருமை விகுதி.

12. மாழை-மாவடு. ஒண்கணி-அழகிய கண்ணுடைய கைகேயி. துணை - தோழி.

13. கோடிய - கோணலான. நகுமணி - விளங்கும் இரத்தினம்; வினைத்தொகை. தோடு - பூவிதழ். தார் - மாலை. தொலைவு-மரணம். வென்றி - வெற்றி.

14. ஏழிரு பருவம் - பதினான்கு ஆண்டுகள். பெயர்ந்து - நீங்கி. செழு நிலம் - செழுமை + நிலம். செய்வது - வியங்கோள். ஈது - இது என்பதன் விகாரம்.

15. உவந்தனள்-முற்றெச்சம். நிதியம்-செல்வம். இரைத்த-ஒலித்த. வேலை-கடல். தரை-பூமி. தணியா-மகிழ்ந்து.

16. நளிர் முடி-பெருமையுள்ள கிரீடம். துன்றுதல்-நெருங்குதல்; அடர்த்தியான. பொன்றி-இறந்து. போதி-போ-பகுதி. ஆம்-அசை.

17. குலமலர்-சிறந்த மலர். குப்பை-படுக்கை. வார்குழல்-நீண்ட கூந்தல். அலமர-வருந்தும்படி.

18. புகழ்வல்லி-உருவகம்; வல்லி-கொடி. கிளை-பிரகாசம். மறு-மாசு. அளகம்-முன்தலைமயிர் ; தற்குறிப்பேற்றவணி.

19. தா+இல்+மாமணி-குற்றமற்ற சிறந்த இரத்தினம். ஓதி-கூந்தல். நாவி-கத்தூரி.

20. நவ்வி-மான். நாடக மயில்-ஆடும் மயில். அவ்வை-இலக்குமி. தவ்வை-இலக்குமியின் மூத்தவள். தனயை-மகள்.

வினுக்கள்

1. "கம்ப ராமாயணம்" இதன் ஆசிரியரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. மந்தரையின் தீய உரைகளேத் தொகுத்துக் கூறுக.
3. "நஞ்சுதீர்க்கினும் தீர்கிலாதது நலிந்ததுபோல்"—இத் தொடரை இடஞ்சுட்டி விளக்குக.
4. கைகேயியின் மனம் மாறுபடக் காரணங்கள் யாவை?
5. இராம சரிதத்தை அனைவரும் உணர முடிவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் என்ன?
6. பரதனுக்கு முடிசூட்ட மந்தரை கூறும் உபாயம் யாது?
7. இரு வரங்கள் எவை?
8. கைகேயி தன்னை எவ்வாறு மாற்றிக்கொண்டனள்?
9. கைகேயி செய்த சபதம் யாது?
10. கைகேயியின் நிலையைக் கவி எங்ஙனம் கூறுகிருர்?
11. இலக்கணக் குறிப்புக் கூறுக: ஈதி, சுடுதுயர்க்கடல், துயர்க் கடல், அருந்தவம், விரும்பினன், தணியா.
12. பிரித்து எழுதுக: இப்படி, அருந்தவம், தொல்புகழ், தாவின் மாமணி.

---

4. பெருங்கதை

உதயணன் செங்கோற் சிறப்பு

விளங்கவை நடுவண் வீற்றினி திருந்த
வளங்கெழு தானை வத்தவர் பெருமகன்
வெங்கோல் வேந்தன் வேற்றுநா டிதுவெனத்
தன்கோ லோட்டித் தவற்றி ஞட்டிய
புன்சொற் படுநுகம் புதியவை நீக்கிச்
செங்கோற் செல்வஞ் சிறப்ப வோச்சி
நன்னக ரகத்து நாட்டக வரைப்பினும்
தொன்மையின் வந்த தொல்குடி யெடுப்பிப்
படிறு நீக்கும் படுநுகம் பூண்ட
குடிகட் கெல்லாம் குளிர்ப்பக் கூறித்
திருந்திய சிறப்பிற் றேவ தானமும்
அருந்தவர் பள்ளியு மருகத் தானமும்
திருந்ததொழி லந்தண ரிருந்த விடனும்
தோட்டமும் வாவியுங் கூட்டிய நல்வினை
ஆவணக் கடையு மந்தியுந் தெருவும்
தேவ குலனும் யாவையு மற்றவை
சிதைந்தவை யெல்லாம் புதைந்தவை புதுக்கென்
றிழந்த மாந்தரு மெய்துக தமவெனத்
தழங்குரன் முரசந் தலைத்தலை யறைகெனச்
செல்வப் பெரும்புனன் மருங்கற வைகலும்

நல்கூர் கட்டழ னலிந்துகை யறுப்ப
மானம் வீட லஞ்சித் தானம்
தளராக் கொள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல வுள்ள
இன்மை யுரையா விடுக்க ளூளிரும்

ஊக்கமும் வலியும் வேட்கையும் விழைவும்
மூப்படர்ந் துழக்க முடங்கி னிரும்
யாப்பிணி நன்னலந் தொலைய வசாஅய்த்
தீப்பிணி யுற்றுத் தீரா திரும்
இடுமணன் முற்றத் தின்னியங் கறங்கக்

குடுமிக் கூந்தலு ணறுநெய் நீவி
நல்லவை நாப்பட் பல்சிறப் பயர்ந்து
கொண்டோன் றுறந்து கண்கவிழ்ந் தொழுக
வாழ்த லாற்ருச் சால்பணி மகளிரும்
நிறைபெருங் கோலத்து நெறிமையின் வழாஅ

உறுப்புக்குறை பட்டீ ருட்படப் பிறரும்
வந்தனிர் குறுகி நுங்குறை யுரைத்துத்
துன்ப நீங்க வின்பம் பயப்ப
வேண்டின கொள்ளப் பெறுதிர் நீரென
மாண்ட வீதியொடு மன்ற மெல்லாம்

ஆர்குரன் முரச மோவா ததிரக்
கோடி முற்றி நாடொறும் வருவன
காடு நகரமு நளிமலை முட்டமும்
உள்கண் டமைந்த கொள்குறி நுகும்பிற்
கணக்கருந் திணைகளு மமைக்குமுறை பிழையாது

வாயிற் செல்வங் கோயிலுட் கொணரப்
போரின் வாழ்நரும் புலத்தின் வாழ்நரும்
தாரின் வாழ்நரும் தவாஅப் பண்டத்துப்
பயத்தின் வாழ்நரும் படியிற் றிரியா
ஓத்தின் வாழ்நரு மொழுக்கின் வாழ்நரும்

யாத்த சிறப்பக் கயிற்றின் வாழ்நரும்
உயர்ந்தோர் தலையா விழிந்தோ ரீரு
யாவர்க் காயினுந் தீதொன் றின்றி
மறனி னெருங்கி நெறிமையி னொரீஇக்
கூற்றுயிர் கோடலு மாற்ருு தாக

உட்குறு செங்கோ லூறின்று நடப்ப
யாறுந் தொட்டவு மூறுவன வொழுகக்

காடும் புறவுங் கவின்றுவளஞ் சிறப்பப்
பொய்யா மாரித் தாகி வைகலும்
தண்டா வின்பந் தலைத்தலை சிறப்ப

விண்டோய் வெற்பின் விளைகுர லேனற்
குறவ ரெறிந்த கோலக் குளிர்மணி
முல்லை தலையணிந்த முஞ்ஞை வேலிக்
கொல்லை வாயிற் குப்பையுள் வீழவும்
புன்புல வுழவர் படைமிளிர்த் திட்ட

ஒண்கதிர்த் திருமணியங்கண் யாணர்
மருத மகளிர் வண்டலுள் வீழவும்
வயலோ ரெடுத்த கௌவைக் கிருங்கழிக்
கயல்கொள் பொலம்புள் கதுமென வெருவமும்
திணைவிராய் மணந்து திருவிழை தகைத்தாக்

களவு மரம்புங் கனவினு மின்றி
விளைத லோவா வியன்பெரு நாட்டொடு
பட்டி நியமம் பதிமுறை யிரீஇ
முட்டின்றி நிரம்பிய காலை யொட்டாப்
பகைப்புலந் தேயப் பல்களிற் றியானையொடு

தகைப்பெருந் தம்பியர் தலைச்சென் றகற்ற
ஆணை கேட்ட வகலிடத் துயிர்கட்
கேம வெண்குடை யின்னிழற் பரப்பி

(உதயணன் செயல்)

வீணை வேந்தன் வியனுடு கெழீஇ
மகத மன்னவன் ருனையொடு வந்த

பகையடு மறவரைப் பதிவயிற் போக்கி
அருவிலை நன்கல மமைந்தவை பிறவும்
தருசகன் கொள்கெனத் தமரொடு போக்கிப்
பட்ட மெய்திய பதுமா பதியொடு
முட்டில் செல்வத்து முனிதல் செல்லான்

மட்டுவிளை கோதையொடு மகிழ்ந்துவிளை யாடிச்
செங்கதிர்ச் செல்வ னெழுச்சியும் பாடும்
திங்களு நாளுந் தெளிதல் செல்லான்
அந்தளிர்க் கோதையை முந்துதா னெய்திய
இன்பக் கிழவ னிடவகை யன்றி

மன்பெரு மகதன் கோயினுள் வான்றோய்
கன்னி மாடத்துப் பன்முறை யவளோடு

கழிந்தவும் பிறவுங் கட்டுரை மொழிந்து

....

பெருநகர் வரைப்பிற் றிருமணி யிருந்து
தீயன நீக்கித் திருவிழை தகைத்தாப்
பாயினன் மாதோ பயந்தநன் குடென்.

—கொங்குவேளிர்.

பெருங்கதை : பெரிய கதை என்பது பொருள். இது கவிஞர் பெருமானாகிய கொங்கு வேளிர் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு தொடர்நிலைச் செய்யுள். இவரைக் கொங்குவேள், கொங்கவேள் என்றும் கூறுவர். இந்நூல் குருகுலத்தைச் சார்ந்த கௌசாம்பி மன்னன் உதயணன் வரலாற்றைக் கூறுவது. ப்ருகத்கதா என்னும் பைசாச பாஷையில் உள்ள நூலை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டது என்பர். இவ்வாசிரியர் சைன சமயத்தைச் சார்ந்தவர். வேளாள மரபு. இவர் பிறப்பிடம் கொங்கு நாட்டைச் சேர்ந்த விசயமங்கலம். இப்பகுதி வத்தவ காண்டத்திலுள்ளது.

[உதயணன், போரில் தனக்கு உதவிய அனைவருக்கும் வேண்டியவற்றைக் கொடுத்தனுப்பிவிட்டுக் குடி மக்களின் குறையைத் தீர்த்துத் தன்னுடைய நாட்டைப் பரவச் செய்தமை இப் பகுதியில் கூறப்படுகிறது.]

1— 5 விளங்கவை - வினைத்தொகை. தானை - சேனை. வத்தவர் பெருமகன் - உதயணன். வெங்கோல் வேந்தன் - கொடுங்கோலனாகிய ஆருணியரசன். தன்கோல் - தன் என்பது ஆருணியைக் குறிக்கும். தவற்றின் நாட்டிய - அநீதியால் ஆருணி நிலை நாட்டின. படுநுகம் - பெரிய இராச்சிய பாரம்.

6—10 படிறு - குற்றம். தொன்மை... எடுப்பி - பரம்பரையில காரியம் பார்த்து வந்த பழைய குடி மக்களை உயர்த்தி.

11—15 தேவதானம் - தேவாலயம். அருந்தவர் பள்ளி - தவசிகளின் ஆசிரமம். அருகத்தானம் - அருகதேவர் ஆலயம். அந்தி - நாற்சந்தி.

16—20 தேவகுலன் – கோவில். தழங்குரல் - தழங்கு+குரல். தம்- தமக்கு உரியவற்றை. அறைக - வியங்கோள் வினை முற்று. மருங்கு அற-உங்களிடத்தினின்றும் அறுதலால்

21—25 கட்டழல் - வறுமை. கை - செயல். வீடல் - விடல் என்ப தன் விகாரம். தானம் - நிலை. சால்பு - ஆசை. கன்னி காமம் - பெண்களின் உள்ளக்கிடக்கை.

26—30 மூப்பு - முதுமை. முடங்கினிர் - உடல் வளைந்தவர். அசாஅய் - மெலிந்து. தீராதீர் - தீராப்பிணியுடையவரும். இடுமணல் - கொண்டு ;வந்திட்ட மணல். இன்னியம் - இனிய வாத்தியம்.

31—35 குடுமி - உச்சி. நறு நெய் - வாச வெண்ணெய். கண்கவின் தொழுக - நிமிர்ந்து பாராதிருப்ப.

36—40 வழாஅ - வழுவி. குறை - ஆகவேண்டிய காரியம். மாண்ட வீதி - பெரிய வீதி. மன்றம் - பொது இடம்.

41—45 ஆர்குரல் முரசம் - மிக்க முழக்கத்தை உடைய முரசு. கோடி - கோடி பொருள். நளிமலை முட்டம் - செறிந்த மலைப்பக்கங்களில் வழி முட்டாயிருக்கும் இடங்கள். நுகும்பு - இங்கே பனையோலையைக் குறிக்கும்.

46—50 போரின் வாழ்நர் - படைகள். புலத்தின் வாழ்நர் - வேளாளர்; குடிமக்கள். தாரின் வாழ்நர் - நெய்தற்றொழிலோர், தவாஅப் பண்டத்துப் பயத்தின் வாழ்நர் - வணிகர். படியிற்றிரியர் ஓத்தின் வாழ்நர் - அந்தணர்.

51—60 கயிறு - நூல். ஒன்றின்றி - சிறிதுமின்றி. ஒரீஇ - விட்டு. கூற்று - இயமன். ஊறு - துன்பம். வைகல் - நாள் தோறும். கவின்று - தழைத்து; அழகுபெற்று. புறவு - சிறு காடு. தலைத்தலை - இடந்தோறும். சிறப்ப - மிக.

61—65 விண்தோய் வானளாவிய. குரல் - கதிர். ஏனற்குறவர் - தினைப்புனம் காக்கும் குறவர். முஞ்ஞை - முன்னை. புன்புலம் - முல்லை நிலம். படை - கலப்பை. மிளிர்த்திட்ட - கீழ் மேலாக்கின.

66—70 ஒள் கதிர் - சுடர் விட்டுப் பிரகாசிக்கும். வண்டல் - விளையாடுமிடம். கௌவை - ஆரவாரம். பொலம்புள் - பொன் வாய்ப் பறவை; சிச்சிலிப் பறவை. திணை - ஐவகை நிலங்கள். விராய் - கலந்து. திருவிழை தகைத்தா - இலக்குமியும் விரும்பும் தன்மை உடையதாக.

71—75 அரம்பு - குறும்பு. விளைதல் ஓவா - விளைதலை விட்டு நீங்காத. வியன் - மிகப்பெரிய நாடு. நியமம் - கோவில். முட்டு - தடங்கல். ஒட்டாப் பகைப்புலம் - நேசியாத பகை நிலத்தவர்.

76—80 தம்பியர் - பிங்கலகடகர். ஆணைகேட்ட - தன் கட்டளைப்படி நடந்த. ஏமம் - பாது காவல்; இன்பம். வீணை வேந்தன் - உதயணன். வியல் - அகலம். மகத மன்னன்-தருசகன்.

71—85 மறவர் - சேனாபதிகள். பதிவயின் - அவர்கள் நகரத்திற்கு. நன்கலன் - சிறந்த ஆபரணம். தமர் - உறவினர். பட்டம்- அரசமாதேவி என்னும் பட்டம். முனிதல் செல்லான் - வெறுனாகி.

86—90 எழுச்சி - உதயம். தெளிதல் செல்லான் - தெளியானாகி, கோதை - பதுமாவதி.

91—98 பாயினன் - பரப்பினான். பயந்த - பயனுற்ற.

வினாக்கள்

1. பெருங்கதை நூலைப்பற்றியும் நூலாசிரியரைப்பற்றியும் குறிப்பு வரைக.
2. உதயணன் எவ்வாறு முரசறைவித்தான் ?
3. மக்கள் குறைகளை நீக்க உதயணன் எவ்வாறு வழிவகை செய்தான் ?
4. உதயணன் எவரெவர்க்குத் துன்பம் நேராதபடி பாது காத்தான் ?
5. உதயணன் ஆட்சியில் நாடு எவ்வாறிருந்தது ?
6. திணைமயக்கங்களை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார் ?
7. தருசகன் என்பவன் யாவன் ? அவன் உதயணனுக்குச் செய்த உதவி யாது ?
8. உதயணன் இன்ப வாழ்க்கை எவ்வாறு இருந்தது ?
9. உதயணன் தன் தேயத்தை எவ்வாறு வளமுறச்செய்து பரப்பினான் ? சுருக்கி வரைக.

---

5. வில்லி பாரதம்

கிருட்டிணன் தூது

தருமன் கண்ணனுக்குத் தூது பேசும் வகையினை எடுத்துக் கூறுதல்

"நீ தூது நடந்தருளி எமது நினைவு
அவர்க் குரைத்தால் நினைவின் வண்ணம்
தாதூதி அளிமுரலுந் தன்பதியுந்
தாயமுந்தான் தாரானாகில்
மீதூது வளைக்குலமும் வலம்புரியும்
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவன் ; இது வசையும் அன்றே ? 1

முந்தூர்வெம் பணிக்கொடி யோன் மூதூரில்
நடந்துழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புன்னாட்டின் திறம்வேண்டு
நாடொன்று நல்கான் ஆகில்

ஐந்தூர் வேண்டு, அவையிலெனில் ஐந்திலம்வேண்டு
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு;
சிந்தூரத் திலகநுதல் சிந்தூரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே! 2

தருமனது வார்த்தையைக் கேட்டு வீமன் வெறுப்படைதல்

மூத்தோன்மற்று இவையுரைப்ப இளையான்வெஞ்
சினம்மனத்தில் மூள மூள
நாத்தோமில் உரைபதறக் கதுமெனவுற்று
எழுந்திறைஞ்சி, ஞால மெல்லாம்
பூத்தோனே! பூந்தவிசில் பூவைபுணர்
மணிமார்பா! புன்மை யாவும்
தீர்த்தோனே! ஊனமில்லான் மானமில்லாது
உரைப்பதற்கு என் செய்வது? என்ருன். 3

வீமன் தருமனைப் பார்த்து வெகுண்டு பேசுதல்

விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
முறையிடுநாள் 'வெகுளேல்!' என்று
மரபினுக்கும் நமக்குமுலகு உள்ளளவுந்
தீராத வசையே கண்டாய்;
எரிதழற்கா னகமகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்ருய்!
அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய்!
உனதருளுக்கு அஞ்சினேனே. 4

"காணுள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தாணுளுந் தரணியெலாம் ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே;
மேணுள் நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெருத வண்ணம்
வாணுள வானவர்கோன் தன்பதமற்று
அவன் தனக்கே வழங்குவேனே. 5

வீமன் கண்ணனை நோக்கிக் கூறுதல்

“போர் முடித்தான் அமர்பொருது; புலம்புறுசொல்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார் முடித்தான்; இளையோர்முன் கழறியவெஞ்
சினம்முடித்தான்; கடவுட் கங்கை
நீர்முடித்தான் இரவொழித்த நீயறியப்
பூதலத்தின் நிலைநின்று ஓங்கும்
போர்முடித்தான்; இப்படியே யார் முடித்தார்?
இவனுடனே பிறப்ப தேநான்!” 6

அணிந்து வருஞ் சமரிலெதிர்ந்து அரவுயர்த்தோ
னுடன் அரசர் உடலமெல்லாம்
துணித்திரண்டு படப்பொருது தொல்லையுலகு
அரசாளத் துணிவது அல்லால்
தணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்
தானின்னந் தனித்தூது ஏவிப்
பணிந்திரண்டு புவி பெற்றுண்டு இருப்பதற்கே
துணிகின்றான் பட்டபாடே. 7

தருமன் வீமனைச் சமாதானப்படுத்துதல்

பரிவுடன்மற்று இவைகூறும் பவனகுமா
ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
‘குருகுலத்தோர் போரேறே! குற்றமது
பார்க்குங்காற் சுற்றமில்லை;
ஒரு குலத்திற் பிறந்தார்களுடன்வாழும்
வாழ்வினைப்போல் உறுதியுண்டோ?
இருவருக்கும் வசையன்றோ இரு நிலங்கா
ரணமாக எதிர்ப்பது?” என்றான். 8

வீமன் தருமனிடங் கூறுதல்

‘சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா;

வாடுகின்ற மடப்பாவை தன்வரமும்
என்வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது
விடுக இனிக் கொற்ற வேந்தே! 9

மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வடிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர் பொருந் திறங்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள் விரித்த குழல் கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன் குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே!' 10

அருச்சுனன் தருமனையும் கண்ணனையும் பார்த்துக் கூறுதல்

பொன்னாருந் திகிரியினான் போனாலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னாலு மவன்கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் தோன்றா தன்றே?
எந்நாளும் உவர் நிலத்தில் என் முளைவித்
திடினும்விளை வெய்தி டாது;
பன்னாகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும்,
விடமொழியப் பயன்கொ டாதே. 11

[பிறகு கண்ணன் அத்தினாபுரிக்குத் தூது செல்கிறார்.]

—வில்லிபுத்தூரார்

குறிப்புரை

இதன் ஆகிரியர் வில்லிபுத்தூரார். இவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் வீரராகவாச்சாரியரென்ற வைணவ அந்தணருக்குப் புதல்வராகத் தோன்றினார். வக்கபாகை வரபதி யாட்கொண்டான் என்ற அரசனால் ஆதரிக்கப்பட்டவர். சந்தம் பாடுவதில் சமர்த்தர். வடமொழி, தமிழ் இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர். கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இவர் காலத்தில் வாழ்ந்தவர்.

1. தாது-மகரந்தம். தாயகம்-தாயபாகம். பொருது-சண்டையிட்டு. காலன்-இயமன், மாதூதர்-உரிச்சொற்றொடர். வசை-பழி-

2. துமை + ஊர் = மூதூர். பணி - பாம்பு. நந்து - சங்கு. அடுதல்—கொல்லுதல். மருப்பு - தந்தம். ஒசித்த - ஒடித்த. இலம் - இல்லம். நுதல் - நெற்றி. புனல் நாடு - நீர்வளம் மிக்க நாடு.

3. வெஞ்சினம் - பண்புத்தொகை. மூள மூள - அடுக்குத் தொடர். தோம்+இல் குற்றமற்ற. கதுமென - விரைவாக. ஞாலம் - உலகம். தவிசு - இருக்கை. புன்மை - குற்றம். ஊனம் - குறைவு.

4. விரிகுழல் - வினைத்தொகை. பைந்தொடி - பசுமை + தொடி. தொடி - வளை. வேந்து+அவை=வேத்தவை - அரச சபை. எரிதழல்-வினைத்தொகை. இளையா நிற்றல்-பின் வாங்குதல். அரவுயர்த்தோன் - துரியோதனன். முரசுயர்த்தோன் - தருமன்.

5. கான்-காடு. கண்ணிலா அருளிலி-கண்ணற்ற அருளில்லாத திருதராட்டிரன். வானவர்கோன்-தேவர்களின் தலைவன்; இந்திரன்.

6. கழறிய-கூறிய. வெஞ்சினம்-சபதம். கங்கை நீர் முடித்தான். சிவபெருமான்.

7. அரவு-பாம்பு. தணிந்து-பணிந்து. கிளை-சுற்றம். இரந்து-யாசித்து.

8. பவன குமாரன்-வாயு மைந்தன்; வீமன். எதிர்ப்பது-போரிடுவது. இருநிலம்-பெரிய பூமி.

9. சுரர்-தேவர். சுருதி வேதம். மடப்பாவை-திரௌபதி; உவமையாகுபெயர். விடுக-வியங்கோள்.

10. மகவான்-இந்திரன்; அருச்சுனன் இந்திரன் மகன். பொருந்திறம்-போரிடும் ஆற்றல். சிலை-வில். மறம்-வலிமை.

11. திகிரி - சக்ராயுதம். பொறைவேந்தன் - பொறுமையுள்ள அரசன்; தருமன். பன்னகம்-பாம்பு; பல்+நாகம். உவர்நிலம்-களர் பூமி. வேற்றுப்பொருள் வைப்பணி.

வினாக்கள்

1. "வில்லி பாரதம்" ஆசிரியர் பெயர், காலம் இவற்றைக் குறிப்பிடுக.
2. கண்ணன், துரியோதனனிடம் தூது சென்று யாது கூற வேண்டுமெனத் தருமன் கூறினான்?
3. வீமன், தருமனை நோக்கி வெகுண்டு கூறுவன யாவை?
4. கண்ணனிடம் வீமன் கூறியவை எவை?
5. தருமன் வீமனை எங்ஙனம் சமாதானப்படுத்தினான்?
6. தான் தூது செல்ல வேண்டுமென வீமன் கூறுவது ஏன்?
7. தூது செல்லுவது பற்றி அருச்சுனன் கருத்து யாது?
8. "அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோய் உன தருளுக் கஞ்சினேனே," "கெடுமதி கண்தோன்றுதன்றே", "இருவருக்கும் வசையன்றோ இருநிலங் காரணமாக எதிர்ப்பது" இத்தொடர்களை இடஞ்சுட்டி விளக்குக.

9. "எந்நாளும் உவர் நிலத்தில் என்முளைவித் திடினும் விளை, வெய்திடாது," "பன்னகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப் பயன்கொடாதே" — இவ்வுவமைகளின் பொருள்களை விளக்குக.

10. பொருள் கூறுக: அளி, தாயம், வளை, சிந்தூரம், அரவு, கண்ணிலா அருளிலி, கங்கை நீர் முடித்தான், திகிரி.

11. பிரித்தெழுதுக: தாதூதி, மூதூர், தோமில், வேத்தவை மடப்பாவை, பன்னகம்.

---

6. திருத்தொண்டர் புராணம்

இளையான்குடி மாற நாயனர் புராணம்

இளையான்குடிப்பதி மாறனர்

அம்பொன் நீடிய அம்ப லத்தினில்
ஆடு வார் அடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர்
சால்பின் மேன்மை தரித்துள்ளார்
நம்பு வாய்மையின் நீடு சூத்திர
நற்கு லஞ்செய் தவத்தினல்
இம்பர் ஞாலம் விளக்கி னரிளை
யான்கு டிப்பதி மாறனர். 1

மாறனர் சிவ பக்தியும் அடியார் தொண்டும்

ஏரின் மல்கு வளத்தி னல்வரும்
எல்லை யில்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி
யார் திறத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடு பயன் கொள்வார் 2

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும்
நித்த மாகிய பத்திமுன்
கூர வந்ததெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈர மென்மது ரப்ப தம்பரி
தெய்வ முன்னுரை செய்தபின்; 3

கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கிய
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலுவி தத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின்
அமுது செய்ய அளித்துளார். 4

செல்வ நிலையும் வறுமையின் வரவும்

ஆளு நாயகர் அன்பரானவர்
அளவி லாருளம் மகிழவே
நாளு நாளு நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்பரப்பு
நெருங்கு செல்வம் நிலாவியெண்
டோளி னாரள கைக்கி ருத்திய
தோழ னாரென வாழுநாள். 5

செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும்
வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாடொறு மாறிவந்(து)
ஒல்லை யில்வறு மைப்ப தம்புக
உன்னினார் தில்லை மன்னினார். 6

திருப்பணிக்கொள்கையில் முதிர்ச்சி

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல்
இன்றி உள்ளன மாறியுந்
தன்னை மாறி யிருக்க வுள்ள
கடன்க டக்கன கொண்டுபின்
முன்னை மாறி றிருப்ப ணிக்கண்
முதிர்ந்த கொள்கைய ராயினர். 7

இறைவன் வெளிப்படல்

மற்ற வர்செயல் இன்ன தன்மைய
தாக மாலய ஞனவக்
கொற்ற வேனமு மன்ன முந்தெரி
யாத கொள்கைய ராயினர்
பெற்ற மூர்வது மின்றி நீடிய
பேதை யாளுட னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு
ஞால முய்ந்திட நண்ணினர் 8

விருந்தெதிர் கொள்ளுதல்

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். 9

மாறனார் மனைவியை நோக்கிக் கூறியவை

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்(து)
ஆர இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்என்று 10

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென 11

மனைவியார் கூறிய மாற்றம்

மா து கூறுவாள் மற்றொன் றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போ தும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீ து செய்வினை யேற்கென் செயலென் று 12

செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்(று)
அல்ல தொன் றறியேனென் றயர்வுற 13

கேட்டவர் வயலிடம் நோக்கிச் செல்லல்

மற்ற மாற்ற மனைவியார் கூறுமுன்
பெற்ற செல்வ மெனப்பெரி துண்மகிழ்ந்(து)
உற்ற காதலி னுலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 14

இருளில் மாறனுர் செல்லுதல்

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்(து)
அருகு நாப்பண் அறிவருங் கங்குருன்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்(டு)
உருகு கின்றது போன்ற துலகெலாம். 15

எண் னு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன் றிமுன் றேய்ந்திடில்
வண்ண நீடிய மைக்குழும் பாமென் று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து 16

உள் ள மன்பு கொண் டுக்கவோர் பேரிடாக்
கொள் ள முன் கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினர்
வள் ள லார் இளை யான்குடி மாறனுர். 17

நெல் முளையுடன் மீளுதல்

காலி னுற்றட விச்சென் று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 18

திருவமுது அமைத்தல்

வந்தபின் மனைவி யாரும்
　　வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற்
　　சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழ லடுப்பின் மூட்ட
　　விறகில்லை என்ன மேலோர்
அந்தமின் மனையின் நீடும்
　　அலக்கினை அறுத்து வீழ்த்தார். 19

முறித்தவை அடுப்பின் மாட்டி
　　முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி
　　வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி
　　மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கனி என்செய் கோமென்
　　றிறைஞ்சினர் கணவ னுரை. 20

வழிவரு மிளைப்பி னோடும்
　　வருத்திய பசியி னாலே
அழிவுரும் ஐயன் என்னும்
　　அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிறம் பாத புன்செய்
　　குறும்பயர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
　　பறித்தவை கறிக்கு நல்க. 21

மனைவியார் கொழுநர் தந்த
　　மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
　　புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினில் வேறு வேறு
　　கறியமு தாக்கிப் பண்டை
நினைவினற் குறையை நேர்ந்து
　　திருவமுது அமைத்து நின்று 22

வந்தவர் துயிலைப் போக்குதல்

கணவனார் தம்மை நோக்கிக்
கறியமு தான காட்டி
இணையிலா தவரை ஈண்ட
அமுதுசெய் விப்போம் என்ன
உணர்வினால் உணர வொண்ணா
ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங்(கு)
அவர் துயில் அகற்ற லுற்றார். 23

சோதியாய்த் தோன்றல்

"அழுந்திய விடரு ணீங்கி
அடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட
அமுதுசெய் தருள்க" வென்று
தொழும்பனா ருரைத்த போதிற்
சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந்
தொண்டருந் திகைத்து நின்றார். 24

இறைவன் அருள்புரிதல்

மாலயற் கரிய நாதன்
வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச்
சங்கரன் றான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலா டன்னோ
டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த
திருத்தொண்டர் தம்மை நோக்கி 25

அன்பனே அன்பர் பூசை
அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரு முலகம் எய்தி
இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி
மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருப்பீ ராமென்(று)
அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான். 26

—சேக்கிழார்

திருத்தொண்டர் புராணம் :

புராணம் என்ற சொல்லுக்குப் பழைய வரலாறு என்பது பொருள். சிவபெருமானின் தொண்டர்களின் வரலாறுகளை எடுத்துரைக்கும் நூல் என்பது பொருள். இது பெரிய புராணம் என்று வழங்கப்படுகிறது. இதில் 63 தனியடியார்களைப் பற்றியும், 9 தொகையடியார்களைப் பற்றியும் வரலாறு சொல்லப்பட்டுள்ளது. அவ்வடியார்களில் ஒருவர் இளையான்குடி மாறனார். இதனாசிரியர் சேக்கிழார். இவர் தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். இவர் குலோத்துங்க மன்னனை நல்வழிபபடுத்த இந்நூலை இயற்றினார் என்பர். இவர் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

1. அம்பொன் நீடிய அம்பலம் - தில்லை நகரிலுள்ள பொன்னம்பலம். தம்பிரான் - சிவபெருமான்.

2. மல்குவளம் - பெருகும் வளம்; உழவுச் செல்வம்.

3 & 4. என்பு ஆரம் புனைந்த ஐயர் - எலும்பு மாலையணிந்த சிவபெருமான். ஈரம் - அன்பு. மண்டு காதல் - மிக்க அன்பு. ஆதனம் - இருக்கை. உண்டி திறத்தினில் அறுசுவை பெற்ற நால் வகை உண்டிகள்.

5. ஆளும் நாயகர் - உலகையாளும் தலைவர் ; சிவபெருமான். நாளும்நாளும் - அடுக்குத்தொடர்.

6. அல்லல் - துன்பம். நல்குரவு-வறுமை. மல்லல் - வளம். மன்னுதல் - நெருங்குதல்.

7. மனம் சுருங்குதல் - உளம் வருந்துதல் ; தொழிற்பெயர். திருப்பணி - தெய்வப்பணி.

8. பெற்றம் - காளை. பேதை - பார்வதி. கொடு - செய்யுள் விகாரம். ஞாலம் - உலகு. நண்ணினார் - வந்தடைந்தார்.

9. வைகி - வசித்து.

10. தபோதனர் - தவத்தையே தனமாக உடையவர். தாரம் - மனைவி.

11. இலை - இல்லை என்பதன் விகாரம். இமக்குலக்கொடி - பார்வதி. இன்னடிசில் - இனிய உணவு. தகவுற - பொருத்தமாக.

12. போமிடம் - போகுமிடம். செயல் - செய்வது.

13. மல்லநீர்முளை - வளப்பம் மிக்க நீரில் ஊறிய செந்நெல் முளை. அயர்வு - சோர்வு.

14. ஒருப்படுதல் - ஒப்புக்கொள்ளுதல்.

15. பெருகுவானம் - வினைத்தொகை. கங்குல் - இரவு ; எங்கும் இருள் கடுமையாகச் சூழ்ந்திருந்தது.

16. துண் - ஒலிக்குறிப்பு. நண்ணல் - செல்லுதல்.

17. புள்ளுறங்கும் வயல்-வயல் எங்கும் அமைதியாக உள்ளது. பறவைகளும் அமைதியாக உறங்குகின்றன.

18. சாலி-ஒருவகை நெல் (சம்பா). மேல்-தலையின் மேல்.

19. அலக்கு-தூலம் (உத்தரம்).

20. செய்கோம் - செய்வோம். இறைஞ்சினுர் - வேண்டினுர்.

21. வழிவரு களைப்பு-வழி நடந்த களைப்பு. அழிவுறும்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

22. கொழுநர்-கணவர். புனல்-நீர். புனிதம்-தூய தன்மை.

23. இணையிலாதவர் - தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்.

24. தொழும்பனுர்-தொண்டர். சோதி-ஒளி.

25. மால் - திருமால். அயன் - பிரமன். இடபவாகனனுய் - காளையின்மீது ஊர்ந்து.

26. எவர்க்கும் மிக்கான் - எல்லாரிலும் சிறந்தவன். பெரு உலகம் - திருக்கைலாயம். நிதியம் - செல்லம். ஏவல்-ஏவு + அல் கட்டளை ; தொழிற்பெயர்.

வினுக்கள்

1. பெரிய புராணத்தின் ஆசிரியரைப்பற்றியும், நூலைப்பற்றியும் குறிப்பு வரைக.

2. மாறனுரின் சிவபக்திச் சிறப்பை விளக்கி யெழுதுக.

3. மாறனுர் அடியார்களுக்குச் செய்யும் தொண்டினைச் சுருக்கி வரைக.

4. மாறனுரின் செல்வ நிலையையும் வறுமையின் வரவையும் ஆசிரியர் எங்ஙனம் வருணித்துள்ளார் ?

5. விருந்தினரைக் கண்டு மாறனுர் மனைவியிடம் வினவியது யாது ? அவர் உரைத்த பதில் யாது ?

6. விருந்தினராக வந்த பெருமானுக்கு மாறனுர் அடிசில் சமைக்க யாது செய்தார் ?

7. மாறனுர் அடியார்க்கு விருந்தளித்த முறையை 20 வரிகளில் எழுதுக.

8. உலகை இருள் சூழ்ந்ததை ஆசிரியர் எங்ஙனம் வருணித்துள்ளார் ?

9. கறியமுது சமைக்க வினவியதையும் மாறனுர் செய்ததையும் எழுதுக.

10. இறைவன் மாறனுர்க்கு எவ்வாறு அருள் புரிந்தார் ?

7. பாஞ்சாலி சபதம்

திருதராட்டிரன் விதுரனைத் தூதனுப்புதல்

திருதராட்டிரன்

தன் மகனிடம் கூறியது

"விதிசெய்யும் விளைவி னுக்கே—இங்கு
வேறுசெய் வார்புவி மீதுளரோ?
மதிசெறி விதுரன் அன்றே—இது
வருந்திறன் அறிந்துமுன் எனக்குரைத்தான்!
அதிசயக் கொடுங்கோலம்—விளைந்
தரசர்தம் குலத்தினை அழிக்குமென்றான்;
சதிசெயத் தொடங்கிவிட்டாய்—நின்றன்
சதியினிற் றான்அது விளையும்" என்றான். 1

"விதிவிதி விதிமகனே!—இனி
வேறெது சொல்லுவன், அடமகனே!
கதியுறும் காலன் அன்றோ—இந்தக்
கயமகன் எனநினைச் சார்ந்துவிட்டான்
கொதியுறும் உளம் வேண்டாம்;—நின்றன்
கொள்கையின் படியவர் தமையழைப்பேன்;
வதியுறு மனைசெல்வாய்"—என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான். 2

திருதராட்டிரன் செயல்

மஞ்சனும் மாமனும் போயின பின்னர்
மன்னன் வினைஞர் பலரை அழைத்தே
"பஞ்சவர் வேள்வியிற் கண்டது போலப்
பாங்கின் உயர்ந்ததோர் மண்டபம் செய்வீர்;
மிஞ்சு பொருள் இதற் காற்றுவன்" என்றான்
மிக்க உவகையொ டாங்கவர் சென்றே
கஞ்ச மலரிற் கடவுள் வியப்பக்
கட்டி நிறுத்தினர் பொற்சபை ஒன்றே. 3

வல்லவன் ஆக்கிய சித்திரம் போலும்
வண்மைக் கவிஞர் கவியினைப் போலும்
நல்ல தொழில் உணர்ந் தார்செயல் என்றே
நாடு முழுவதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையும் மண்ணையும்பொன்னையும் கொண்டு
காமர் மணிகள் சிலசில சேர்த்துச்
சொல்லை இசைத்துப் பிறர்செயு மாறே
சுந்தர மாமொரு காப்பியம் செய்தார். 4

திருதராட்டிரன் விதுரனிடம் கூறியவை

தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்;
"தக்க பரிசுகள் கொண்டினி தேகி
எம்பியின் மக்கள் இருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
கொம்பினை ஒத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதொர் நுந்தை எனஉரை செய்வாய்" 5
"நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறும்
நன்மணி மண்டபம் செய்ததும் சொல்வாய்;
நீடு புகழ்ப்பெரு வேள்வியில் அந்நாள்
நேயமோ டேகித் திரும்பிய பின்னர்
பீடுறு மக்களை ஓர்முறை இங்கே
பேணி அழைத்து விருந்துகள் ஆற்றக்
கூடும் வயதிற் கிழவன் விரும்பிக்
கூறினன் இஃதெனச் சொல்லுவை கண்டாய்." 6

விதுரன் சொன்னது

"பேச்சின் இடையிற் சகுனிசொற் கேட்டே
பேய்எனும் பிள்ளை கருத்தினிற் கொண்டே
தீச்செயல் இஃதென் றதையும் குறிப்பால்
செப்பிடு வாய்"என மன்னவன் கூறப்
"போச்சுது போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!!
ஆச்சரி யக்கொடும் கோலங்கள் காண்போம்!
ஐய, இதனைத் தடுத்தல் அரிதோ? 7

திருதராட்டிரன் விதி வலிது என்றல்

என்று விதுரன் பெருந்துயர் கொண்டே
ஏங்கிப் பலசொல் இயம்பிய பின்னர்
சென்று வருகுதி, தம்பி, இனிமேல்
சிந்தனை யேதும் இனிச்செய மாட்டேன்;
வென்று படுத்தனன் வெவ்விதி என்னை ?
மேலை விளைவுகள் நீ அறியாயோ !
அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க்கெளி" தென்றுமெய் சோர்ந்துவிழுந்தான். 8

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

குறிப்புரை

பாஞ்சாலி சபதம்: தன்னைக் கௌரவர் மானபங்கம் செய்த போது அரசப்பேரவையில் பாஞ்சாலமன்னன் மகள் திரௌபதி சபதம் செய்த செய்தியைக் கூறும் நூலாகும். இதனை இயற்றியவர் **சி. சுப்பிரமணிய** பாரதியார். இவர் எட்டையபுரத்தில் தோன்றினர். இவர் பெற்றோர், சின்னசாமி அய்யர்-இலக்குமி அம்மையார். இவர் 1882ஆம் ஆண்டில் பிறந்தார். 1921இல் மறைந்தார். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டு ஆங்கிலேயரால் நாடுகடத்தப்பட்டார்.

1. புவி-உலகம். மதி-அறிவு. விதுரன்-துரியோதனனுக்குச் சிற்றப்பன். சதி-சூழ்ச்சி.
2. காலன்-இயமன். கயமகன்-கீழ்மகன். வதித்தல்-வசித்தல். மனை-வீடு.
3. மஞ்சன் - மைந்தன்; போலி. வினைஞர் - வேலையாட்கள். வேள்வி-யாகம். மிஞ்சு-மிக்க. கஞ்சமலரின் கடவுள்-பிரமன்.
4. காமர் - அழகிய. சுந்தரம்-அழகு. செயும் - செய்யும்; இப் பாடல் உவமையணி.
5. எம்பி-என் தம்பி; மருஉமொழி. ஏகி-சென்று. மாநகர்-உரிச் சொல்தொடர். மடப்பிடி-திரௌபதி; உவமையாகு பெயர். கொம்பு-பூங்கொம்பு. நுந்தை-உன் தந்தை.
6. பீடு-பெருமை. பேணி-உபசரித்து. நேயம்-நேசம்.
7. போச்சுது-கெட்டது. அரிது-குறிப்பு வினைமுற்று. ஓ-அசை.
8. வெம்மை+விதி; பண்புத்தொகை. மெய்-உடல். வருகுதி-வா-பகுதி.

வினாக்கள்

1. திருதராட்டிரன் தன் மகனிடம் யாது கூறினான்?
2. பொற்சபையை வினைஞர் எவ்வாறு கட்டி முடித்தனர்?
3. "சுந்தர மாமொரு காப்பியம்" என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
4. திருதராட்டிரன் விதுரனிடம் கூறியவை யாவை?
5. விதுரன் தன் அண்ணனிடம் கூறிய மறுமொழி யாது?
6. திருதராட்டிரன் விதியின் வலிமையை எவ்வாறு எடுத்தியம்பினான்?
7. பாரதியாரைப் பற்றியும் அவரது நூல்களைப் பற்றியும் 15 வரிக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை எழுதுக.

IV. பல்சுவைப்பகுதி

1. வருணனை

மிதிலைநகர்க் காட்சி

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தா ளென்று செழுமணிக்கொடிக
ளென்னும்
கைகளை நீட்டியந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா! 1

கடைத் தெருவின் காட்சி

வரப்பறு மணியும் பொன்னு மாரமுங் கவரி வாலுஞ்
சுரத்திடை யகிலும் மஞ்ஞைத் தோகையுந் தும்பிக்
கொம்புங்
குரப்பணை நிரப்பு மன்னர் குவிப்புறக் கரைகள் தோறும்
பரப்பிய பொன்னி யன்ன ஆவணம் பலவுங் கண்டார். 2

குதிரைகள் மண்டல கதியிலே சுழன்றோடும் காட்சி

கொட்புறு கலினப் பாய்மா குலான்மகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல வாளியின் வருவ மேலோர்
நட்பினி னிடைய றுவாய் ஞானிக ளுணர்வி னென்றாய்க்
கட்புலத் தினைய வென்று தெரிவில தெரியக் கண்டார். 3

—கம்பர்

2. சீட்டுக் கவி

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையி னுரிமையின் உதவி யணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் பத்திரன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

—மதுரைச் சொக்கநாதப் பெருமான்

3. சிலேடைகள்

குதிரைக்கும் காவிரியாற்றுக்கும்

ஓடுஞ் சுழிசுத்தம் உண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும்-நாடறியத்
தேடு புகழான் திருமலைராயன் வரையில்
ஆடுபரி காவிரியா மே. 1

கீரைப்பாத்திக்கும் குதிரைக்கும்

கட்டி யடிக்கையாற் கான்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்-முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியா குமே. 2

—காளமேகப் புலவர்.

4. தனிப்பாடல்கள்

குடத்திலே கங்கை அடங்குமெனப் பாடியது

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்-பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும். 1

ஈ ஏற மலைகுலுங்கப் பாடியது

வாரணங்கள் எட்டும் மகமேருவுங் கடலும்
தாரணியும் எல்லாஞ் சலித்தனவால்-நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தினால் அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது. 2

—காளமேகப் புலவர்

5. சிறு பிரபந்தங்கள்

திருவரங்கக் கலம்பகம்

மறம்

கொற்றவன்றன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக்கோ மறவர் கொம்பைக் கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்
மற்றதுதான் திருமுகமே யானு லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானுல் ஆலின் கொம்பைப்
பிறந்த குலத்துக் கேற்கப் பேசுவாயே.

—பிள்ளைப் பெருமாளையங்கா.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

வருகைப் பருவம்

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்கும் தொழும்ப ருளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்ச்சிமய
இமையப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே! வருக வருகவே.

—குமரகுருபரர்

6. முருகக் கடவுள் துதி

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வேங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதிஅரு ணாசலம் அமர்ந்த பெருமாளே!

—அருணகிரிநாதர்

7. நல்லுரை

ஒண்சுடர் உலகில் உதித்தெழு காலை
மன்னிருட் சோலையோர் பொன்னிறம் பொலிய
நிரந்தொளி பரந்து நிறைவது போல,
மாயையின் மனத்தெழு மகிழ்ச்சியும் பொங்கி
இடைவெளி இன்றி எவ்வெவ் வுலகும்

பாதல மீருப் படர்ந்து சென்றது;
"பிறந்திட இறந்தீர், இறந்திடப் பிறந்தீர்!
எழுமின்! எழுமின்! யாவரும் எழுமின்!
புத்த பெருமான் புவியில் உதித்தனன்;
அவனை வணங்குமின்; அவன்வழி பற்றுமின்;
அவனுரை கேண்மின்; அழிமனம் ஒழிமின்;
நலமுறு மெனவே நம்பி நாடுமின்;
உள்ளந் தெளிமின்; உறுதிகொண்மின்;
உய்யும்வழி ஈது; உண்மையும் ஈதாம்."

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

8. இறைவன் தன்மை

உலகெலாம் படைத்துக் காத்தே உருவிலா தழித்து நாளும்
உண்மையாய் எண்ண மாளா ஒருவனாய் அருவ னாகிச்
சலமிலா தெண்ணு வோர்க்குச் சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரித்த போதும் தானதிற் பிரியா னாகி
மலரின்மேல் தேவ னாகி மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப் பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும் பரமனார் பெருமை போற்றி.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

9. சிரித்த முல்லை

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன்; குளிர்ந்த தென்றல் வந்தது;
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது;
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சை;
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண் டேனே. 1

குரங்கின் அச்சம்

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல் ;
கிளை தொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும். 2

—பாரதிதாசன்

குறிப்புரை

1. வருணனை

இப்பாடல்கள், கம்பராமாயணம் பாலகாண்டம் மிதிலைக்காட்சிப் படலத்திலுள்ளன. இந்நூலைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கத்தைத் தொடர்நிலைச் செய்யுட் பகுதியுள் காண்க.

1. கடிநகர்-காவலையுடைய மிதிலை நகர். மை-குற்றம். செய்யவள்-இலக்குமி. கமலம் செம்கண் - தாமரை மலர் போன்ற சிவந்த கண். ஐயன் - இராமபிரான். இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி வந்தமை காண்க.
2. வரப்பு+அறு - வரம்பு ; அறு - எல்லையற்ற, அளவில்லாத. சுரம் - காடு. குரப்புஅணை - வரப்புக்களாகிய கரைகள். ஆவணம் கடைத்தெரு.
3. கொட்புஉறு - சுழன்று ஓடுதல் மிகுந்து கலினம்-கடிவாளம். குலால் மகன்-குயவன் ; குலால் மகன்-குலாலுகிய மகன். இருபெயரொட்டுப் பண்புத்தொகை; குலாலமகன்-குலால் மகன் என விகாரம்.

2. சீட்டுக் கவி

பாணபத்திரர் என்னும் இசைப்பாணர், தம்முடைய வறுமைத் துன்பம் நீங்குவதற்காகத் திருவாலவாய்ப் பெருமானிடமிருந்து சேரமன்னனுக்குத் திருமுகம் பெற்று அவன்பாற் பொருள் பெற்றுச் சென்றார் என்ற வரலாறு திருவிளையாடற் புராணத்துள் கூறப்பெற்றுளது. சிவபெருமான் சேர அரசனுக்கு எழுதிய பாடலாகிய கடிதம் ஆதலின் திருமுகப் பாசுரம் எனப்பட்டது.

திருமுகம்-கடிதம். மதிமலிபுரிசை-சந்திரன் ஊர்ந்து செல்லு கின்ற மதில். கூடல் - மதுரையம்பதி. கொண்மூ-மேகம். குருமா மணி-நல்ல நிறமுடைய உயர்ந்த இரத்தினங்கள். செரு-உயுத்தம். மா - குதிரை. உகைக்கும் - செலுத்தும். சேரலன் - சேரமான் பெரு மாள் நாயனர்.

4. சிலேடைகள்

சிலேடை என்பது இருபொருள் தோன்றப் பாடப்படுவது. இப் பாடல்களைப் பாடியவர் காளமேகப் புலவர். இவர் முதலில் வைணவ சமயத்தவராக இருந்து பின்பு சைவராக மாறினர் என்ப. வசைக்கவி பாடுதலில் இந்தப் புலவர் சிறந்தவர். "வசைபாடக் காளமேகம்" என்ற தொடர் இதனை வலியுறுத்தும். இவர் காலம் 15ஆம் நூற்றாண்டு ஆகும்.

1. சுழிசுத்தம்—(குதிரைக்கு) குற்றமற்ற சுழிகள். துன்னலரைச் சாடும்—எதிரிகளைத் தாக்கும்.

   சுழிசுத்தம்—(காவிரிக்கு) நீர்ச் சுழிகள் துன் அலரைச் சாடும்-தன் மீது போடப்பட்ட மலர்களைத் தாக்கி இழுத்துச் செல்லும்.

2. குதிரை: கட்டி அடிக்கை—தேரில் கட்டி அடிக்கப்படுதல். கால்மாறிப் பாய்கையால்-குதித்துப் பாய்வதாலும்.

   கீரைப்பாத்தி: கட்டி அடிக்கை-கீரைத்தண்டுகள் கட்டுகளா கக் கட்டப்பட்டு வேரில் உள்ள சேறு போகும்படி அடிக் கப்படுதல். கால்மாறி - நீர்க்கால்வாய் பாத்தியில் மாறி மாறி.

4. தனிப்பாடல்கள்

1. வெற்பு-(இமய)மலை. பெண் - பார்வதி தேவி. சடாமகுடம் - சடைமுடி.
2. வாரணங்கள்-யானைகள். மகமேரு-பெரிய மேருமலை. பண் வாய் - இசைபாடும் வாய். பருமத்து - பருத்ததாகிய மத்து. சலித்தன - வருந்தின.

   இவையிரண்டும் காளமேகப் புலவரால் பாடப்பெற்றன.

5. சிறு பிரபந்தங்கள்

திருவரங்கக் கலம்பகம்

இப்பாடல் திருவரங்கக் கலம்பகம் என்ற நூலிலுள்ளது. இதனை இயற்றியவர் திவ்விய கவி அழகிய மணவாளதாசர் என் னும் பெயரினர். பிள்ளைப் பெருமாளையங்கார் எனவும் அழைக்கப் படுவார். திருமாலிடத்துப் பக்தி பூண்ட வீர வைணவ அந்தணர் மரபினர். இவர் காலம் 13ஆம் நூற்றாண்டு.

மறம் - தமது மகளை மணம் பேசுவதற்காக, அரசரால் அனுப்பப்பெற்ற தூதுவனை நோக்கி, மறவர்கள் மணம் மறுத்து, அவ்வரசர்களை இகழ்ந்து கூறியதாகச் செய்யுள் செய்வது. இது கலம்பக உறுப்புக்களுள் ஒன்று.

திருமுகம் - கடிதம், முகம். குறையுடல் - தலையில்லாத உடல். மறவர்கொம்பு - வேடர்கள் பெண்; கொம்பு : உவமை ஆகுபெயர்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

பிள்ளைத் தமிழ் என்பது 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. பாட்டுடைத் தலைவனைச் சிறு குழந்தையாகக் கருதி, பிள்ளைப் பருவங்களைப் பாடுதல் பிள்ளைத் தமிழின் இலக்கணம் ஆகும். பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பத்துப் பருவங்களை உடையது. அவை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன.

பெண்பாற் பிள்ளைத் தமிழில் மேலே கூறப்பட்ட ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களில் முடிவில் கூறப்பட்ட மூன்று பருவங்களை நீக்கி, அம்மானை, நீராடல், ஊசல் என்பவற்றைச் சேர்த்துப் பத்துப் பருவங்கள் என்பர்.

இந்நூலை இயற்றியவர் குமரகுருபரர். இவர் சுமார் முந்நூறு ஆண்டுகட்குமுன் இருந்தார். இவர் தந்தையார் சண்முகசிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமி அம்மையார். இவர் ஆசிரியர் மாசிலாமணி தேசிகர். இவர் பிறப்பிடம் ஸ்ரீ வைகுண்டம். சைவ சமயம். முருகன் அருளால் ஐந்து வயதுக்குப் பிறகு பேசும் ஆற்றல் பெற்றார்.

பழம்பாடல் - வேதம்; தேவாரம் முதலிய திரு முறைகள். நறை பழுத்த - மிக்க இனிமையான. அகந்தை - செருக்கு. தொழும்பர் - அன்பர். உளக்கோயில் - உள்ளமாகிய கோவில்; உருவகம். சிமயம் - சிகரம். பிடி - பெண்யானை; உவமை யாகுபெயர். பொருப்பு - மலை. எறிதரங்கம் - வினைத்தொகை. தரங்கம் - அலை. மதுகரம் - வண்டு. வாய்மடுக்கும் - உண்ணும். குழற்காடு - உருவகம். மலயத்துவசன் - ஒரு பாண்டிய மன்னன் பெயர்.

6. முருகக் கடவுள் துதி

இது, முருகக் கடவுளைப் பற்றிய தோத்திரமாகும். திருப்புகழ் என்னும் நூலில் சிறப்புப் பாயிரத்துக்குப் பின்புள்ள பாடல் இது. இதனையும் அருணகிரி நாதரே பாடினர் என்பர். இவர் திருவண்ணாமலையில் பிறந்தவர். சைவ மதத்தினர். முருகக் கடவுளிடம் அள

வற்ற பக்தி கொண்டவர். முருகப் பிரானது பெருமை குறித்துச் சந்தத்துடன் பாடத் தக்கனவாகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களின் தொகுதிக்குத் திருப்புகழ் என்று பெயர். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

ஏறு மயில் - ஆண்மயில். குன்று - கிரவுஞ்ச கிரி. உருவ - பிளக்க. வினை - துன்பம். மாறுபாடு - எதிர்த்துச் சண்டை செய்த. சூரர் - சூரபதுமன். அருணாசலம் - திருவண்ணாமலை.

"ஆதியம ராவதி யமர்ந்த பெருமாளே" என்றும் ஒரு பாடமுண்டு. அமராவதி - விண்ணுலகம்.

7. நல்லுரை

இப்பகுதி 'ஆசியஜோதி' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் தேசிக விநாயகம் பிள்ளை. பிறப்பிடம் தேரூர். சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார் இவரது பெற்றோர் ஆவர். கி. பி. 1866ஆம் ஆண்டு தோன்றினார். அண்மையிலே மறைந்தார்.

மன் - நிலைபெற்ற. பரந்து - பரவி. அவன் வழி - புத்தர்பிரான் உபதேசித்த மார்க்கம்.

8. இறைவன் தன்மை

இப்பாடலின் ஆசிரியர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களாவர். கி.பி. 1888இல் பிறந்தார். நாட்டின் விடுதலைப் போரில் பெரும் பங்கு கொண்டு சிறை சென்றவர். இவர் பெற்றோர் வேங்கடராமப் பிள்ளை, அம்மணி அம்மையார். பிறப்பிடம் மோகனூர். அரசாங்கம் இவரை, சென்னை மேல் சபை அங்கத்தினராக நியமித்திருந்தது.

முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல் என்பன. எண்ணமாளா - நினைக்க இயலாத. அருவன் - உருவமற்றவன். சலம் - வஞ்சனை. மலரின் மேல் தேவன் - பிரம்மன். மாதொரு பாகன் - சிவபெருமான். மால் - திருமால்.

9. சிரித்த முல்லை: குரங்கின் அச்சம்

இப்பாடல்களின் ஆசிரியர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம என்பதாகும். இவர் தற்காலத்தில் வாழ்ந்த புலவர்களில் சிறந்தவர். சிறந்த கற்பனைகள், உயர்ந்த பொருள், அழகிய சொல் முதலியன இவருடைய பாடல்களில் மிளிரும்.

1. வாசம் - மணம். 2. வெடுக்கென்று - விரைவாக.

வினாக்கள்

வருணனை

1. மிதிலை நகரம் எங்ஙனம் வருணிக்கப்பெற்றுளது?
2. ஆவணச் சிறப்பினை விளக்குக.
3. குதிரைகள் சுழன்று ஓடும் காட்சி எவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது?

சீட்டுக்கவி

1. திருமுகப் பாசுரம் என்றால் என்ன?
2. இதனைப் பாடியவர் யார்?
3. இப்பாடல் எதற்காகப் பாடப்பெற்றது?
4. இப்பாடலின் பொருளைத் தொகுத்துக் கூறுக.

சிலேடைகள்

1. சிலேடையாவது யாது?
2. "ஆடு பரி காவிரியாம்" எவ்வாறு?
3. கீரைப்பாத்திக்கும் குதிரைக்குமுள்ள ஒற்றுமையை விளக்குக.

தனிப்பாடல்கள்

1. "குடத்தில் கங்கை யடங்கும்" எப்படி?
2. புண்வாயில் ஈ மொய்த்த பொழுது ஏற்பட்ட நிலை யாது? இப்பாடலைப் பாடியவர் யார்?

திருவரங்கக் கலம்பகம்

1. திருவரங்கக் கலம்பக ஆசிரியர் பெயர், காலம் இவற்றைக் குறிப்பிடுக.
2. மறம் என்ற உறுப்பின் இலக்கணம் யாது?
3. "குறையுடலுக்கோ மறவர் கொம்பைக் கேட்டாய்" இவ்வாறு கூறியது ஏன்?
4. திருமுகம்—இருபொருள் கூறுக.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

1. பிள்ளைத்தமிழ் என்றால் என்ன? இந்நூலைப் பாடியவர் யார்?
2. "தொடுக்குங் கடவுள்" என்ற பாடலில் கூறப்பெற்ற பொருளைத் தொகுத்துக் கூறுக.
3. "அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பர்" இத்தொடரின் பொருளை விளக்குக.

முருகக்கடவுள் துதி

1. திருப்புகழ் ஆசிரியர் வரலாறு, காலம் இவற்றைக் குறிப்பிடுக.
2. ஆறு முகங்களைப் பற்றிக் கூறப்படுவது யாது?

நல்லுரை

1. மாந்தர் இயல்பினை ஆசிரியர் எவ்வாறு எடுத்தோதுகின்றார்?
2. ஆசிரியர் உலக மாந்தர்க்குச் செய்யும் உபதேசம் யாது?

இறைவன் தன்மை

1. இறைவனது முத்தொழில்கள் எவை?
2. சலமிலாது எண்ணுபவர்களுக்கு இறைவன் எவ்வாறு காட்சியளிக்கின்றான்?
3. நாமக்கல் கவிஞரின் பொதுநோக்கினை இப்பாடலைக் கொண்டு விளக்கி எழுதுக.

சிரித்த முல்லை; குரங்கின் அச்சம்

1. மாலைப்பொழுதில் சோலையின் வனப்பை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார்?
2. குரங்கின் அச்சத்தை விளக்கி எழுதுக.
3. விளக்கினைத் தொட்ட பிள்ளை எதற்கு உவமையாகக் கூறப்பட்டது?
4. இப்பாடல்களைப் பாடியவர் யார்? அவரது இயற்பெயர் யாது?

உரை நடை

பிள்ளையவர்கள் முன் முதல் நாள்

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி,
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

மாயூரத்திற்கு நாங்கள் காலையில் வந்து சேர்ந்தோம். உடனே என் தந்தையார் ஸ்நானம் முதலியன செய்து விட்டுப் பூஜை செய்யத் தொடங்கினர். என் தாயார் இல்லாத காலங்களில் அவரது பூஜைக்கு வேண்டிய பணிவிடைகளை நானே செய்வது வழக்கம். அவ்வாறே அன்றும் செய்தேன். அன்று புரிந்த பூஜையில் என் வாழ்வைக் குறித்து அவர் கடவுளைப் பிரார்த்தித்து உருகியிருக்க வேண்டுமென்று தெரிந்தது.

பூஜைக்குப்பின் போஜனம் செய்தோம். அப்பால் தந்தையார் சிரம பரிகாரம் பண்ணிக் கொண்டார். பிறகு பிற்பகல் மூன்று மணியளவில் நானும் அவரும் பிள்ளையவர்களைப் பார்க்கப் புறப்பட்டோம். போகும் வழியில் ஸ்ரீ மாயூரநாதர் ஆலயம் இருந்தமையின் உள்ளே சென்று சுவாமி சந்நிதானத்தில் நமஸ்காரம் செய்துவிட்டு சென்றோம்.

அக்காலத்தில் பிள்ளையவர்கள் மாயூரத்தில் திருவாவடு துறையாதீனத்துக்குரிய கட்டளை மடத்தை அடுத்து மேல்பாலுள்ள வீட்டில் இருந்து வந்தனர். நாங்கள் அவ்வீட்டிற்குச் சென்றோம்.

இருவர்

அங்கே முன் கட்டில் இருவர் இருந்தனர். அவருள் ஒருவர் விபூதி உருத்திராட்சம் தரித்துக்கொண்டு விளங்கினர். என் தந்தையாரும் நானும் அவரையே பிள்ளையவர்களென்று எண்ணினேம். மற்றொருவரிடம் மெல்ல என் தந்தையார். "பிள்ளையவர்கள் இவர்களா?" என்று கேட்டார். அவர் என் தந்தையாரது தோற்றத்தில் ஈடுபட்டு இனிய முகத்தினராகி, "இவர் திருவாவடுதுறை மகாலிங்கம் பிள்ளை" என்று கூறினர்.

உடனே தந்தையார், "மகாவித்துவான் பிள்ளையவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டனர்.

இந்த இரண்டு கேள்விகளுக்கும் இடையே மிகவும் சிறிதளவு காலமே சென்றிருக்கும். அதற்குள் என் மனத்தில் பயமும் சந்தேகமும் இன்பமும் மாறி மாறிப் பொருதன. அங்கே பிள்ளையவர்கள் இல்லையென்பதை அறிந்தவுடன், "அவர்கள் எங்கேயாவது வெளியே சென்றிருக்கலாம்" என்ற எண்ணம் எனக்கு முதலில் தோன்றவில்லை. "அவர்கள் ஊரில் இல்லையோ? வெளியூருக்குச் சென்றிருக்கிறார்களோ? நாம் வந்த காரியம் இப்போது கைகூடாதோ? நாம் திரும்பி ஊருக்குப் போக நேர்ந்துவிடுமோ?" என்று பலவாறு எண்ணினேன்.

"இந்த வீட்டின் பின்புறத்துள்ள தோட்டத்தில் வேலை நடப்பதால் பிள்ளையவர்கள் அதைக் கவனித்துக்கொண்டு அங்கே இருக்கிறார்கள்" என்று அக்கனவான் கூறினார். அப்போதுதான் எனக்குத் தைரியம் உண்டாயிற்று.

என் தந்தையாரிடம் பேசிக்கொண்டிருந்தவர் மாயூரத்திற்கு அருகில் உள்ள குற்றாலம் என்னும் ஊரினராகிய தியாகராஜ முதலியார் என்னும் செங்குந்தச் செல்வர். பிள்ளையவர்களைக் கொண்டு அந்த ஸ்தலத்தின் புராணத்தைத் தமிழில் இயற்றுவித்தவர். அப்புராணம் திருத்துருத்திப் புராணம் என வழங்கும்.

என் தந்தையார் அங்கிருந்த மற்றொருவராகிய மகாலிங்கம் பிள்ளையைப் பார்த்து, "திருவாவடுதுறைக் கந்தசாமிக் கவிராயரை உங்களுக்குத் தெரியுமா? அவர் சௌக்கியமாக இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"அவர் சில காலத்திற்கு முன்பு சிவபதம் அடைந்தார்" என்று அவர் விடை கூறினார்.

தந்தையார் அச்செய்தியைக் கேட்டு வருத்தமடைந்தார். கந்தசாமிக் கவிராயர் என் பிதாவுக்குப் பழக்கமானவர். திருவாவடுதுறை யாதீன வித்துவானாக இருந்தவர். அரியலூர்ச் சடகோபையங்காரின் ஆசிரியர். என்னை அவரிடம் படிக்கச் செய்யலாமென்று தந்தையார் நினைத்ததுண்டு. அவருக்கும் தமக்கும் பழக்கம் உண்டென்றும், மிக்க அடக்கம் உள்ளவரென்றும் கூறி அவருடைய குண விசேஷங்களைப் பற்றித் தந்தையார் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கே பிள்ளையவர்களுடைய தவசிப்பிள்ளை ஒருவர் வந்தார். அவரிடம் என் தகப்பனார் பிள்ளையவர்களை நாங்கள் பார்க்க வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அவர் அங்ஙனமே போய்ச் செல்ல, பிள்ளையவர்கள் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தனர்.

முதற் காட்சி

அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமும், இளந் தொந்தியும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்துள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்தியிருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோற்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை; ஆழ்ந்து பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோற்றியது. கண்களில் எதையும் ஊடுருவிப் பார்க்கும் பார்வை இல்லை; அலட்சியமான பார்வையும் இல்லை; தம்முன்னே உள்ள பொருள்களில் மெல்லக் குளிர்ச்சியோடு செல்லும் பார்வைதான் இருந்தது.

அவருடைய நடையில் ஓர் அமைதியும், வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்தில் உற்சாகம் இல்லை; சோம்பலும் இல்லை; படபடப்பில்லை; சோர்வும் இல்லை. அவர் மார்பில் உருத்திராட்சக் கண்டி விளங்கியது.

பல காலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன்; அவனுக்குக் காட்சியளிக்கும் அத் தெய்வம்போல அவர் வந்தார். என் கண்கள் அவரிடத்தே சென்றன. என் மனத்தில் உத்சாகம் பொங்கி அலை எறிந்தது. அதன் விளைவாக ஆனந்தக் கண்ணீர் துளித்தது. அத்துளி இடை இடையே அப்புலவர் பிரானுடைய தோற்றத்தை மறைத்தது. சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் விலக்கிவிட்டு அவரது திருமேனியில் உலவிய என் கண்கள் அவர் முகத்திலே பதிந்துவிட்டன.

'வந்த காரியம் என்ன?'

அவர் வந்தவுடன் நின்றுகொண்டிருந்த எங்களை உட்காரும்படிச் சொன்னார். அந்தத் தொனியிலும் அமைதியைத் தான் நான் உணர்ந்தேன். எல்லாம் சாந்தமயமாக இருந்தன. அவரும் அமர்ந்தார். என் தகப்பனாரைப் பார்த்து "நீங்கள் யார்? வந்த காரியம் என்ன?" என்று விசாரித்தனர். அவ்வார்த்தைகள் அன்புடன் கலந்து வெளி வந்தன.

"நாங்கள் பாபநாசத்துக்குப் பக்கத்திலுள்ள உத்தம தானபுரத்திலிருந்து வருகிறோம். தங்களைப் பார்க்கத்தான் வந்தோம். இவன் என் குமாரன். தமிழ் படித்து வருகிறான். சில பேரிடம் பாடம் கேட்டிருக்கிறான். சங்கீதமும் அப்பியாசம் செய்திருக்கிறான். தங்களிடம் பாடம் கேட்க வேண்டுமென்று மிகுந்த ஆவல் கொண்டிருக்கிறான். தமிழைத் தவிர வேறு ஒன்றிலும் இவன் புத்தி செல்லவில்லை. எப்போதும் தங்கள் ஸ்மரணையாகவே இருக்கிறான். ஆகையால் தங்களிடம் இவனை அடைக்கலமாக ஒப்பித்துவிட்டுப் போக வந்தேன்."

"உங்கள் பெயர் என்ன?"

"என் பெயர் வேங்கடசுப்பன் என்பர். இவன் பெயர் வேங்கடராமன்" என்றார் என் தந்தையார்.

"வேங்கடசுப்பனென்பது நல்ல பெயர். வேங்கட சுப்பிரமணியனென்பதன் மரூஉ அது. திருவேங்கட மலையில் முருகக்கடவுள் கோயில் கொண்டிருக்கிறாரென்பதற்கு இந்த வழக்கு ஓர் ஆதாரம்."

அவர் பேச்சிலே ஒரு தனி இனிமையை நான் உணர்ந்தேன். "சாதாரணமாகப் பேசும்போதே அருமையான விஷயம் வெளிவருகின்றதே!" என்று நான் ஆச்சரியம் அடைந்தேன்.

பிறகு பிள்ளையவர்கள் என்னைப் பார்த்து, "நீர் யார் யாரிடம் என்ன என்ன நூல்களைப் பாடம் கேட்டிருக்கிறீர்?" என்று வினவினர். நான் மெல்ல என் வரலாற்றைச் சொன்னேன்; சடகோபையங்காரிடம் படித்தது முதல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் காரிகைப் பாடம் கேட்டது வரையில் விரிவாக எடுத்துரைத்தேன்.

“இவருக்கு இசையில் எந்த மட்டும் பயிற்சி உண்டு?” என்று என் தந்தையாரை நோக்கி அவர் கேட்டார். சங்கீதத்தை இசையென்று அவர் சொல்லியதை நான் கவனித்தேன்.

தாம் எனக்குச் சங்கீதத்தை முறையாகக் கற்பித்து வந்ததை என் தந்தையார் தெரிவித்தார். அப்பால் தாம் கனம் கிருஷ்ணையரிடம் குருகுலவாசம் செய்து சங்கீதம் கற்றதையும் சொன்னார்.

“இந்த ஊரிலுள்ள கோபால கிருஷ்ண பாரதியாரைத் தெரியுமோ?” என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

“நன்ருகத் தெரியும். அவரும் கனம் கிருஷ்ணையரிடம் சில காலம் அப்பியாசம் செய்ததுண்டு.”

பரீட்சை

இவ்வாறு எங்கள் வரலாற்றை அறிந்து கொண்ட பின்பு அக்கவிஞர் பெருமான் என்னைப் பார்த்து, “நைடதத்தில் ஏதாவது ஒரு பாடலைச் சொல்லும்” என்ருர். அந்த மகா வித்துவானுக்கு முன், காட்டுப் பிராந்தியங்களிலே தமிழறிவைச் சேகரித்துக் கொண்ட நான் எவ்வளவு சிறியவன்! எனக்குப் பாடல் சொல்லத் தைரியம் உண்டாகவில்லை. மனம் நடுங்கியது. உடல் பதறியது; வேர்வை உண்டாயிற்று. நாக்கு உள்ளே இழுத்தது. இரண்டு மூன்று நிமிடங்கள் இவ்வாறு நான் தடுமாறினேன். அப்பால் ஒருவாறு நைடதத்திலுள்ள “தழைவிரி கடுக்கைமாலை” என்னும் காப்புச் செய்யுளைக் கல்யாணி இராகத்தில் மெல்லச் சொன்னேன்; முதலடியை,

“தழைவிரி கடுக்கை மாலைத் தனிமுதற் சடையிற் சூடும்”

என்று நான் சொன்னேன். பிள்ளையவர்கள் இடைமறித்து, “தனிமுதல் சடையிற் சூடும்” என்று சொல்லித் திருத்தினர். பல காலமாகப் பிழைபட்ட பாடத்தை உருவேற்றி இருந்த எனக்கு அந்தப் பாடமே முன்வந்தது. என் நடுக்கம் அதிகமாயிற்று. ஆனாலும் பாடல் முழுவதையும் சொல்லி முடித்தேன். நான் அதைச் சொல்லும்போதே அவர் முகத்தையும் கவனித்தேன். “நான் சொல்வதில் அவருக்கு வெறுப்பு உண்டாகுமோ!” என்று பயந்தேன். நல்லவேளையாக அவர் முகத்தில் அத்தகைய குறிப்பு ஒன்றும் தோன்றவில்லை. எனக்கும் சிறிது ஊக்கம் உண்டாயிற்று.

"இன்னும் ஒரு பாடல் சொல்லும்" என்றார் அவர். நான் நைடதத்தின் சிறப்புப்பாயிரமாகிய "நிலவுபொழி தனிக் கவிகை" என்னும் பாடலைச் சாவேரி இராகத்தில் சொன்னேன். அந்த இரண்டு செய்யுட்களையும் மீண்டும் சொல்லிப் பொருள் கூறும்படி கூறினார். நான் பாடல்களைச் சொல்லிப் பொருள் கூறத் தொடங்குகையில் நாக்குத் தழுதழுத்தது.

"தைரியமாகச் சொல்லும்" என்று அக்கவிஞர் பிரான் கூறினார். நான் இரண்டு செய்யுட்களுக்கும் பொருள் கூறி முடித்தேன்.

"நிகண்டு பாடம் உண்டோ?" என்று அவர் கேட்டார். "பன்னிரண்டு தொகுதியும் பாடம் உண்டு" என்று கூறவே சில சில பாடங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டுவிட்டு, "நிகண்டை மனனம் செய்வது நல்லதே. இக்காலத்தில். அதை நெட்டுருப் பண்ணும் வழக்கமே போய்விட்டது சொன்னால் யாரும் கேட்பதில்லை" என்றார்.

சந்தேகப் பேச்சு

அப்போது என் தந்தையார், "இவனைத் தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். எப்போது இவன் பாடம் கேட்க வரலாம்?" என்று கேட்டார்.

அப்புலவர் பெருமான் சிறிது நேரம் மௌனமாக இருந்தார் அவர் எதையோ யோசிக்கிறார் என்று எண்ணினேன். "ஒருகால் நம்மை ஏற்றுக்கொள்ள மாட்டாரோ?" என்று அஞ்சினேன். அவர் மெல்லப் பேசத் தொடங்கினார்.

"இங்கே படிப்பதற்கு அடிக்கடி யாரேனும் வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். வரும்போது பணிவாக நடந்து கொள்கிறார்கள். சில காலம் படித்தும் வருகிறார்கள். படித்துத் தமிழில் நல்ல உணர்ச்சி உண்டாகும் சமயத்திலே போய்விடுகிறார்கள். சிலர் சொல்லாமலே பிரிந்துவிடுகிறார்கள். சிலர் 'ஊர்போய்ச் சில தினங்களில் வருகிறோம்' என்று சொல்லிப் போய்த் திரும்புவதே இல்லை. சில காலம் இருந்து படிப்பதாகப் பாவனை செய்துவிட்டுப் பிரிந்து சென்று என்னிடம் படித்ததாகச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இப்படி

அரைகுறையாகப் படிப்பதால் அவர்களுக்கு ஒரு பயனும் உண்டாவதில்லை ; நமக்கும் திருப்தி ஏற்படுவதில்லை. இத் தகையவர்கள் இயல்பைக் கண்டு மனம் சலித்துவிட்டது. யாராவது பாடம் கேட்பதாக வந்தால் யோசனை செய்துதான் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.'

அவர் பேச்சிலே அன்பும் மென்மையும் இருந்தன. ஆனால் அவர் கருத்து இன்னதென்று தெளிவாக விளங்க வில்லை. என் உள்ளத்திலே அப்பேச்சு மிகுந்த சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது. அவர் தம்மிடம் வந்து சில காலம் இருந்து பிரிந்து போன மாணாக்கர் சிலர் வரலாற்றையும் சொன்னார். "இந்த விஷயங்களையெல்லாம் சொல்வதன் கருத்து என்ன ? நம்மை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லை என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்கிறார்களோ ? அப்படியிருந் தால் இவ்வளவு பிரியமாகப் பேசிக்கொண்டிருக்க மாட்டார் களே" என்று நான் மயங்கினேன்.

தவம் பலித்தது

என் தந்தையார் தைரியத்தை இழவாமல், "இவன் அவ் வாறெல்லாம் இருக்க மாட்டான். இவனுக்குப் படிப்பதைத் தவிர வேறு வேலை இல்லை. தங்களிடம் எவ்வளவு காலம் இருக்க வேண்டுமானாலும் இருப்பான். தங்களுடைய உத் தரவு இல்லாமல் இவன் எங்கும் செல்ல மாட்டான். இதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இதற்குமுன் இவனுக் குப் பாடம் சொன்னவர்களெல்லாம் இவனைத் தங்களிடமே கொண்டு வந்து சேர்க்கும்படி வற்புறுத்தினார்கள். பல கால மாக யோசித்து அதிக ஆவலுடன் தங்களிடம் அடைக்கலம் புக இவன் வந்திருக்கிறான். இவனுடைய ஏக்கத்தைக் கண்டு நான் தாமதம் செய்யாமல் இங்கே அழைத்து வந்தேன். தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். இனிமேல் இவன் விஷயத் தில் எனக்கு யாதோர் உரிமையும் இல்லை" என்று கூறினார். அப்படிக் கூறும்போது அவர் உணர்ச்சி மேலே பேசவொட் டாமல் தொண்டையை அடைத்தது. நானும் ஏதேதோ அப் போது சொன்னேன் ; வேண்டிக் கொண்டேன். என் வாய் குழறியது ; கண் கலங்கியது; முகம் ஒளியிழந்தது.

அங்கிருந்தவர்கள் என் தந்தையார் வேண்டுகோளையும் எனது பிரிவையும் உணர்ந்து இரங்கி, "இந்தப் பிள்ளை

இருந்து நன்ருகப் படிப்பாரென்றே தெரிகிறது. தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறினர்கள்.

அக் கவிஞர்பிரானது முகம் மலர்ந்தது. ஒருவிதமான உறுதிக்கு அவர் வந்துவிட்டாரென்பதையும், அத்தீர்மானம் எனக்கு அனுகூலமாகத்தான் இருக்குமென்பதையும் அந்த முகமலர்ச்சி விளக்கியது.

"இவ்வூரில் பந்துக்கள் யாரேனும் இருக்கிருர்களோ? இவருடைய ஆகாரத்துக்கு ஏற்பாடு ஏதேனும் செய்திருக் கிறீர்களா?'' என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

"இவ்வூரில் நண்பர்களும் பந்துக்களும் இருந்தாலும் அவர்கள் செல்வமுள்ளவர்களல்ல. அவர்களுக்குச் சிரமம் கொடுப்பது உசிதமாக இராது. தாங்களே ஏதாவது ஏற் பாடு செய்ய வேண்டும்'' என்ருர் என் தந்தையார். பிள்ளை யவர்கள் பல மாணுக்கர்களை வைத்துப் போஷித்துப் பாடம் சொல்லி வருகிருர் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டி ருந்தமையின் இவ்வாறு எந்தையார் சொன்னுர்.

பிள்ளையவர்கள்: "திருவாவடுதுறையிலும் பட்டீச் சுரத்திலும் நான் தங்கும் காலங்களில் இவருடைய ஆகார விஷயத்தில் ஒரு குறையும் நேராமல் பார்த்துக்கொள்ளலாம். சைவராக இருந்தால் ஒரு கவலையும் இராது; என் வீட்டிலே சாப்பிடலாம். இந்த ஊரில் இவர் ஆகார விஷயத்தில் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன்; அதுபற்றி வருந்துகிறேன்.''

எந்தையார்: "அப்படியாளுல் இவ்வூரில் இருக்கும்வரை யில் இவன் ஆகாரச் செலவிற்கு வேண்டிய பணத்தை எப்படியாவது முயன்று அனுப்பிவிடுகிறேன். இவனைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

பிள்ளையவர்கள்: "சரி. ஒரு நல்ல தினம் பார்த்துப் பாடம் கேட்க ஆரம்பிக்கலாம்.''

என் தவம் பலித்தது என்று நான் குதூகலித்தேன். அத்தமனசமய மாகிவிட்டமையால் நாங்கள் மறுநாட்காலை யில் வருவதாக விடைபெற்றுக்கொண்டு எங்கள் விடுதிக்கு மீண்டோம்.

நாங்கள் போகும்போது எங்கள் மனத்தை அமிழ்த்திக் கொண்டிருந்த ஒரு பெரிய பாரம் நீங்கியது போல இருந்தது. என் தந்தையார் அடிக்கடி, "ஜாக்கிரதையாக இருப்பாயா? தேக சௌக்கியத்தைக் கவனித்துக்கொள்வாயா? கடிதம் எழுதுவாயா? வருத்தப்படாமல் இருப்பாயா?" என்று பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே வந்தார். என்னைத் தனியே விட்டுச் செல்வதற்கு அவர் உள்ளம் எவ்வளவு தத்தளித்ததென்பதை அவை விளக்கின.

('என் சரிதம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

அருஞ்சொற் பொருள்

சிரமபரிகாரம் - இளைப்பாறுதல். சிவபதம் - மரணம். தவசிப் பிள்ளை - கையாள். ஸ்மரணை - நினைவு. நைடதம் - ஒரு காப்பியம்; அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது. மனனம் செய்வது - மனப்பாடம் செய்வது.

வினாக்கள்

1. திருத்துருத்திப் புராணம் எத்தலத்தைப் பற்றியது? அதை யார் இயற்றியது?
2. பிள்ளையவர்களின் தோற்றம் எப்படி இருந்ததாக ஆசிரியர் கூறுகின்றார்?
3. ஐயரவர்களுக்கு நடைபெற்ற பரீட்சையைப் பற்றிச் சுருக்கி வரைக.
4. ஐயரவர்களின் தந்தையாரிடம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் யாது கூறினர்?
5. தந்தையார் தன் மகனை ஏற்றுக்கொள்ள வேண்டியபோது அருகிலிருந்தவர் கூறியது யாது?
6. ஐயரவர்களைப் பிரியும் நிலையில் அவர் தந்தையாரின் உள்ளப் பாங்கு எவ்வாறு இருந்தது?

பயிற்சி

1. நாட்குறிப்பு எழுதுவதை நீ பழக்கம் செய்துகொள்.
2. வாழ்க்கைக் குறிப்பினால் உண்டாகும் நன்மைபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. கொல்லிமலை வீரன்

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

சேரநாட்டிலே கொல்லி என்னும் மலையொன்று உண்டு. அம்மலை முன்னாளில் சேரகுல மன்னர்க்கு உரியதாய் இருந்தது. வளமார்ந்த அம்மலையின் சோலையில் செந்தேன் துளிக்கும்; செழும் பலாப் பழுக்கும். ஈசனருள் விளங்கும் அறைப் பள்ளி என்னும் திருக்கோயிலும், தீயவரை மருட்டி அழிக்கும் தெய்வப் பாவையும் அம்மலையில் உண்டு.

இத்தகைய கொல்லி மலையிலே குறுநில மன்னனாக வாழ்ந்தான் ஓரி என்ற பெயர் பெற்ற வீரன். வில்லாண்மையில் அவன் நிகரற்றவன். முடிவேந்தரும் அவனுதவியை நாடினர். அமர்க்களங்களில் அவன் வில்லால் மடிந்த வீரர் எண்ணிறந்தவர். காற்றின் வேகமும் கனலின் வெம்மையும் வாய்ந்த அவ்வில்லை 'வல்வில்' என்று புகழ்ந்தனர் வீரர்.

போர் ஒழிந்த காலத்தில் அவ்வீரன் வேட்டையாடிப் பொழுது போக்குவான். அவன் ஆடிய வேட்டை யொன்று பாட்டில் அமையும் பெருமை பெற்றது! ஒரு நாள் வல்வில் எடுத்துத் தன்னந்தனியனாய்க் கொடிய விலங்குகள் உலாவும் கொல்லிமலைக் காட்டின் உள்ளே சென்றான் ஓரி. ஒரு பெரிய யானை அவன் கண்ணெதிர்ப்பட்டது. உடனே வல்வில் வளைந்தது; அடுகணை எழுந்தது; வேழத்தின் தலையில் வேகமாகப் பாய்ந்து வெளிப்பட்டது. பின்னும் விசையாகச் சென்று குறுக்கிட்ட ஒரு பெரும் புலியைக் கொன்றது. அதனையும் கடந்து ஒரு கலைமான் மீது பாய்ந்தது. மேலும் சென்று காட்டுப் பன்றியொன்றை வீட்டியது. அம்மட்டிலும் அமையாது புற்றிலே இருந்த ஓர் உடும்பின்மீது பாய்ந்து கடுஞ்சினம் தீர்ந்தது.

அவ்வேட்டையைக் கண்டது ஒரு பாணர் கூட்டம். வியப்பும் திகைப்பும் உற்றது. கொல்லிமலையில் இப்படிக் கொலை புரிந்தவன் எவன்?'' என்று அறிந்துகொள்ள ஆசைப் பட்டது. "இவன் விளையாட்டின் பொருட்டு வேட்டையாடும் வீரனா? அன்றி விலைப்பொருட்டால் விலங்குகளைத் கொலை செய்யும் வேடனா?" என்று ஒருவரை ஒருவர் வினவினர்.

அப்போது வில்லாளன் அவர் நின்ற பக்கம் திரும்பினுன். அவன் ஏற்றமும் தோற்றமும் அவர் கண்களைக் கவர்ந்தன. வண்ண மேனி; திண்ணிய தோள்; நறுஞ்சாந்தம் பூசிய பரந்த மார்பு; நெடிய கை; கொடிய வில்; கழல் அணிந்த கால்; ஏறு போன்ற நடை—இவற்றைக் கண்டனர் பாணர். "கொல்லிமலையாளும் கொடைவள்ளல் இவன்தானு?" என்ற எண்ணம் அவருள்ளத்தில் எழுந்தது. 'நாம் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததோ' என்று அதிசயித்தார்.

அந்நிலையில் கொல்லிமலைச் சாரல் இன்னிசை யரங்க மாயிற்று. பாணரிடையே ஆர்வம் பெருகிற்று, முழவும் சிறுபறையும் முழங்கின; குழலும் யாழும் இயங்கின; இசைத் தழும்பேறிய கைகள் தாளமிட்டன. பாணர் தலைவன் பண்ணேடு ஒரு வண்ணம் பாடினுன். அப்பாட்டை ஆர்வத் தோடு கேட்டான் வீரன். தமிழிசை கேட்டு மனந்தழைத் தான். பாட்டை முடிக்கும்பொழுது, "நல்லிசை யாளும் கொல்லிக்கோவே" என்று எடுத்து இசைத்தான் பாணப் புலவன்.

தன் பெயரைக் கேட்டபோது நாணித் தலை கவிந்தான் தலைவன்; பாடிய பாணர் பசிதீர ஊன் கலந்த சோறும் உயர்ந்த மதுவும் அளித்தான்; நல்ல பொன்னும் மணியும் பரிசாகக் கொடுத்தான்.

படைத்திறமும் கொடைத்திறமும் வாய்ந்த "வல்வில் ஓரி"யைப் பாடினுர் வன்பரணர். அவரது பாட்டின் சுவை யறிந்து மகிழ்ந்தது பழந்தமிழுலகம். கவியரசராகிய கம்பர் உள்ளமும் அப்பாட்டிலே கவிந்ததென்ருல் அதன் செம்மைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

கோசல நாடு செய்த தவப்பயனுகத் தோன்றிய இராமன் வில்லின் செல்வனுய் விளங்கினுன். கொல்லிமலையில் ஓரியின் வல்வில் செய்த வேலையைப் பாணர் கண்டு வியந்தாற் போலவே கோசல நாட்டில் இராமனது வில்லின் வன்மையைக் கண்டு இன்புறும் பேறு பெற்ருேர் கோமுனிவர்.

தருவனத்தில் அம்முனிவர் இயற்றிய தவ வேள்வியைத் தடுத்து அழித்து வந்தாள் தாடகை என்னும் அரக்கி. அவ் வேள்வியைக் காக்க எழுந்தது இராமன் வில். வன்மை

6

சான்ற அந்த அரக்கியை இலக்காக வைத்து வில்லை வளைத்தான் இராமன். எழுந்தது சுடுகணை. தாடகையின் கல்லொத்த நெஞ்சைத் துளைத்தது. அவ்வளவில் நிற்கவில்லை. பின்னும் சென்று நேராக நின்ற மலையைத் துளைத்தது; மரத்தைத் துளைத்தது; மண்ணையும் துளைத்து நின்றது. அவ்வில்லின் செயல் கண்டு வியந்து மகிழ்ந்தான் முனிவன்.

கோசல நாட்டு வில்லாளன் அஞ்சனவண்ணன்; செங்கமலக் கண்ணன்; நிமிர்ந்த தோளன்; நீண்ட கையன்; அவனை "வல்வில் இராமன்" என்று புகழ்ந்தார் கம்பர்.

செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினோடும்
சந்தார் தடந் தோளோடும் தாழ்தடக் கைகளோடும்
அந்தார் அகலத்தோடும் அஞ்சனக் குன்றமென்ன
வந்தான் இவனுகும்அவ் வல்வில் இராமன் என்றாள்.

அரக்கர்கோன் தங்கையாகிய சூர்ப்பணகை.

['கலைமகள் கதம்பம் (1932—1957)' என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றது.]

அருஞ்சொற் பொருள்

செழும்பலா-செழுமை மிக்க பலாப்பழம். தெய்வப்பாவை-கொல்லிமலைப் பாவை. மருட்டி - அச்சுறுத்தி. அமர்க்களம் - போர்க்களம். கனல் - நெருப்பு. வல்வில் - வன்மைமிக்க வில். சுடுகணை - கொலைத்தொழில் புரியும் அம்பு. நெடிய - நீண்ட. அஞ்சனம்-மை.

வினாக்கள்

1. கொல்லிமலையின் இயற்கை வளத்தை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார்?
2. ஓரி எத்தகையவன்?
3. 'வல்வில்' என்று புகழக் காரணம் என்ன?
4. பாணர் கூட்டம் வியப்படையக் காரணம் என்ன?
5. பாணர் கண்ட ஓரியின் தோற்றம் எப்படி இருந்தது?
6. வன்பரணர் பாடிய பாடலின் செம்மைக்குச் சான்று தருக.
7. வல்வில் இராமன் என்று கம்பர் புகழக் காரணம் என்ன?

3. சேக்கிழார்

சிவக் கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார்

ஆசிரியர் வரலாறு: "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்றபடி, தொண்டை மண்டலம் என்பது இவரது நாடு. "தீயவென்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்பு சொல்வரைத்தோ" என்று ஆசிரியர் இந்நாட்டுச் சிறப்பினை எடுத்தருளியுள்ளார். அஃது 24 கோட்டங்களை (உட்பிரிவுகளை) உடையது. அவற்றுள் சிறந்தது புலியூர்க் கோட்டம். அதன் உட்பிரிவுகள் பலவற்றுள்ளும் சிறந்து விளங்குவது குன்றத்தூர் வளநாடு. அதனுட் பல ஊர்களிலும் பெருமையுடன் விளங்குவது குன்றத்தூர் என்ற பதியாகும். அந்நகரில் வழிவழிச் சைவ மரபின் வந்த வேளாண் குடிகள் பல வாழ்ந்தன. அவற்றுட் சிறந்தது சேக்கிழார் மரபு. அக்குடி செய்த பெருந்தவப் பயனும் அருண்மொழித் தேவரும், அவர் தம்பி பாலறுவாயரும் வந்தவதரித்து வாழ்ந்தனர். சேக்கிழார் குடி விளங்கக் குலவிளக்காக அவதரித்த பெருமானாதலின், அருண்மொழித் தேவருக்குச் சேக்கிழார் என்ற குடிப்பெயரே பெயராக வழங்குவதாயிற்று. அவரே பெரிய புராணத்தின் ஆசிரியர்.

அந்நாளில் சோழ நாட்டை ஆண்ட அரசர் குலோத்துங்க சோழர் (அநபாயர்), அவரது (சேக்கிழார்) விழுத்தகைமையினையும் அறிவின் மேம்பாட்டினையும் கேட்டு அவருக்கு உத்தம சோழப் பல்லவன் என்ற உயர்பட்டம் கொடுத்து அவரைத் தமது முதன் மந்திரியாக ஆக்கிக்கொண்டார். அவரும் அவ்வாறே அமைச்சர் தொழில் பூண்டு அரசாங்கத்தைத் திறம்பட நடத்திவந்தார். சோழ நாட்டுத் திருநாகேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள இறைவரிடத்து மிகுந்த அன்பு பூண்டு, அவரைத் தமது ஆன்மநாயகராகக் கொண்டு வழிபட்டு வந்தார். அத்தலத்தில் திருப்பணிகள் பலவும் செய்தார். அங்கு உள்ள நடராசரது சபையும் மண்டபமும் அவரது (சேக்கிழார்) திருப்பணியேயாகும். தமது ஊராகிய குன்றத்தூரிலே தமது மனைக்கட்டு இடத்தில் சிவாலயம் தாபித்து, அதற்குத் திருநாகேச்சுரம் என்று பேரிட்டு பூசைக்குரிய நிபந்தங்களும் செய்தமைத்தனர்.

அவ்வூரில் தமக்கிருந்த நிலம் முதலியவற்றை அக்கோயில் பூசைக்குப் பயன்படுமாறு நியமஞ் செய்தனர்.

அந்நாளில் பலரும் பாராட்டியது போலவே, அருங்கலே விநோதனுகிய அரசனும் சீவகசிந்தாமணி என்னும் சமண சமயக் காவிய நூலேப் பெரிதும் பாராட்டி, அதனுள் மகிழ்ச்சி மிகக் கொண்டனன். அரசனே உண்மை நெறியில் திருத்துதலும், அமைச்சரது பெருங்கடமைகளுள் ஒன்ருதலின், "அஃது இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாத பொய்க் கதை; அதனைப் படித்தல் வீணேயாம்" என்று அரசனே அறிவுறுத்தினர். அரசன், "அப்படியாயின் உண்மையான தவக் கதை எது?" என்று கேட்க, "திருவாரூர்ப் பெருமான் — தில்லேவாழந்தணர் — என்று அடியெடுத்துக் கொடுக்க, நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகை பாடி அடியார்களேத் துதித்தனர். அவர்களது வரலாறுகளேத் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளேயார் உணர்த்தியருள உணர்ந்த நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடித் துதித்தனர். சிவாலய முனிவர் முதலிய பெரியோர்கள் கேட்டு வழிபட்டனர். அவ்வரலாறுகளே இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி தரத்தக்க வரலாறுகளாகும்" என்று அவற்றை அரசன் கேட்க விவரித்துரைத்தனர். அதுகேட்ட அரசன் மிக மகிழ்ந்து அவற்றை விரித்து ஒரு பெருங்காப்பியமாகச் செய்து தரும்படி வேண்டினன். அதற்கிசைந்து அருண்மொழித் தேவர் தில்லேநகர் சார்ந்து நடராசரை வணங்கி வேண்ட, அவர் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்து உணர்த்தியருள, அத்துணே கொண்டு, ஆசிரியர் இப்புராணத்தைப் பாடி முடித்தனர். அச் செய்தி கேட்டு அரசன் மிக மகிழ்ந்து தில்லேக்கு வந்து நடராசரையும் ஆசிரியரையும் வணங்கி நடராசரது அருளாணேயின்படி ஆசிரியர் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து பொருள் விரிந்துரைத்திட அதனே இனிது கேட்டனன். அதற்குப் பல இடங்களுக்கும் ஓலே போக்கிச் சிற்றரசர் மந்திரிகள் முதலிய பலரையும் வரச் செய்து தில்லேவாழந்தணர், மடபதிகள் முதலியோர்களுடன் இருந்து சித்திரைத் திருவாதிரை நாள் தொடங்கி எதிராண்டு சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றுரை ஆசிரியர் நிகழ்த்தக் கேட்டு மகிழ்ந்தனன். வந்தவர்களுக்கெல்லாம்

உணவு உறையுள் முதலியவற்றைக் குறைவற அரசன் தானே ஏவிச் செய்தமைத்தனன். நடராசருக்கு நாடோறும் படியமுதும் நமகபூசை முதலிய சிறப்புக்களும், தில்லை வாழந்தணர்களுக்கும் மடபதிகளுக்கும் படியமுதும் செய்வித்தனன். புராணவுரை நிறைவாயினபின் ஆசிரியரையும் புராணத் திருமுறையினையும் யானைமேல் ஏற்றித் தானும் ஏறி இணைக்கவரி இரண்டு கையிலும் வீசி, "இதுவன்றோ நான் செய்த தவப்பயன்!" என்று உண் மகிழ்ந்தனன். அதன்பின் ஆசிரியருக்கு ஞானமுடி சூட்டித் "தொண்டர் சீர் பரவுவார்" என்ற பெயரும் சூட்டி அரசனும் ஏனை அனைவரும் வணங்கினர். புராணத் திருமுறையினை, முன் நம்பியாண்டார் நம்பிகள் கோவை செய்த பதினொரு திருமுறைகளுடன் சேர்த்துப் பன்னிரண்டாவது திருமுறை என்று நியமித்துச் செப்பேடு செய்து நடராசர் சந்நிதியில் ஏற்றுவித்தனன். ஆசிரியரது தம்பியார் பாலறுவாயரை அழைத்து அவருக்குத் "தொண்டைமான்" என்று பட்டம் அளித்து, அவரை அரசன் தமது மந்திரியாக அமைத்துக் கொண்டனன். ஆசிரியர் பெருமான் தில்லை நகரிலே இருந்து அறுபத்து மூன்று நாயன்மார் சரிதங்களை யுணர்ந்து கொண்டு அடியார்களுடன் கூடி அருந்தவத்திலிருந்து பின் அம்பலவாணரது எடுத்த பாத நிழல் எய்தினர்.

சரித ஆராய்ச்சிக் குறிப்புகள்: ஆசிரியரது இயற்பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பதாகும். அருண்மொழி என்பது இறைவரது திருப்பெயர்களுள் ஒன்று. சேக்கிழார் குடியிற் பிறந்து அக்குடியினை விளக்கும் குலவிளக்காக நிற்பதனல் இவருக்குச் சேக்கிழார் என்ற பெயர் வழங்குவதாயிற்று. இளஞ்சேக்கிழார் பழந்தமிழ் நூல்களில் மிக வல்லவராய் விளங்கியதோடு திருக்குறளைப் பெரிதும் பயின்று சிறந்தனர் என்பர். புராணம் பாடி யரங்கேற்றிய பின்னர், ஆசிரியர் திருத்தில்லையிலே சிவத்தியானத்தில் அமர்ந்தும் திருத்தொண்டர் சரிதங்களை உணர்ந்தும் சிவனடியர்களுடனிருந்து தவம் புரிந்தும் தமது வாழ்நாளின் பிற்பகுதியைக் கழித்துச் சிவனடி சேர்ந்தனர். புராணம் பாடியபின் உலகச் சூழல் தானே அவரை விட்டொழிந்தது. அவருக்குப்பின் அவர் தம்பியாரையே அரசர் தமது அமைச்சராகக் கொண்டனர் என்றும், அதன்பின் வந்த அரசர்களுக்கும் வழிவழியாக

அவரது பரம்பரையினரே அமைச்சர்களாக விளங்கினர் என்றும் உமாபதி சிவாசாரியார் அறிவிக்கின்றார்.

ஆசிரியர் வாழ்ந்த காலம் குலோத்துங்க சோழர் II (அநபாயர்) காலம் என்பது இப்போது ஆராய்ச்சியாளர் பலரும் கொள்ளும் கொள்கையாகும். அஃது இப்போதைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டார் ஆசிரியர் (சேக்கிழார்) காலத்துக்கு முன்னும், ஒட்டக்கூத்தர் அவர் காலத்து உடனுயும், கம்பர் அவர் காலத்துக்குப் பின்னரும் வாழ்ந் திருந்தனர் எனலாம்.

ஆசிரியர் சோழ நாட்டுத் திருநாகேச்சுரத்து இறைவரைத் தமது ஆன்மார்த்த நாயகராகக் கொண்டு வழிபட்டு வந்தனர் என்று உமாபதியார் அறிவிக்கின்றார். அங்கு அவர் பல காலம் தங்கிப் பல திருப்பணிகளும் செய்திருக்கின்ற செய்தி இப்போதும் காணத்தக்கது. அங்குள்ள இறைவரை வழி பட்ட நல்வினைப் பயனுலே அவரது தாயார் அவரையும் அவரது தம்பியாரையும் பெற்றெடுத்தனர் என்றும், அத்தொடர்பு பற்றியே அத்தலத்தில் பல காலங் தங்கியும் அதனைத் தமது அரசியல் அலுவலகமாகவும் வழிபடு தலமாகவும் கொண் டொழுகினர் என்றும், அந் நினைவு பற்றியே தமது ஊரில் (குன்றத்தூரில்) திருநாகேச்சுரக் கோயில் அமைத்தனர் என்றும் கருத இடமுண்டு.

“ மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள் வணங்கி
நாணும் பரவுவார் பிணிதீர்க்கு நலம்போற்றி”

(திருஞான — புராணம்: 412)

என்ற ஆசிரியர் திருவாக்கும் இதற்கு ஆதரவு தருகின்றது. ஆசிரியர் இப் புராணம் தவிர வேறோரு நூலும் இயற்றிய தாகத் தெரியவில்லை.

[திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடாகிய திருத் தொண்டர் புராணத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

அருஞ்சொற் பொருள்

கோட்டம் - கூறு (தாலூகா). திருப்பணி - கோயிற்பணி அல்லது சிறந்த தொண்டு. மறுமை - மோட்சம். மடபதி - மடத்துத் தலைவர். ஆன்மார்த்த நாயகர் - ஞானுசாரியர். நமகம் - உருத்திர மந்திரம்.

வினாக்கள்

1. தொண்டைநாட்டுச் சிறப்பு எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது?
2. சேக்கிழார் என்று பெயர் வரக் காரணம் என்ன? இவரது இயற்பெயர் யாது?
3. "உத்தம சோழப் பல்லவன்" என்ற பட்டம் யாரால் எவருக்குக் கொடுக்கப் பெற்றது?
4. சேக்கிழார் எத்தலத்து இறைவனை வழிபட்டார்? அவ் விறைவனுக்கு அவர் செய்த தொண்டுகள் யாவை?
5. பெரிய புராணம் இயற்றக் காரணம் என்ன?
6. பெரிய புராணம் பாடி அரங்கேற்றப் பட்டதைக் குறித்து 10 வரிகள் எழுதுக.
7. சேக்கிழார் காலம் யாது?
8. பொருள் கூறுக: 1. கோட்டம், 2. விழுத்தகைமை, 3. நிபந்தம், 4. உறையுள், 5. நமகம்.

4. இளைஞர்களுக்கு அறிவுரை

திரு நெ. து. சுந்தரவடிவேலு, M.A., L.T.

மாணவ மாணவியர்களே !

உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன் போற் போற்றிப் பயன்படுத்தப்பட வேண்டிய பருவம். வாய்ப்போ கிடைத்தற்கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக் கூடங்களே இல்லாத ஆயிரக்கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந் நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத் திருக்கிறதென்றால், அதை எளிதாகவோ அலட்சியப்படுத்தக் கூடியதாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப் பையும் நன்றாக முழுதும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தில் கற்கவேண்டுவன வெல்லாம் கற்றுக் கொள்ளுங்கள்; பெறவேண்டிய திறமைகளை யெல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள்; தேடிக்கொள்ள வேண்டுவனவெல் லாம் தேடிக் கொள்ளுங்கள்.

கல்வி கரையற்றது

கற்க வேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்து விட்டனவாக எண்ணாதீர்கள். கற்க வேண்டுபவைகளை அறிமுகப்படுத்துபவைகளே அவை. பாட நூல்களுக்கு அப்பால் — பரீட்சைகளுக்குத் தொடர்பில்லாதவை — பல வற்றை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்; படிப்பை முடித்தபின், அவைகளைக் கற்கலாம் என்று மட்டும் காலந் தாழ்த்தாதீர்கள்.

வெறும் ஏட்டுப் படிப்பு தகவல்களைத்தான் கொடுக்கும்; அறிவொளியைத்தான் வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன்பெறும் திறமையை நீங்கள் பெற முயல வேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றையெல்லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப்படிப் பெறத் தவற வேண்டா.

பிஞ்சிற் பழுக்கவேண்டா

இளம் பருவத்தே உங்களை மயக்கக் கூடியவை பற்பல.

“ எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்ற அறவுரையை மனத்திற்கொண்டு, கல்வியிலே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகத்தான் நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும். மாணவர்களாக இருக்கும்போதே அரசியல் வாதிகளாகிவிட வேண்டா என்று மட்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். எதற்கும் காலமுண்டு. காலம் வரும்போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசியல் வாதிகளாவது பிஞ்சில் பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப்படி இருக்குமென்பது நீங்கள் அறியாத தன்று.

உடலோம்பல்

உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவை இல்லை. அதன் தேவையையும் சிறப்பையும் உணர்ந்திருந்தாலும் வசதிக்குறைவும் வேறு பொழுது போக்குக் கவர்ச்சிகளும் உடற்பயிற்சியை மறக்கச் செய்து வருகின்றன. இது பெருந்தீங்கு. “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்” என்பது பொருள் நிறைந்த பொன் மொழி. உடல் வலிமை இல்லாதவன் எல்லா வசதிகளும் பெற்றிருந்தாலும், தனக்கும் பிறருக்கும் முழுப்பயன் அற்றவனாகத்தான் இருக்க நேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்ய வழிவகை செய்து கொள்ளுங்கள்.

ஒப்புரவு

“ ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ”

என்ற பொய்யா மொழியையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஏட்டுப் படிப்பு அல்லது தொழிலறிவு ஆகியவற்றை ஊட்டுவதோடு கல்வி நிற்கக்கூடாது. அது நமக்குக்

கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்கவேண்டும். ஒழுக்கம் என்னும்போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்கவில்லை; மக்களோடு மக்கள் எப்படிப் பழகுவது, எங்கெங்கு எப்படி நடப்பது, பொது இடங்களில் எப்படி நடப்பது என்பவைகளையும் சேர்த்துத்தான் குறிக்கிறேன். கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற அறிவாளி, கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதையெல்லாம் பாழாக்கும் காட்டாறு போன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் இளமையிலேயே கற்றுக் கொள்க.

கற்றதனால் ஆய பயன்

நல்ல உறுதியான உடலும், கூரிய மதியும், கட்டுப்பாடும், ஒழுங்கும் எதற்குப் பயன்பட வேண்டும்? யாருக்குப் பயன்படவேண்டும்? ஆக்கத்திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனித சமுதாயம், அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப் படுமோ என அஞ்சி அஞ்சி அல்லலுறுகின்றதன்றோ? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தவறியதேயாகும். அறிவும் வலிவும் வளர்ந்த அளவுக்கு மக்களின் உள்ளம் வளர்ந்தபாடில்லை; ஆகவே, வலிமையெல்லாம்—அறிவெல்லாம்—இதுவரை "தான்" என்கிற சிறையிலிருந்து வெளிப்படவில்லை. தன் பெண்டு, தன் பிள்ளை என்கிற தன்னலம், பொதுநலத்திற்கு ஊறாக நிற்கிறது. "தான்" என்பதைக் குறைத்து "நாம்" என்பதைப் பெருக்கப் பெருக்கத்தான், நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்.

மக்கட் பண்பு

பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் உள்ள குறள்,

> "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்"

என்று இடித்துரைப்பதை மறந்துவிடாதீர்கள். கல்வியின்

நோக்கம் மக்கட்பண்பைப் பெறுவதே. எது மக்கட் பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட் பண்பானது, பிறிதின் நோய் தந்நோய்போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிறானோ, அவனே கல்விமான். மற்றவர்கள் எவ்வளவு அறிந்திருந்தாலும் எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் மக்கள் நிலையை அடையாதவர்களே. மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்று கவனிப்போம்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்

வறுமை, அதன் விளைவான பட்டினி; அதன் விளைவான மூட நம்பிக்கைகள், அறியாமை, மூடப் பழக்க வழக்கங்கள்; சாதி ஏற்றத் தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை; சமயநெறி, அதன் விளைவான சமயப் போராட்டங்கள்; இவற்றின் கூட்டு விளைவான அமைதியின்மை—ஆகிய துன்பங்களை நாம் அனுபவித்து வருகிறோம். இத்துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டு வைக்கலாமா? நீக்க முடியும், நீக்க வேண்டும் என்பதே என் முடிவு. பிற நாடுகள் செய்து காட்டிய முடிவாகும்.

நல்குரவு

வறுமை ஒரு சமூகத் தொற்றுநோய். அதைப் போக்குவது சமூகத்தின் முதற் கடமை. அதனை எவ்வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினால் எல்லோரும் வறுமையின்றி வாழலாம் என்பது உண்மையா? பெற்ற பொருள்களை இப்போதுள்ள முறைக்கு மாறாக விநியோகிப்பது வாயிலாக வறுமையைப் போக்குவதா?" என்ற கேள்விக்குப் பதில் என்னிடத்திலிருந்து எதிர் பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்துவிட்ட மற்றொன்றை நான் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்களின் செலவு முறையைக்

குறிப்பிடுகிறேன். மயக்கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்கு கிறோம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப் படுத்தும் துறைகளுக்கு மிகுதியாகச் செலவிடக் கற்றுக்கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரி யாத மக்களை எம் முறையும் காப்பாற்ருது என்பதை மறவா தீர்கள்.

அறியாமை

தற்குறித் தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர் போனதைப் போன்றே தற்குறித் தன்மைக்கும் நம் நாடு உலகறிந்ததாய் இருக்கிறது. அறி யாமையின் விளைவாய் நம்மிடையே உள்ள மூட நம்பிக்கை களும் கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. நாம் மக்கள் தன்மையை முழுதும் அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றையெல்லாம் விரைவில் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகிவிட்டவர்களை மண்ணுங்கட்டி நிலையில் விட்டுவைப்பது இழிவு மட்டுமன்று, பெருந்தீங்கு மாகும். எனவே, இத் தலைமுறையின் முழுக்கவனமும் முயற்சியும்,

"எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலைஞானத்தால்
பராக் கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலைபோல்"

கீர்த்தி ஓங்கிடுவதற்கான பணிகளில் திருப்பப்பட வேண்டும். இதற்கான பொறுப்பையும் உழைப்பையும் நாட்டு அரசிற்கு மட்டுமே விட்டுவிடாமல் பொதுமக்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும்; விரைவில் பகிர்ந்துகொண்டு வேகமாகப் பணி புரிய வேண்டும். 'அப்படிப் பகிர்ந்துகொள்ள முடியுமா?' என்ற ஐயம் எழலாம். முடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை. இன்றும் நாட்டில் நடக்கும் 'தர்மங்களை'ப் பார்த்தவர்களுக்கு ஐயமிராது. நாட்டில் நடக்கும் அறங்களை யெல்லாம் கலவிக் கூடங்கள் மூலமாக நடக்கும்படி செய்வது நம்முடைய கடமை.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி ஞயிரம் நாட்டல்

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

என்ற காலத்திற் கேற்ற நல்லுரையை எடுத்துக் காட்டி, கல்விப் பணிக்கான எல்லா உதவிகளையும் செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

சாதி வேற்றுமை

சாதி உயர்வு தாழ்வு நம்மைப் பீடித்துள்ள மற்றொரு பெருநோய்; தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்தே இல்லாத நோய்; இடையிலே பெற்ற நோய்; விரைவில் ஒழிக்கப்பட வேண்டிய நோய்; உயர்வு, தாழ்வு எங்கு இல்லை? ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் உருவில் இருக்கிறது என்கிற முடக்குவாதம் நம்மை முன்னேறவொட்டாமல் தடுக்கும்; அவ்வாதத்திற்குச் செவிகொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்ட முடியாது.

"எல்லோரும் ஓர் குலம்,
"எல்லோரும் ஓர் இனம்."
"யாதும் ஊரே யாவரும் கேளிர்-"
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்."

என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடைகளில் கேட்டுத்தான் வருகிறோம். இவற்றைத் தமிழனது உயர்விற்கு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி வருகிறோம். ஆனால், நாம் உண்மையிலே சாதிகளை விட்டு மக்களாகும் வழியில் நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே. நம்மை விட்டுச் சாதி வெறி போகவில்லை என்பதற்குக் காரணம் என்ன? சாதிகளை வைத்துக்கொண்டே பேச்சளவில் சாதிப் பற்று வேண்டாமென்று கூறி, வெறும் பொழுது போக்காக வேலை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இடமும் காலமும் கிடைத்தபோது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழிய வேண்டுமென்றால், சாதிகள் இல்லாத நிலை ஏற்பட வேண்டாவா? அதற்கான வழியை இனித்தானா அறிந்து கொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான

பேச்சால் மட்டும் கிட்டுமா? கூட்டத்தில் கூடிநின்று, கூடிப் பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளவிட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத் திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அன்றோ முடியும்? அந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர்பார்ப்பது அதிகமா?

சமய வெறி

சமயப் பற்றும் சமய வெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது சமயம் மனிதனுடைய தனி விவகாரம். கூட்டு வெளிச்சத்திற்காக அதைப் பொது விவகாரமாக்கிப் பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது நல்லதன்று. சமயம் மக்களை ஒழுங்குபடுத்திப் பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் கோலத்தில் இல்லை; சீலத்தில் இருக்கிறது என்பதை நினைந்து, அதற்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.

முடிவுரை

உருவால் மக்களாகப் பிறந்த நாம், நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்குத் தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் இருக்குமா என்பதைக் காலந்தான் காட்ட வேண்டும். அத்தகைய உரமும் உறுதியும் பெருக உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியோர்களை வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவர் காட்டிய வழியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

['கலைக்கதிர்' வெளியீடாகிய 'பூவும் கனியும்' என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றது.]

அருஞ்சொற் பொருள்

வாய்ப்பு—சந்தர்ப்பம். காலம் தாழ்த்துதல்—கால தாமதம் செய்தல். உடலோம்பல்—தேகத்தைப் பாதுகாத்தல். பிஞ்சிற் பழுத்தல்-வெம்பிப் போதல். ஆய-உண்டாகிய. ஊறு-தடங்கல். இடித்துரைப்பது-வலியுறுத்திக் கூறுவது. நல்குரவு-வறுமை. தற்குறி-எழுத்தறிவில்லாமை. உரம்-வலிமை.

வினாக்கள்

1. "மக்கட் பண்பு" என்பது யாது?
2. மாணவப் பருவத்தைப்பற்றி ஆசிரியர் கூறுவது யாது?
3. வாழ்க்கைக்கு வேண்டியவற்றை எவ்வாறு பெறலாம்?
4. மாணவர் அரசியலில் ஈடுபடுவதுபற்றி ஆசிரியர் கூறுவது யாது?
5. உடலோம்பலின் இன்றியமையாமையைச் சுருக்கி வரைக.
6. கல்வி கற்பதன் பயன் யாதாக இருக்க வேண்டுமென ஆசிரியர் கூறுகின்றார்?
7. சமூகத்தை வாட்டும் நோய் எது? அதனை எவ்வாறு நீக்குவது?
8. அறியாமையை நீக்க நாம் யாது செய்ய வேண்டும்?
9. ஏழைக்கு எழுத்தறிவித்தல் பற்றிப் பாரதியார் கூறுவது யாது?
10. சாதி வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் யாவை?

விவேகானந்தர் விடுத்த கடிதம்

யோகஹாமா
10-7-1893

சென்னையிலுள்ள அன்பர்களுக்கு எனது ஆசிகள். நேர மின்மையால் அடிக்கடி நிருபம் எழுத இயலவில்லை.

பம்பாயிலிருந்து நாங்கள் கொழும்பு நகரம் போய்ச் சேர்ந்தோம். நாங்கள் ஏறிச்சென்ற கப்பல் நாள் முழுவதும் அத்துறைமுகத்திலேயே தங்கியிருந்தது. ஆதலின் நாங்கள் மரக்கலத்தை விட்டிறங்கி நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றோம்; வீதியை வலம் வந்தோம். ஆங்குக் கோவிலொன்றிலுள்ள நிர்வாண நிலைபுகும் புத்தர் உருவம் இப்போதும் எனது நினைவிற்கு வருகின்றது.

அடுத்தபடியாக அக்கப்பல் சென்று தங்கிய துறைமுகம் பினங்கு. அந்நகரம் மிக்க அழகிய 'மலாய்த்' தீவுகளின் கரையோரத்திலுள்ளது. மலேயர் அனைவரும் மகமதியர்; முன்னாளில் அவர்கள் கடற்கொள்ளையில் பெயர் பெற்றவர்கள். மலேயர் என்றால் வியாபாரக் கப்பல்களுக்கு நடுக்கம்தான். பினங்கிலிருந்து சிங்கப்பூருக்குப் போகும் வழியில் உயரமான மலைகள் மிகுந்த "சுமத்ரா" தீவு வெகு தூரத்தில் தெரிந்தது. கடற்கொள்ளைக்காரர்கள் கரந்துறையும் பல இடங்களை அக்கப்பல் தலைவன் எனக்குச் சுட்டிக் காட்டினான்.

மலாய்த் தீவுகளின் தலைநகரம் சிங்கப்பூர். தாவர இனம் பலவும் நிறைந்த எழிற்பூங்கா வொன்று அந்நகரில் உண்டு. அப்பூங்காவில் மிகச் சிறந்த பலவகைப் பனைமரங்கள் உள. வனப்பு வாய்ந்த கூந்தல் பனை அத்தோட்டத்தில் மிக அதிகம். சென்னையில் மாம்பழம் எவ்வளவு மிகுதியோ, அவ்வளவு ஏராளமாக ஆங்கு மங்குஸ்தான் பழங்களைக் காணலாம். சிங்கப்பூர் மக்கள் சென்னை வாசிகளைப்போல் அவ்வளவு கறுப்பாக இரார். அந்நகரிலேயே நேர்த்தியான கண்காட்சிச் சாலை (Museum) ஒன்று இருக்கிறது.

அப்பால் "ஹாங்காங்" நகர் சேர்ந்தோம். அந்நகரத்தில் சீனரே மிகவும் அதிகம். அநேகமாக வர்த்தகமும், கைத்தொழில்களும் அவர்கள் கையில்தான் இருக்கின்றன. துறைமுகத்தில் கப்பல் புகுந்ததும், கரைக்கு அழைத்துச் செல்ல நூற்றுக்கணக்கான சீனப்படகுகள் அங்கே காத்து

நிற்கும். இரண்டே துடுப்புகள் கொண்ட அப்படகுகள் வெகு விசித்திரமானவை. தன் குடும்பத்துடன் படகோட்டி அப் படகிலேயே வசிப்பது வழக்கம். சாதாரணமாக அவன் மனைவியே துடுப்பின் அருகில் இருப்பாள். அவள் ஒரு கையால் ஒரு துடுப்பையும், ஒரு காலால் மற்றொரு துடுப்பை யும் அசைத்துப் படகை ஓட்டுவாள்.

சீன மாதரில் பெரும்பாலோர் நீளக் குடுமியுடன் விளங்கும் சிறு குழந்தைகளைத் தங்கள் முதுகில் கட்டிக் கொண்டிருப்பர். வந்து மோதும் பேரலைக்கு ஏற்றவாறு திறமையாக அத் தாய், படகைச் செலுத்தும்போதும், மூட்டை களைப் புரட்டும் போதும், ஒரு படகிலிருந்து மற்றொரு படகிற் குத் தாவிச் செல்லும் போதும் அச் சீனக்குழந்தை அமைதி யாக அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டிருப்பது வெகு விநோதமாக இருக்கும். அத் தொழிலில் கால் கை சிறிது தவறினாலும் குழந்தையின் தலை சுக்கல் சுக்கலாகிவிடும். ஆனால், அக்குழந்தையோ இவை ஒன்றினையும் பொருட்படுத் தாது அன்னை கொடுக்கும் அடையைக் கையில் கொண்டு சுவைத்துக் களித்திருக்கும்.

கப்பலருகே வந்துபோகும் சிறு படகுகளுக்கும் நீராவிப் படகுகளுக்கும் கணக்கு வழக்கில்லை. சீனக் குழந்தைகள் தத்துவ ஞானிகள் போலும்! இந்தியச் சிறுவர்கள் தவழ்ந்து விளையாடும் பருவத்தில் சீனச் சிறுவர்கள் அமைதியாக வேலைக்குச் செல்கின்றனர். விதியில்லாது வேலை செய்தே வாழவேண்டும் என்ற உண்மையை அவ்விள வயதிலேயே அவர்கள் அறிகின்றனர் போலும்! தாங்க முடியாத வறுமை யாலேயே சீன நாகரிகமும் இந்திய நாகரிகமும் குன்றி இக் கதியடைந்து கிடக்கின்றன. அன்றாடம் காலம் தள்ளுவதே கடினமாக இருப்பதால் ஏனையவற்றைக் குறித்து நினைக்க நேரமேது?

'ஹாங்காங்' மிக அழகிய பட்டினம். ஒரு மலையின் சரிவிலும் உச்சியிலும் அது நிறுவப் பெற்றுள்ளது. செங் குத்தான மலையுச்சிக்கு மின்சார வண்டிகள் போய் வருகின் றன. அந் நகரில் நாங்கள் மூன்று நாட்கள் தங்கினோம்; அப்பால் "**காண்டன்**" நகருக்குச் சென்றோம். அந்நகரத் துக்கும் கடற்கரைக்கும் 128·75 கி.மீ. தூரம்.

அது ஒரு நதிக்கரையில் அமைந்துள்ளது. அப்பப்பா! அங்கே என்ன சந்தடி! என்ன நெருக்கம்! ஆற்று நீர் ஒரு சிறிதும் தெரியாதபடி அங்கு அவ்வளவு படகுகள் கூடியிருக்கும். வாணிபம் புரியப் படகுகள் மட்டுமல்ல, வீடுகளாக அமைந்துள்ள படகுகள் ஆயிரக்கணக்காகும். அப் படகு வீடுகள் மிகப் பெரியனவாயும் வெகு நேர்த்தியாயும் இருத்தலுடன், இரண்டு மூன்று மாடிகளும் சுற்றிலும் தாழ்வாரமும் கொண்டு விளங்கும். இடையிலே நெடு வீதிகளும் உண்டு. இவைகளை மிதக்கும் வீடுகள் எனலாம்.

ஜனத்தொகை நிரம்பியிருப்பினும், அங்குள்ள மனிதர் மிகச் சுறுசுறுப்பாயிருப்பினும், காண்டன் நகரைப்போல் மகா அசுத்தமான நகரை நான் கண்டதில்லை. ஊர் எங்கும் குப்பையும் கூளமும் குவிந்து இருக்கும் என்பதல்ல. சீனன் எந்த அழுக்கையும் வீண்படுத்துவதில்லை. ஒருநாளும் நீராடுவதில்லை என அவர்கள் விரதங்கொண்டுளர் போலும்! ஒவ்வொரு வீடும் ஒரு கடையென்னலாம். வீட்டின் மேல்மாடியிலேயே மக்கள் வசிக்கின்றனர். தெருக்கள் மிகவும் குறுகியிருக்கும். வீதியில் நடந்து செல்லும்பொழுதே இரு பக்கத்துக் கடைகளும் கைக்கு எட்டும். மூன்று மீட்டர் தூரத்துக்கு ஒரு மாமிசக்கடை தென்படும். பூனை, நாய் இவைகளின் இறைச்சியை விற்கும் கடைகளும் உள. சீனரில் பரம ஏழைகளே அவற்றினை வாங்கி உண்பர்.

உயர்நிலையில் உள்ள சீன மாதரை வெளியே பார்க்க இயலாது. வட இந்தியாவில் உள்ள இந்து மாதர் படி தாண்டாப் பத்தினிகளாக இருப்பதுபோல், உயர் சீன மாதரும் வெளியில் வாரார். தெருவிலே கூலி வேலை செய்யும் ஏழை மாதரைத்தான் வெளியில் பார்க்கக் கூடும். அவர்களது பாதம் இளங் குழந்தையின் பாதத்தைப்போல் சிறுத்திருக்கும். அவர்கள் நடந்து செல்லுகின்றனர் என்று சொல்வதினும், தத்தித்தத்தி நகருகின்றனர் என்று கூறுவதே பொருந்தும்.

நான் அனேக சீன ஆலயங்களைச் சென்று பார்த்தேன். காண்டன் நகரில் உள்ள மிகப் பெரிய கோயிலானது

ஐந்நூறு சீடர்களுடன் விளங்கிய முதல் பௌத்த சக்கர வர்த்தியினது ஞாபகார்த்தமாகச் சமைக்கப்பெற்றது. அந்த ஆலயத்தில் புத்த பகவானது பிம்பமே நடுநாயகமாக விளங்கு கின்றது. அம் மூர்த்திக்குச் சிறிது கீழே சக்கரவர்த்தியின் சிலையும், அச் சிலைக்கு இரு பக்கங்களிலும் சீடர்களது உரு வங்களும் உள. அச் சிலைகள் அனைத்தும் மரத்திலே மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன.

பின்னர் காண்டன் நகரிலிருந்து நாங்கள் ஹாங்காங் கிற்குத் திரும்பி ஜப்பான் தேசம் சேர்ந்தோம்; முதன் முதலில் நகசகி என்னும் நகரை அடைந்தோம். சிறிது நேரமே அங்குக் கப்பல் தங்கியபோதிலும் நாங்கள் கரையில் இறங்கி அந் நகருக்குள் சென்றோம். காண்டன் நகருக்கும் இந் நகருக்கும் என்ன வேறுபாடு! பூவுலகிலே மகா சுத்தமான மக்களில் ஜப்பானியரும் ஒருவர். ஜப்பானிலுள்ள வீதிகள் எல்லாம் விசாலமாயும் தளம் போடப்பட்டும் இருக்கின்றன. சிறிய உருவமும், அழகிய மேனியும் அதிசய உடையும் கொண்ட ஜப்பானியரும் அவரது நடை உடை பாவனைகளும் வெகு நேர்த்தி. அழகுக்கு உறைவிடம் ஜப்பான் என்று கூறலாம்; வனப்பு மிக்க தோட்டமில்லாத வீடுகளை அங்கே காண்பது அரிது.

நகசகி நகரினின்று "கோப்" என்னும் பட்டணத்துக்குப் போனேம். அங்கிருந்து நிலவழியாக யோகாஹாமா நகரம் சேர்ந்தோம். பின்னர் ஜப்பான் தேசத்தின் நாட்டுப்புறத்தைப் பார்க்க எனக்கு ஆவல் உண்டாயிற்று. ஒஸாகா, கியோடா, டோகியோ ஆகிய மூன்று பெரிய பட்டணங்களையும் போய்ப் பார்த்தேன். ஒஸாகா நகரம் தொழிற்சாலை நிரம்பிய இடம்; கியோடா பழைய தலைநகரம். தற்சமயம் தலைநகராக விளங்குவது டோகியோ; உள்நாட்டில் அந்நியர் போவதாயின் பிரயாண அனுமதிச் சீட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்.

காலதேச வர்த்தமானத்தை ஜப்பானியர் நன்கு உணர்ந் துளர். ஜப்பானியப் படை மிக்க ஒழுங்கும் தக்க ஆற்றலும் கொண்டது; பீரங்கிப் படை வகுப்பும் பொருந்தியது. அச் சேனை கையாளும் பீரங்கி ஜப்பானியத் தளகர்த்தனொருவனல்

கண்டு பிடிக்கப்பட்டது. கடற்படையையும் ஜப்பானியர் வலுப்படுத்தி வருகின்றனர்.

ஜப்பானிலுள்ள தீக்குச்சித் தொழிற்சாலைகள் பார்க்கப் பேரின்பம் விளைக்கும். இன்றியமையாத அனைத்தையும் தங்கள் நாட்டிலேயே தேடியமைத்துக் கொள்ள அவர்கள் முனைந்துள்ளனர். ஜப்பானில் அநேக ஆலயங்களைக் கண்டேன். ஒவ்வொரு கோவிலிலும் வங்க மொழியில் சில வடமொழித் துதிப்பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆலயக் குருமார்களில் சிலருக்குத்தான் வடமொழி தெரியும். அவர்களனைவருவரும் மிக்க அறிவாளிகள். முன்னேற்றம் வாய்ந்துள்ள தேசத்தினருக்கு இணையாக இருத்தல் வேண்டும் என்ற ஆசை அக்குருமார்களிடம் குடி கொண்டுள்ளது. ஜப்பானியரைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்தனைத்தையும் இச் சிறு கடிதத்தில் எழுதிவிட முடியாது.

நமது வாலிபரில் பலர் ஆண்டுதோறும் ஜப்பானுக்குப் போக வேண்டும். இந்தியா என்றால் ஜப்பானியர் மிகவும் மேன்மையாகவும் சிறப்பாகவும் மதித்திருக்கின்றனர். அங்ஙனமிருக்க இந்திய இளைஞர்காள்! உங்களுடைய நிலைமைதான் என்னே! வீணும் வம்பும் பேசி வாணாளை வீணாகக் கழிக்கின்றீர்களே! ஜப்பானை வந்து பார்ப்பின் நீங்கள் வெட்கித் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு முகத்தை மூடிக்கொள்ள நேரும்.

அயல் தேசம் சென்றால் ஜாதி கெட்டுப்போய்விடுமாம்; என்னே பேதைமை! சென்ற ஆயிரமாண்டுகளாக இங்ஙனம் மூட நம்பிக்கை கொண்டு "இந்த உணவைத் தொடலாம்! இந்த ஆகாரத்தைத் தொடக்கூடாது" என்று விவாதம் செய்து கொண்டு கருணையற்றுக் கிடக்கின்றீர்களே! நீங்கள் எம்மட்டு! இந்நேரத்தில் என்ன சாதிக்கின்றீர்கள்?

கடற்கரை மணலில் கையும் புத்தகமுமாய் அமர்ந்திருந்து மேனாட்டு மேதாவிகள் மொழிந்ததாகக் கூறும் சில வசனங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு மாதம் முப்பது ரூபாய் வருமானமுள்ள கணக்கர் வேலைக்குத்

தாளம் போடுகின்றீர்கள். ஒரு வேளை வழக்கறிஞராகிவிட்டால் அதுவே பெரும் பேறெனமயங்கிக் கிடக்கின்றீர்கள். உண்ணும் உணவுக்கு எத்தனை பேர். உங்கள் குடும்பத்தில் உங்களையே நம்பியுள்ளனர். இந்திய மாணவர்காள்! உங்களையும் உங்களது புத்தகங்களையும், பட்டங்களையும், பிறவற்றையும் கருங்கடல் விழுங்காதோ?

வாலிபர்களே! ஆண்பிள்ளைகளாகக் கிளம்புங்கள்! குறுகிய வளையை விட்டு மிகப் பரந்த உலகை உற்று நோக்குங்கள்! எங்கும் எத்தகைய முன்னேற்றம் என்பதைப் பாருங்கள்! மானிட இனத்தின்மீது உங்கட்கு உள்ளன்பு கிடையாதோ? தாய்நாட்டினிடத்தில் பற்று இல்லையோ? இருப்பின் இனியாவது நாம் உயரிய நிலையை அடைய முயற்படுவோமாக; பின்னோக்க வேண்டாம்; முன்னோக்கி நிமிர்ந்து நிற்போம். எது வரினும், யாவர் வீழினும் பின்னோக்காது முன்னோக்கி முனைவோமாக!

தன்னலம் கருதாது தொண்டு புரிய ஆயிரம் இளைஞரேனும் தேவை. மாக்கள் வேண்டாம்; மக்களே வேண்டும். நமது பழைய நாகரிகத்தினைப் பண்புறச் செய்யவே ஆங்கிலேயரை ஆண்டவன் இங்கே அனுப்பினான் போலும்! ஆதியில் ஆங்கிலேயருக்கு இடங் கொடுத்த சென்னை மாநகரமே! ஏழைக்கு இரங்கி, பசிநோய் போக்கி, பாமரருக்கு ஞானச் சுடர் கொளுத்தி விலங்குபோல் வாழும் மாந்தரை விழுமிய மனிதராக்கும் நற்றொண்டினைத் தன்னலம் கருதாது வீரம் குன்றாது புரிவதற்கு நீ எத்தனை ஆண் மக்களை உதவப் போகின்றாய்!

இங்ஙனம்

விவேகானந்தன்.

குறிப்பு: பகட்டினை விரும்பாது சந்தடியின்றி ஓயாது சாந்தமுடன் தொண்டு புரிதலே நற்றொண்டு.

['விவேகானந்தர் கடிதங்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

வினாக்கள்

1. விவேகானந்தர் தமது மரக்கலப் பயணத்தைப்பற்றி யாது கூறுகின்றார் ?
2. சிங்கப்பூரின் சிறப்பைக் குறிக்க.
3. மலேயர் பற்றி அடிகள் குறிப்பிடுவன யாவை ?
4. சீன மக்களைப்பற்றி அடிகள் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.
5. ''ஹாங்காங்'' நகரம் அமைந்துள்ள விதத்தினைக் கூறுக.
6. ஜப்பானிய மக்கள் பற்றி அடிகள் கொண்டுள்ள கருத்தினைப் புலப்படுத்துக.
7. இந்திய வாலிபர்களுக்கு அடிகள் கூறும் நல்லுரைகள் யாவை ?
8. சென்னையை விளித்து விவேகானந்தர் கூறுவனவற்றை எழுதுக.

அருஞ்சொற் பொருள்

மரக்கலம் - கப்பல். வனப்பு - அழகு. நிர்வாணம் - மோட்சம். தத்துவஞானி - மெய்யறிவாளர். ஆலயம் - கோவில். காலதேச வர்த்த மானம் - நேரம், இடம், நிகழ்ச்சி.

பயிற்சி

1. பள்ளிப் படிப்பினைப்பற்றி உனது தந்தைக்கு ஒரு கடிதம் எழுது.
2. நீ வசிக்கும் கிராமத்தின் இயற்கை எழில் பற்றி ஒரு நிருபம் வரைக.

6. இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம்

திரு. புலவர் சரவண ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.

கவிநயத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்த வள்ளுவனார், பண்புடையார் தொடர்பு பயில்தொறும் இன்பம் மிகுவதை விளக்க "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்னும் சிறந்த உவமையை வழங்கியுள்ளார். "செவியிற் சுவை யுணரா, வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்", "செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக் கும் ஈயப்படும்" என்னும் குறள்களில் செவிச்சுவை மக் களின் பிறப்புரிமையாகும் என்றும், அஃதிலார் மக்கள் பிறப்பினரே ஆயினும், மாக்களே யாவார் என்றும் அவர் கூறுவன காண்க. சுருங்கக்கூறின், பசி, நீர் வேட்கை, அவலக் கவலை, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் போக்கி, மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்து என்றும் இளமையராக்கவல் லது இவ்வின்பம்.

இத்தகைய இன்பத்தைச் சிறந்த செந்தமிழ்க் கவிதை யாகிய முத்தொள்ளாயிரத்தில் வரும் மூன்று "ஓவியங்களி" லிருந்து செவிமடுத்து மகிழ்வோம். முதலில் பாண்டியனது போர்க்களச் சிறப்பியல்பைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு காட்சிக்குப் போவோம்.

கண்புதைத்தல்

பாண்டியனது படைகளும், மாற்றாரது சேனைகளும் போர்க்களத் தெதிர்த்தன. யானைப்படை யானைப்படை யோடு பொருதது. காலாட்கள் காலாட்களைத் தாக்கினர். எதிரியின் சார்பில் கணக்கற்ற போர் வீரர் விண்ணுலகெய் தினர். தம் காதலர் போரிற் பொன்றினர் என்று கேள்வி யுற்ற அவர்தம் மனைவியராகிய வீரப்பெண்டிர் போர்க் களம்புக்கு, "இனி உயிர் வாழோம்" என்று உறுதிகொண்டு தீ வளர்த்து அதிற் புகுந்தனர். இச்சமயத்து, வேப்பந்தார் புரளும் பாண்டியன் களிறேறிப் போர்க்களம் பார்க்கப் புறப்பட்டான். அவன் அப்போது கண்ட காட்சி—பெண்டிர் தீப்பாயும் காட்சி — பொறுக்கலாற்றாத அக்காட்சி — அவன் உள்ளத்தைப் பிடித்து அறுத்தது. அதற்கு மேலும் அதைக் காணப்பொறாத மாறன் தன் மேலாடையின் முன்றானையில்,

தன் கண்களைப் புதைத்துக் கொண்டான். கண்களினின்றும் வழிந்தோடிய நீரையும் அப்படியே துடைத்துக்கொண்டு மிருக்கலாம். புலவர் தீட்டிய இச்சொல் ஓவியம் ஒரு காட்சியாக நம் உள்ளத்திரையில் படிகின்றது. இதை ஓவியமாகவும் மாணவர்கள் தீட்டி மகிழலாம். இதோ இருக்கிறது அக்காட்சிப் பகுதி.

"ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி"

என்பது அது. இனி இக்காட்சியின் மற்றொரு பகுதியும் பார்க்கத் தகுந்தது. அரசனது துயரம், அவனோடு விட்ட பாடில்லை; அஃறிணைப் பொருளாகிய யானையையும் பற்றியதாம். களிற்றியானையின் செய்தி என்ன? அரசன் ஏறிவந்த களிறும், பிற களிறுகளும் போர்க்களத்தைப் பார்த்தன. மாற்றாரது களிறுகள் மாய்ந்து கிடப்பதைக் கண்டு ஆற்றாத அவற்றின் பிடிகள், பொலிவிழந்தனவாய்ப் புன்மை நிறைந்து புலம்ப, அதனைக் கண்ட களிறுகளும் தம்மரசனைப் போலவே பொறுக்கலாற்றாது தம் கண்களை மூடிக்கொண்டன. போரில் வெற்றி என்பது ஒன்று கிடைத்தாலும், அதனைக் கூர்ந்து பார்க்கும்போது, துயரம் என்பது உள்ளூரத் தங்கிக் கிடக்கும் என்பதை இச்செய்யுள் தெற்றெனக் காட்டுகிறது. அவலச் சுவை வழிந்தோடுமாறு யானைக் கண் புதைப்பதில் ஆசிரியர் அமைத்துள்ள நயம் வியத்தற்குரியது. பாட்டு முழுவதையும் இப்போது பார்ப்போம்.

"ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி—யானையெல்லாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்யானை அட்ட களத்து"

புறங்கடை நின்றது

இனி அடுத்துச் சோழனது "யானை மறத்தை"ப் பார்ப்போம்; மலைபோன்று பருத்துத் திரண்டு வலிமையுடையனவாய் விளங்கும் தோள்களை யுடையவன் "கிள்ளி". அவனது களிறு போர்க்களத்தினின்று மீண்டது. போரிலிருந்து மீண்ட வீரரையெல்லாம் வரும் வழியைப் பார்த்துக்கொண்டு, "வரு

வார்கொழுநர்'' எனக் கதவம் திறந்து வைத்துக்கொண்டிருக்கும் அவர்தம் காதலியர் வரவேற்று மகிழ்ந்தனர். ஆனால், சோழனது களிற்றை வரவேற்க, அதன் பிடி காத்துக்கொண்டிருந்தும், களிறு கோட்டைக்குள்ளேயே வரவில்லை; புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் உள்ளே போகவில்லை? தன் அருமைக் காதலியின் முகத்தில் விழிப்பதற்கும் நாணிப் புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் நாண வேண்டும்? பிடியினது கண்ணையும் கருத்தையும் கவரவல்ல கட்டழகோடு களிறு விளங்கிற்று, போருக்கு முன். போருக்குப் பின்? முடிவை நோக்கினால் முன்னைய பொலிவில்லை. கொடிகள் தூக்கிய மாற்றார் மதில்களைக் கோடுகொண்டு குத்தித் தகர்த்ததால் நுனி சிதைந்து முறிந்தன கொம்புகள். அடியை நோக்கினால் அங்கேயும் முன்னைய அழகில்லை. ஏன்? முடி சூடிய மன்னர்களையும் தன் அடிகொண்டு இடறித் தேய்த்த காரணத்தால், எண்ணற்ற முடிகளோடு உராய்ந்து, நகங்களும் தேய்ந்து உருவிழந்தன. அவை காரணமாக, பிடியின் முன்செல்ல, அழகழிந்து தோன்றும் பொல்லாமைக்கு நாணி, புறங்கடையிலேயே நின்றுவிட்டதாம்!

கோடும் நகமும் பொலிவிழந்தன என இழிவாகக் கூறினும், புலவர், அவையே வீரக்களிற்றின் வெற்றிச் சின்னங்கள் என உய்த்துணரவைத்து, களிற்றின் அழகையும் வீரத்தையும், கிள்ளியின் தோள்வலியோடு சேர்த்துப் பாராட்டி, காதலையும் உடன்கூட்டி இழிவில் வைத்துச் சொன்ன நயத்தை வியவாது என் செய்வது! இயல்பாகவே புறங்கடையில் யானை நின்றதை, உள்ளே சென்ற நாணியது என்ற தன் குறிப்பை, அதன்மேல் ஏற்றிப் புலவர் புனைந்துரைத்த தற்குறிப்பேற்ற அணிநயமும் பாராட்டற்பாலது. பாட்டையே முழு உருவத்தில் பார்ப்போம்:

"கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார் தோட் கிள்ளி களிறு"

என்பதே அச்செய்யுள்.

முத்தமிழ் வேந்தரில் மாறனது மறத்தைக் கண்டோம். செம்பியனது சீரை யறிந்தோம். சேரனது சிறப்பையும் ஒரு செய்யுளில் பார்ப்போம். இயற்கை வளம் செறிந்து விளங்கும் சேர நாட்டினது சிறப்பை, புலவர் தீட்டியுள்ள ஒரு சொல் ஓவியத் துணைகொண்டு காண்போம். செவ்வாம்பற் பூக்கள் செக்கச் செவேரென்று பூத்துக் கிடக்கின்ற நீர்வளமிக்க வயல் ஒன்றில் அன்னம் முதலிய நீர்ப்பறவைகளும் நீந்திக் கொண்டிருக்கின்ற சேரநாட்டின் ஒரு காட்சியைப் புலவர் கண்கொண்டு பார்ப்போம்.

வெள்ளம் தீப்பட்டது

மாற்றார் மனத்தில் நச்சுப்போல் அச்சத்தை விளைவிக்கக் கூடிய இலைவடிவு கொண்ட வேற்படையைக் கையில் ஏந்திய சேரனது நாட்டில் பகைவர் படையெடுத்து வருவர் என்று குடிகள் நடுக்குற்று அஞ்சிக் கூக்குரலிட வேண்டிய இன்றியமையாமை யில்லை. அவ்வளவு பாதுகாவல் உண்டு. அங்கு. எனினும் ஓர் ஆரவாரம் மட்டும் கேட்கின்றது. அது என்ன ? சிறகுகளாகிய தம் கைகளாலே தம் இளங் குஞ்சுகளை நீர்ப்பறவையினங்கள் அணைத்துக் கொள்ளுகின்ற ஆரவாரம் இருக்கின்றது. ஏன் தம் குஞ்சுகளை அவை அணைத்துக் கொள்ள வேண்டும்? தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும் தீப் பிடித்துவிட்டது என்று கருதி, அஞ்சி, தம் உயிர் கொடுத்தேனும் தம் இளங்குழவிகளைக் காக்கவேண்டும் எனக் கருதியமையால் அங்ஙனம் அணைத்துக் கொண்டன. தீ எப்படிப் பிடித்தது ? தண்ணீரில் தீப் பிடிக்குமா ? தீயுமில்லை, ஒன்றுமில்லை. சேறுசிறக்கும் அவ்வயலில் செந்நிறம் பொருந்திய ஆம்பல்கள் இதழ் விரிந்து மலர்ந்திருக்கின்றன. மிகுதியாகப் பூத்திருந்ததால். தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும் செந்நிறம் பரவியிருப்பதை, வெள்ளம் முழுவதும் தீப்பரவியது போல, பகுத்தறிவு அற்றவையும், குஞ்சுகளின்பால் தாய்மையருள் உற்றவையும் ஆகிய இப்பறவைகள் கருதிவிட்டன. அவ்வளவே. இதைத்தான் புலவர் கற்பனைக் காட்சியாக நமக்களிக்கின்றார்.

மேலும், பறவையின் கவ்வை தவிர வேறொரு கவ்வை யும் எழக் காரணமில்லை கோதை நாட்டில், என ஒழித்துக் காட்டணியின் வாசம் இதில் வீசுகிறதல்லவா?

" செஞ் ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார் நின்னிழல் வாழ்வோரே
திரு விலல்லது கொலைவில் லறியார்
நாஞ்சில் அல்லது படையு மறியார் "

என்னும் புறப்பாட்டு அடிகளை இதனோடு ஒப்பிடுக. சேர நாட்டின் நீர்வளமும், நிலவளமும், சேரனது வீரமும் அதோடு நகையும் வெளிப்படுகின்ற ஒரு கலவைச் சுவையை யல்லவா இதில் நாம் சுவைக்கின்றோம்? இயல்பாகவே செந்நிறம் படிந்திருக்கின்ற சிறப்பில், பறவைகள் தீப்பிடித்த தாகக் கருதின என்னும் தன் குறிப்பை யேற்றிப் புலவர் வைத்திருக்கும் தற்குறிப்பேற்ற வாசமும் இதில் கலந்து வீசுகிறது. பறவையின் சிறகுகளை, அருமைத்தாய் சேயினை அணைக்கும் செங்கைகளாகச் சிறப்பித்ததில் உருவக நயமும் காண்க. இதோ இருக்கிறது முழுப்பாட்டும்.

" அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு"

இவ்வழகிய பாட்டின் சொல்லும் பொருளும்,

" வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிம் முதுமதி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே, திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று "

என்ற 'ஈங்கோய் எழுபது' பாடலிற் பயில்வதை ஒப்பு நோக்கிச் சுவைத்தல் சிறந்த இன்பம் பயப்பதொன்றும்.

இத்தகைய சொல்லோவியங்கள் நிறைந்த செந்தமிழ்க் கவிதையே "முத்தொள்ளாயிர" மாம்.

[புதுவைக் கல்விக் கழகத்தின் 'வெள்ளிவிழா நினைவு மல'ரி லிருந்து எடுக்கப்பட்டது.]

171524

அருஞ்சொற் பொருள்

நவில்தொறும் - கற்கும்போதும் அவியினும் - அழியினும். உணர்வு - சுவை. மாக்கள் - விலங்குகள். அவலம்-துன்பம். செவி மடுத்து - கேட்டு. கண்புதைத்தல் - கண்ணை மூடிக்கொள்ளுதல். பொன்றினர் - அழிந்தனர். வேப்பந்தார் - வேப்பமாலை. மாறன் - பாண்டியன். மாற்றார் - பகைவர். தெற்றென - தெளிவாக. மறம்- வீரம். கொழுநர் - கணவர். கதவம் - கதவு. பிடி - பெண்யானை. கோடு-தந்தம், நச்சு-விடம். கவ்வை-ஒலி. வாசம்-மணம்.

வினாக்கள்

1. பாண்டியன் கண் புதைக்கக் காரணம் என்ன ?
2. களிற்றினங்கள் துயருக்குக் காட்டப்படும் காரணங்கள் யாவை ?
3. சோழனது யானைகள் புறங்கடை நின்றது ஏன் ?
4. நீர்ப்பறவையினம் தம் குழவிகளை அணைத்துக் கொள்ளக் காரணம் என்ன ?
5. வெள்ளத்தில் எப்படித் தீப்பிடித்தது ? விளக்குக.

பயிற்சி: உங்கள் பாடப் பகுதியில் வந்துள்ள பாடல்களின் நயத்தை மேற்கூறியவாறு எழுதிப் பழகவும்.

பிரித்து எழுதுக : 1. செந்நிறம், 2. வேற்படை, 3. முத்தமிழ், 4. செவ்வாம்பல், 5. நச்சிலைவேல்.

7. தேக சுகம்

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

குழந்தை பிறந்ததும் அழுகிறது. அந்த அழுகை ஆகாரத்துக்கு அல்லவா? ஆகையால் நம் உணவுதான் முதன்மையான ஸ்தானத்தில் இருக்கிறது. போஷணை சரியாக இல்லாவிட்டால் வியாதிக்கு இடம் உண்டாகும். சரியான உணவு கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும், சில விஷயங்களைக் கவனித்தே ஆகவேண்டும். சாப்பிடும் பண்டங்களைக் கையாளுகிற சமையற்காரன், பாற்காரன் முதலியோர், டைபாய்டு, சீதபேதிக் கிருமிகளைத் தம் கைகளில் (நக இடுக்குகளில்) அறியாமலே தூக்கிச் செல்லுகிறார்கள். பெரிய சிறைச்சாலைகளிலும் மாணவர் விடுதிகளிலும் உள்ள அனேகருக்கு இவ்விதக் கொள்ளை நோய்கள் (Epidemic Diseases) வந்ததற்குக் காரணம் அங்குள்ள சமையற்காரர்களும் பாற்காரர்களுமே என்று பல தடவைகளில் தெரியவந்தது. இது தவிர, வீட்டிலுள்ள ஈக்களும் நம்முடைய ஆகாரங்களின் மூலம் இவ்வியாதிகளைப் பரப்புகின்றன. மேலும் நமக்குக் கரண்டிகளை உபயோகித்துச் சாப்பிடும் வழக்கம் இல்லாததால், சாப்பிடும் முன்பு கைகளையும் நக இடுக்குகளையும் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து கொள்வது மிகவும் நல்ல வழக்கம்.

சாப்பிடும்போது மனச் சந்துஷ்டியுடன் சாப்பிட வேண்டும். மன வியாகுலமோ, கவலையோ கொஞ்சமும் கூடாது. இன்பம் உண்டாகும் வண்ணம் நல்ல இடத்தில் நண்பர்களுடனும், உறவினர்களுடனும் கூடிச் சாப்பிடுவது பழங்கால வழக்கம். "கூடிப்புசி" என்னும் பழமொழி இன்னும் வழங்குகிறது. மன வியாகுலத்துடன் உண்டால் ஜீரண சக்தி குறைவுபடும். ஆகாரம் அதிகச் சூடாகவோ அதிகக் குளிர்ச்சியாகவோ இருக்கக் கூடாது. மசாலை, பெருங்காயம், மிளகாய் மற்றுமுள்ள தாளிக்கும் திரவியங்கள் அநாவசியமாக வயிற்றுக்கு அதிக வேலை கொடுக்கின்றன. இதனால் நம்முடைய இராஜதானியில் வயிற்றிலும் சிறுகுடலிலும் புண்கள் அதிகமாகக் காணப்பட்டு, கடைசியாகப் பெரிய சஸ்திர சிகிச்சையில் (Surgery) வந்து முடிகின்றன.

நாம் சாப்பிடும் உணவை மெதுவாகவும் நன்ருகவும் மென்று உமிழ்நீருடன் கலக்கும்படி செய்த பிறகே விழுங்க வேண்டும். இதனுல் ஆகாரம் வாயில் முதல்முதலில் ஜீரண மடைகிறது. ஜீரண நீர்கள் எல்லாம் கரடு முரடாக உள்ள பதார்த்தங்களில் மேலாக மட்டுமே கலக்கும். பற்களால் மிருதுவாகச் செய்த பண்டங்களோடு சேர்ந்தால் ஜீரண நீர்கள் அவற்றின் ஒவ்வோர் அணுவையும் நன்ருக ஜீரணப்படுத்தி, வயிற்றின் வேலையைக் குறைத்து, வயிற்றில் புளிப்பு (Fermentation), புளியேப்பம், உப்புசம், வயிற்றுவலி இவைகளைத் தடுக்கும். சாப்பாட்டில் தண்ணீர் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. சாதாரணமாக அநேகர் சாப்பிடும்பொழுது மடக்கு மடக்கென்று தண்ணீர் அருந்துகிருர்கள். அதனுல் ஜீரண நீர்கள் மிகவும் நீராகி (நீர்த்துப்போய்) நன்ருய் வேலை செய்வதில்லை. தென்னிந்திய உணவுகளில் இரசம், மோர் முதலானவைகளில் எவ்வளவு நீர் சேர்ந்திருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

தண்ணீரும் நம் தேகத்திற்கு மிகவும் அவசியமான பொருள்தான். ஆனுல் அதை ஆகாரத்திற்கு ஒன்றரை அல்லது இரண்டுமணி நேரத்துக்குப் பிறகுதான் நிறைய அருந்த வேண்டும். அச் சமயத்தில் அத் தண்ணீர் ஜீரணமாக உணவுச் சத்தைக் கரைத்து இரத்தத்தில் சேர்க்கவும், வேண்டாத பொருள்களைக் குடலின் கீழ்ப்பாகத்திற்கு அடித்துக் கொண்டு போகவும் உதவியாக இருக்கும். அழுக்கு மேற்குடலில் சேராமல் கீழுள்ள பெருங்குடலில் போய் மலமாகச் சேருகிறது. தவிர, தண்ணீர் இரத்தத்தில் சேர்ந்து, அதிலுள்ள அழிவுப் பதார்த்தங்களை வேர்வையாகவும் மூத்திரமாகவும் வெளியில் கொண்டுவந்து விடுகிறது. காலையில் பல் துலக்கியவுடனும், இரவில் படுக்கப் போகு முன்பும், ஒரு தம்ளர் குளிர்ந்த தண்ணீர் குடிப்பது நல்ல பழக்கம். குடிக்கும் தண்ணீர் சுத்தமாயும் கிருமிகள் இல்லாததாயும் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை. அதற்காக நன்ருய்க் கொதிக்க வைத்துக் குளிரச் செய்த தண்ணீரையே உபயோகப்படுத்துவது மிகவும் நல்லது.

இது சம்பந்தமாக, மற்றும் சில பானங்களைப்பற்றிய சில விஷயங்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். கரிய மில வாயு (Carbon-di-oxide) கலந்த சோடாத் தண்ணீர் வயிற்றுக்கு நன்மை பயக்கும். ஆனால் ஜீரண சக்தி சரியாக இருந்தால் அது அவசியம் அன்று. எலுமிச்சம் பழ ரசத்தைச் சர்க்கரையுடன் தண்ணீரில் சேர்த்து, நீரிழிவு இல்லாமலிருப்பவர்கள் குடிக்கலாம். நீர்மோரும் இளநீரும் உடலுக்கு நல்லவை. காப்பியும் டீயும் உற்சாகமளிப்பனவாக இருந்தாலும், தேக சௌக்கியத்துக்கு அவசியமல்ல. அவை அளவுக்கு மீறினல் அஜீரணம், படபடப்பு, தூக்கமின்மை, நரம்புச் சோர்வு முதலியவற்றை உண்டாக்கும். ஆனல் அவற்றிலுள்ள பாலையும் சர்க்கரையையும் தனியாகவோ அல்லது கோகோவுடனே இராகிக் கஞ்சியுடனே சாப்பிட்டால் நல்ல உணவாகும். சாராயம் சேர்ந்த பானங்கள் மிகத் தீமை விளைவிக்கும். இளம் பருவத்திற்குப்பின் வயது முதிர முதிர வேலைக்குத் தக்கபடி ஆகாரத்தையும் குறைத்துக் கொண்டே வரவேண்டும்.

சுருட்டு, பீடி முதலிய இலாகிரி வஸ்துக்களை உபயோகித்தால் அஜீர்ணம் உண்டாவதுடன், இரத்தக் குழாய்கள் சீக்கிரமாகக் கனத்து அதிக இரத்த அழுத்தமும் (High Blood Pressure), வேறு பல வியாதிகளும் ஏற்பட ஏதுவாகின்றன.

உடல் வலிவுக்குத் தக்கபடி எல்லா வயதிலும் தேகாப்பியாசம் செய்ய வேண்டியது அவசியம். அதேபோல் தேகத்திற்கு ஓய்வும் வேண்டும். கடும் வேலை செய்பவர்கள் கொஞ்சம் அதிகமாகவே தூங்க வேண்டும். தூங்கச் செல்லும்போது வயிற்றில் ஆகாரம் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். நல்ல காற்றுள்ள அறையில் சன்னல்களை நன்ருய்த் திறந்து வைத்துக் கொண்டு தூங்க வேண்டும். எவ்வளவு குளிராக இருந்தாலும், கம்பளத்தினல் முகத்தைப் போர்த்துக் கொள்ளக்கூடாது.

தினந்தோறும் காலையில் எழுந்திருந்ததும் ஒரு தடவை சரியானபடி மல சுத்தி செய்யவேண்டிய மிகவும் அவசியம். மலச்சிக்கலால் விளையக்கூடிய தீங்குகள் கொஞ்சநஞ்சம் அல்ல. பெருங்கடலில் எப்பொழுதும் விஷக் கிருமி

கள் இருக்கின்றன. அவைகளால் உண்டாகிற விஷ பதார்த்தங்கள் வெளியில் போக வேண்டும். மலச்சிக்கலால் இரத்தம் கெட்டுப் பலவித விஷவியாதிகள் ஏற்படும். இவற்றைத் தடுக்க வேண்டுமானுல் ஆகாரத்தில் கறிகாய் கள், நெய், எண்ணெய், பால் தயிர் இவையெல்லாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். தினந்தோறும் ஒரே வேளையில் காலந் தவருமல் மலசுத்தி செய்யும் வழக்கத்தை அநுசரிப்பதி மிகவும் முக்கியம். கீழ்க் குடலுக்கு ஒரு வழக்கத்தை உண்டாக்குவது சுலபமான விஷயம். மலச் சிக்கலை நீக்க வழக்கமாய் மருந்து சாப்பிடுவதோ, எனிமா எடுத்துக் கொள்வதோ கூடாது. ஏதாவது வயிற்று வலி இருந்தால் அநேகர் உடனே பேதிக்கு மருந்து சாப்பிடுகிருர்கள். வயிற்றுவலிக்குக் காரணங்கள் பல இருக்கின்றன. சில வயிற்றுவலிகள் குடல் வியாதிகளால் ஏற்படுகின்றன. அப்பொழுது பேதி மருந்து சாப்பிடுவதைப் பற்றி ஒரு வைத்தியர்தாம் தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக குடல் அனுபந்தம் (Appendicitis) என்ற வியாதி மும்முரமாக இருக்கையில் அநேக வியாதியஸ்தர்கள் வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் பேதி மருந்தைச் சாப்பிட்டதனுல் குடலில் துவாரமுண்டாகி எதிர்பாராத மரணத்தை அடைந்திருக்கிருர்கள். இம்மாதிரி அநேகம் தாய்மார்கள் குழந்தைகளின் வயிற்று வலிக்கு, அறியாமையால் பேதி மருந்தைக் கொடுத்துத் தம்முடைய குழந்தைகளுக்குக் கொலையாளிகளாக இருந்திருக்கிருர்கள் என்று ஒரு பெரிய சஸ்திர வைத்திய நிபுணர் தமது புத்தகத்தில் எழுதியிருக்கிருர்.

தேக சுத்த விஷயங்களில் முதலில் கவனிக்க வேண்டியவை பற்களேயாம். நாம் சாப்பிடும் ஆகாரத்தின் சிறு சிறு அணுக்கள் பற்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்டு, அழுகி நோய்க் கிருமிகள் வளர வசதியளிக்கின்றன. ஆகவே எயிறுகளிலும், பற்களுக்கு அஸ்திவாரமாக இருக்கும் இரண்டு தாடை எலும்புகளிலும் சீழ் உண்டாகி, எச்சில் விழுங்கும்போது வயிற்றுக்குள் அந்தச் சீழ் போவதுமல்லாமல், சிறு இரத்தக் குழாய்கள் வழியாக இரத்தத்திலும் சேர்ந்து வாத நோய்களை உண்டாக்கலாம். இவ் வியாதியஸ்

தர்களோடு பேசும்போது, அவர்கள் வாய் நாற்றம் அருவருப்பாக இருக்கும். இவ்வியாதியஸ்தர்களில் சிலர், மூட்டு நோய் வரும்போது அதற்குக் காரணமாக இருக்கும் பற்களை எடுத்துவிட வேண்டும் என்றால் டாக்டரைப் பார்த்து நகைக்கின்றனர். "என்ன டாக்டர்! மூட்டு எங்கு இருக்கிறது? பல் எங்கு இருக்கிறது? அந்த இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?" என்கிறார்கள். ஏனெனில், ஒவ்வொரு சமயமும் உமிழ் நீரோ ஆகாரமோ விழுங்கும்போது கொஞ்சம் சீழையும் விழுங்குகிறார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை. வேறு சிலர், "என்ன டாக்டர், நம்முடைய முன்னோர்க்கு இந்த வியாதியே தெரியாதே. பழைய நாள் கிழவர்களில் எத்தனை பேர்களை நல்ல கெட்டியான பற்களோடு பார்த்திருக்கிறோம்! அவர்களெல்லாம் நம்மைப் போலவா புருசுகளையும் (Brushes) பிசின்களையும் (Pastes) உபயோகித்தார்கள்?" என்று பரிகாசமாய்ப் பேசுகிறார்கள். அவர்களுக்குச் சில விஷயங்கள் தெரிய வேண்டும். எகிப்து தேசத்தில் அநேக ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் புதைக்கப்பட்டிருந்த மனித தேக எலும்புகளை விஞ்ஞான சாஸ்திரிகள் சோதித்துப் பார்க்கும்போது பல் தாடை எலும்புகளில் இப்பொழுதுள்ள பல வியாதிகள் அந்தப் பண்டை நாட்களிலும் இருந்ததற்கு அத்தாட்சிகள் இருந்தன. அந்த நாட்களில் நாகரிகத்தினால் உண்டாகும் தீமைகள் இல்லாமல் இருந்ததால் அப்பொழுது இருந்த ஜனங்கள் அவசரமில்லாமல் தேகத்திலுள்ள முக்கிய அம்சங்களை நன்கு கவனித்து வந்தார்கள். கறிகாய்களை மிகவும் வேகவைக்காமல் பற்களை நன்றாக உபயோகித்து வந்ததால் அவை பலமாக இருந்தன. கரியையும் மற்ற மருந்துப் பட்டைகளையும் பற்பொடியாகச் செய்து உபயோகித்தும், ஆலவிழுதுகளின் நுனிகளால் பற்களின் இடைகளை நன்றாகச் சுத்தம் செய்தும் வந்தார்கள். நாமும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? இரவில் படுக்கப் போகும் சமயத்திலும் ஒரு தடவை பல் துலக்குவது நல்ல பழக்கம்.

அடுத்தபடியாக, நம்முடைய தேகத் தோலை உடம்பிலுள்ள சதைக்கு உறையாக மட்டும் கருதக் கூடாது. அதற்கு வேறொரு முக்கியமான வேலையும் இருக்கிறது. அது நமது தேகத்தின் உஷ்ண நிலையைச் சரியான அளவில் வைத்துக் கொள்கிறது. ஆதலால், நம் தேசம் போன்ற உஷ்ணப்

பிரதேசங்களில் அதை நன்ருகப் பாதுகாத்து வரவேண்டும். தேகத்தில் மிகச்சிறிய துவாரங்கள் அநேகம் இருக்கின்றன. நாம் அறியாமல் எப்பொழுதும் இத் துவாரங்கள் வழியாய்த் தேகத்திலுள்ள நீர் ஆவியாகி, நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றில் போய்க் கலந்துகொண்டே இருக்கிறது. இந்த நீர், தேகத்துக்கு வேண்டாத விஷப் பொருள்களைத் தேகத்திலிருந்து வெளியேற்றுகிறது. ஆகையால் இந்தச் சிறு துவாரங்கள் அழுக்குகள் நீங்கி நன்ருய்த் திறந்திருக்க வேண்டும். எனவே, இவற்றைச் சுத்தமாக வைக்க ஸ்நானம் செய்ய வேண்டியது அவசியம். குளிர்ந்த நீரில் குளிப்பதே உடம்புக்கு நன்மை விளைவிக்கும். உடம்பைத் துடைத்துக் கொண்டதும் தேகத்தில் உஷ்ண உணர்ச்சி இருக்க வேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் பயன் உண்டு. சருமத் துவாரங்களிலுள்ள கொழுப்புச் சேர்ந்த அழுக்குகள் எண்ணெயில் சுலபமாய்க் கலந்து சிகைக்காய் அல்லது சோப்பினுல் நீக்கப்படுகின்றன.

தேகத்தில் பூசிக்கொள்ளும் பவுடர், பிசின் வகைகள் அவசியமே இல்லை. அவற்றை உபயோகித்துத்தான் தீர வேண்டுமென்ருல் ஒவ்வொருவருக்கும் அவை தனித்தனி இடப்பிகளில் இருக்க வேண்டும். ஒருவர் உபயோகித்ததை மற்ருெருவர் உபயோகிக்கக் கூடாது. அணிந்துகொள்ளும் ஆடைகள் மெல்லியனவாயும், இலேசாயும், காற்று அவற்றின் வலைக் கண்கள் வழியாக உள்ளும் வெளியும் செல்லும்படியும் இருக்க வேண்டும். அவை உடம்பை எவ்விதத்திலும் பந்தனம் செய்யக் கூடாது. பெரும்பான்மையோர் பாதங்களுக்குச் செருப்பு அணிவதில்லை என்பது வருந்தத்தக்கது.

தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவுவது மனச் சந்துஷ்டியோடு இருப்பதே. தினசரி வழக்கமான வேலைகள் முடிந்த பிறகோ சாயந்திர நேரங்களிலோ சோர்வுற்ற நம் மனத்திற்குக் களிப்பூட்டும்படியாகப் பொழுதைப் போக்க வேண்டும். எத்தகையோரிடத்திலும் கூடிக் கலகலப்பாய்ப் பேசி உறவாட வேண்டும். அதனுல் நம் மனவியாகுலம் அகலும். ஏனெனில், ஏகாந்தத்தில் பெரிய அபாயம் உண்டு, அப்படி இருப்பவர்கள் உலக அநுபவத்தை நன்கு அறியாமல். தங்களுடைய சிறு குற்றங்களையே பெரியனவாக எண்ணி,

தங்களை மற்றவர்களைவிடத் தாழ்மையாளவர்களாகக் கருதி ஏங்குகிறார்கள். மற்றவர்களுடைய குற்றங் குறைகளை அறிந்து, தாங்கள் அநேகரை விட எவ்வளவோ மேம்பட்டவர்கள் என்பதை உணருவதில்லை. ஆகையால்தான் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பையே அடைகின்றனர். வீணாக எதற்கும் கோபிக்கக் கூடாது. என்ன செய்தாலும் பரபரப்புக் கூடாது. மனம் சந்தோஷம் அடைந்தால் உடல் நலம் பெறும்.

அருஞ்சொற்பொருள்

ஸ்தானம் - இடம். சந்துஷ்டி - மகிழ்ச்சி. வியாகுலம் - வருத்தம். திரவியம் - பொருள். துவாரம் - சந்து. பிரதேசம் - இடம் பந்தனம் - கட்டு.

வினாக்கள்

1. உணவு உட்கொள்ளுவதற்கு முன்பும், பின்பும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் யாவை?
2. சாப்பிடும்போது ஏன் தண்ணீர் குடிக்கக் கூடாது? எப்பொழுது குடிக்கவேண்டும்?
3. காபி, தேநீர் இவற்றைக் குடிப்பதால் தோன்றும் தீமைகள் யாவை?
4. ஓய்வு எடுக்கையில் நாம் செய்ய வேண்டுவன யாவை?
5. தாய்மார்கள் குழந்தைகளின் உடல் நலம் பற்றி எத்தகைய முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்?
6. பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எவ்வாறு? அவ்வாறில்லாவிடின் ஏற்படும் தீமைகள் யாவை?
7. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் உண்டாகும் பயன் யாது?
8. ஆடைகளை அணியுங்கால் நாம் எம்முறையைக் கையாள வேண்டும்?
9. மக்களில் சிலர் வாழ்க்கையில் வெறுப்படையக் காரணம் யாது?

பயிற்சி :
1. "வீடும் வெளிப்புறமும்" என்பது பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக?
2. கிராம சுகாதாரத்தை நாம் மக்களுக்கு எவ்வாறு நன்கு அறிவுறுத்தலாம்? உரையாடல் முறையில் எழுதுக.

8. எது அறிவு?

திரு. கி. ஆ. பெ. விசுவநாதன்

அறிவு என்பது எது? எது அறிவு? என்னென்னவோ, எவரெவராலோ ஆராயப்பெற்று வருகிற இக்காலத்தில் நாம் இதையாவது, இப்போதாவது ஆராய வேண்டாமா? ஆராய்வோம். இன்றேல், "நாம் அறிவைப் பெற்றிருக்கிறோம்" என்று எவ்வாறு கூறுவது?

அறிவு, கண்களால் காணக்கூடிய ஒரு பொருளல்ல; என்றாலும் மக்களின் செயல்களைக் கொண்டே அதை ஆராய்ந்து அறிய வேண்டி யிருக்கிறது. அறிவுடையவர்கள் "நல்லவர்கள்" என்றும், அறிவற்றவர்கள் "பொல்லாதவர்கள்" என்றும் சொல்லப்பெற்று வருகின்றது.

இது உண்மையாகுமானால், "எதை அறிவு என்று கூறுவது?" என்பது விளங்கவில்லை. இதனை ஆராயும்பொழுது நமக்குப் பல ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

அறிவைக் காண வேண்டுமானால், உண்டு, உறங்கி, ஓய்ந்து கிடக்கும் நல்ல பிள்ளைகளிடம் சென்று பயனில்லை. ஓயாது "சேட்டை" செய்து விரைவாகத் துன்பத்தை விளைவிக்கும் பொல்லாத பிள்ளைகளிடத்துத்தான் அறிவைக் காண முடிகிறது.

பணத்தை முடிந்து தோளில் போட்டுக்கொண்டு நடந்து செல்லும் நல்ல மனிதர்களைவிட, அதனை அவிழ்த்து எடுக்கின்ற "முடிச்சவிழ்க்கிகள்" அறிவை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். உயர்ந்த பொருளை வைத்து உள்ள விலை கூறுகின்ற நல்ல வியாபாரிகளைவிட மட்டப்பொருளை வைத்து அதிக விலைக்கு விற்றுப் பொய்கூறிப் பொருள் தேடும் "பொல்லாத வியாபாரிகள்" அதிக அறிவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். நேர்மையாகத் தொழில் செய்கின்ற உத்தியோகத்தர்களைவிட இலஞ்சம் வாங்கித் தொழில் செய்யும் "உத்தியோகத்தர்களுக்கு" அதிக அறிவு வேண்டியிருக்கிறது.

உடலை வருத்தி உழைத்துழைத்து உண்ணுகின்ற கிராம மக்களைவிட உழைக்காது உண்ணுகின்ற நகர மக்கள் அதிக அறிவுடையவர்களாகத் தோன்றுகிறுர்கள். பொதுநலங் கருதித் தொண்டு செய்து வருகின்ற உண்மையான உழைப்பாளிகளைவிடத் தன்னலங் கருதிப் "பொதுத் தொண்டு செய்வதாக நடிக்கின்ற" தீய மக்களிடத்து அதிக அறிவு காணப்படுகிறது.

முடிவாகக் கூறுமிடத்து, "யோக்கியர்களை விட அயோக்கியர்களே அதிக அறிவுடையவர்களாக இருக்கிறுர்கள்" எனக் கூறலாம். "நல்ல மனிதன்" என்ருல், "பாவம்! ஒன்றும் தெரியாதவர்" என்றும், "பொல்லாத மனிதன்" என்ருல், "எவராலும் ஏமாற்ற முடியாதவர்" என்றும் பொதுவாக நம்மிடையே வழங்கி வருகிற ஒரு வழக்கம் இதனை மெய்ப்பிக்கிறது!

அவ்விதமாயின், எது அறிவு? எவரிடத்துக் காண்பது அறிவு? பொல்லாத மக்களிடத்திலிருந்துதான் அறிவு ஒளி வீசுமா? நல்ல மக்களிடமிருந்து "அது ஒளி வீசாதா?" என்ற கேள்வி நம்மிடையே விரைவாக எழும்.

இக்கேள்வியைப் பலரிடத்தும் கேளுங்கள். வருகின்ற விடைகள் உங்கள் அறிவுப் பசிக்கு ஏற்ற உணவாக இருக்கிறதா என்றும் சுவைத்துப் பாருங்கள். பிறகு இதே கேள்வியைத் திருவள்ளுவரிடம் போய்க் கேளுங்கள். ஏனெனில் அவர்தாம் "எது அறிவு?" என்பதைக் காட்டக் கூடியவர். அவர் ஒருவர்தாம் "அறிவு எது?" என்பதைக் காட்டியிருக்கிறுர். "அது எது?"

மண்ணை, பெண்ணை, பொன்னை - பொருளைக் கண்டால் மனம் அவற்றையடைய அவற்றின் மீது தாவுமாம்! மனத்தை அவ்வாறு செல்ல விடாமல் தடுத்து, தீய எண்ணங்கள், தீய செயல்களிடத்திலிருந்து விலக்கிக் காப்பாற்றி நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களினிடத்து அதைச் செலுத்துவது எதுவோ, அதுவே அறிவு என்று வள்ளுவர் கூறுகிறுர்.

இக் கருத்துக்களடங்கிய வள்ளுவரது சொற்களை அவருடைய வாக்கினாலேயே கேளுங்கள் :—

" சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு "

என்பதே அவரது வாக்கு.

"மனம் சென்றவிடமெல்லாம் அதனைச் செல்லவிடாது தடுத்து, தீமைகளிலிருந்து விலக்கி நல்லவற்றினிடத்துச் செலுத்துவதே அறிவு" என்பது இதன் பொருள்.

"மனமே அறிவு" என மயங்கியிருப்பதனாலும், மனத்தின் செயல்களனைத்தும் அறிவின் செயல்களெனக் கருதியிருப்பதனாலுமே மேலே கண்ட ஐயப்பாடுகள் நமக்குத் தோன்றின. மனம் வேறு, அறிவு வேறு என்றும், மனத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றே அறிவு என்றும், மனத்தை அடக்கி ஆள்வதே அறிவு என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுவதிலிருந்து நமது ஐயப்பாடுகளனைத்தும் அழிந்து ஒழிகின்றன.

"மனம் செல்லும் வழிகளைத், தவறு என எடுத்துக் காட்டித் திருத்தி நல்ல வழிச் செல்ல அறிவு அறிவுறுத்தினாலும் அதனையும் மீறிச் செயலாற்றும் வலிமை மனத்திற்கு உண்டு" என்பதை வள்ளுவர் "நன்றின் பாலுய்ப்பது அறிவு" என்ற சொற்களால் கூறாமற் கூறுகிறார்.

திருடனுடைய மனம் திருட எண்ணுகிறது. திருடத் துணிகிறான். பிறகு திருடுகிறான். திருடும்போது அஞ்சி நடுங்குகின்றான். ஏன்? "அது தவறு" என்று அவனுடைய மனத்துக்கு அறிவு அறிவுறுத்துகிறது. அறிவு உணர்த்தியும் தான் உணர்ந்தும் அறிவின் வழிச் செல்லாமல் ஆசையால் தூண்டப்பட்ட மனத்தின் வழிச் சென்று திருடி விடுகிறான். அறிவையும் மீறி மனம் செயலாற்றும் முறையை விளக்க இதுவொன்றே போதுமானதாகும்.

திருடுவது, பொய் சொல்லுவது, இலஞ்சம் வாங்குவது, ஏமாற்றுவது, நெறி தவறுவது ஆகிய எதுவும், எவ்வளவு திறமையாகச் செய்யப்பட்டாலும் அது அறிவின் செயலல்ல;

மனத்தின் செயலே என்றும், அதன் தவறுகளை உணர்த்தி நல்ல வழியிற் செல்லத் தூண்டும் செயலே அறிவின் செயல் என்றும் திருவள்ளுவரின் திருக்குறள் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

கண்டவிடமெல்லாம் கருத்தைச் செலுத்தி ஓடி அலையும் மக்களுக்கு உண்மை உணர்த்தி, நல்வழி நடத்தும் பெற்றோர்கள் அறிவின் உரு ஆவார்கள். துள்ளித் திரியும் இளங் காளைகளை அடக்கி, உழவுக்குப் பயன்படுத்தி வரும் உழவன் அறிவுருவாளன். திமிர் பிடித்த குதிரைகளை அடக்கி வண்டியிற் பூட்டி ஒழுங்காகச் செல்லும்படி நடத்துகின்ற வண்டிக்காரனும் அறிவின் உரு. மதங்கொண்ட யானையை அடக்கி, தீமை செய்வதினின்றும் விலக்கி நேரான வழியில் நடத்துகின்ற யானைப்பாகனும் அறிவுக்கு எடுத்துக் காட்டாக இருப்பவன் என்று இக் குறளால் அறிய முடிகிறது.

இதிலிருந்து அறிவின்வழிச் செல்லும் மக்கள் "அறிவைப் பெற்றவர்கள்" என்றும், மனத்தின்வழிச் செல்லும் மக்கள் "அறிவை இழந்தவர்கள்" என்றும் நன்கறிகிறோம்.

ஆகவே, தம்பிகளே! தங்கைகளே! உங்களுடைய ஐயப்பாடு என்னாயிற்று? வள்ளுவர் கூறுகிற விடை எப்படியிருக்கிறது? "எது அறிவு?" என்பது இப்போது விளங்குகிறதா? வள்ளுவர் காட்டும் அறிவு உங்கள் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறதா?

எடுங்கள் திருக்குறளை! படியுங்கள் நன்றாக! "மனம் செல்லும் வழியெல்லாம் செல்லாமல் அறிவு செலுத்தும் வழியில் செல்லுங்கள்." செய்வன செய்து சிறப்பெய்தி வாழுங்கள். "உங்கள் அறிவு பொங்கட்டும்! தமிழ்மொழி பொங்கட்டும்! தமிழ் அறம் பொங்கட்டும்! வள்ளுவர் நெறி என்றென்றும் பொங்கிப் பெருகட்டும்!" எனக் கூறுவதோடு இக் கட்டுரையை முடிக்கிறேன்.

[புதுவைக் கல்விக் கழகத்தின் 'வெள்ளிவிழா நினைவு மலரி'லிருந்து எடுக்கப் பெற்றது.]

அருஞ்சொற் பொருள்

ஐயம் - சந்தேகம். செல - செல்ல. ஓரீஇ - விலக்கி. உய்ப்பது - செலுத்துவது. நெறி தவறுதல் - தீய வழிகளில் செல்லுதல்.

வினாக்கள்

1. "நல்லவர்கள்", "பொல்லாதவர்கள்" என்று எவரைக் கூறுகின்றோம்?
2. அறிவை நாம் எங்கெங்குக் காண முடிகிறது?
3. "எது அறிவு" என்பதற்கு வள்ளுவர் கூறும் விடை யாது?
4. "நன்றின் பால் உய்ப்பது அறிவு" என்பதனால் வள்ளுவர் குறிப்பாகக் கூறுவது யாது என்று கட்டுரையின் ஆசிரியர் கூறுகின்றார்?
5. அறிவைப் பெற்றவர் யார்? அறிவை யிழந்தவர் யார்?

பயிற்சி

திருக்குறளிலுள்ள சில பாடல்களை எடுத்து இதுபோன்ற விளக்கக் கட்டுரைகள் எழுதிப் பழகவும்.

9. மகாபலிபுரம்

திருமதி R. S. ருக்மிணி, M. A.

மகாபலிபுரக் காட்சிகள்

மகாபலிபுரம் சென்னை நகரத்திற்கும் திருச்சிராப்பள்ளிக்கும் செல்லுகின்ற இருப்புப்பாதையிலே உள்ள செங்கற்பட்டு இரயில் நிலையத்திற்குக் கிழக்கே சுமார் இருபது மைல் தூரத்தில் உள்ளது. செங்கற்பட்டிலிருந்து வரும் கற்பாதை பக்கிங்ஹாம் கால்வாயோடு முடிவடைகின்றது. இக்கால்வாயை ஒரு படகின் மூலமாகக் கடந்து சென்றால் பிரயாணிகள் விடுதி இருக்கின்ற கரையை அடையலாம். திருத்தலங் காணச் செல்வோர் முன்னதாகவே விடுதி அதிகாரிக்குக் கடிதம் எழுதி, அக்கட்டிடத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொள்வதே நலம். விடுதியில் சற்று நேரம் இளைப்பாறியபின் மகாபலிபுரக் காட்சிகளைக் காணப் புறப்படலாம்.

குகைக் கோயில்

பகலவனது வெங்கதிர்பட்டுக் காய்கனலெனச் சுடுகின்ற மணலில் அடிபெயர்த்து நடத்தல் எளிதன்று. ஆதலால், வெயில் ஏறுமுன் காட்சிகளைக் காணப் புறப்பட வேண்டும். விடுதிக்கு அண்மையில் இருப்பது மகிடாசுரமர்த்தினியின் குகைக் கோயில். இஃது இங்குச் சிலவாண்டுகட்குமுன் கட்டப்பட்ட கலங்கரை விளக்கத்திற் கருகாமையில் தென் மேற்குப் பக்கமாக இருக்கிறது. இன்று இவ்வூரார் இதனை 'யமபுரி மண்டபம்' என்கின்றனர்.

முற்புறத்தில் ஆறு தூண்களோடு அமைந்த இம் மண்டபத்தின் உட்பாகம் முழுவதும் கற்பாறையைக் குடைந்தாக்கிய ஒரு கூடமாகத் தோன்றுகிறது. இக்கூடத்தின் நடுச்சுவரில் உமைபங்கராய்ச் சிவபெருமான் காட்சியளிக்கிறார். நான்கு திருக்கரங்களோடு வீற்றிருக்கின்ற உமாபதியின் இணையடி, நந்தியின்மீது பதிந்திருக்கின்றது. இறைவனுக்குப் பின்பக்கத்தில் அயனும் அரியும் கூப்பிய

கையராய் நிற்கின்றனர். மலைமகள் மடியிலே குழந்தை முருகன் இருப்பதைப் பார்க்கலாம்.

தென் பக்கத்துச் சுவரில் துர்க்காதேவி அரிமா ஊர்ந்து மகிடாசுரனோடு போர் புரிகின்ற காட்சியைச் சிற்பி வெகு அழகாகச் செதுக்கியுள்ளான். தேவியின் திருக்கரங்கள் வில்லேந்தி, அரக்கன்மீது வாளிகள் தொடுக்கின்ற நிலையிலே அமைந்திருக்கும் சிற்ப நுட்பம் வெகு கவர்ச்சியாக இருக்கின்றது. பல்வகைப் படைக்கலங்களேந்திய எட்டுக்கைகளுடன் விளங்குகிற பராசக்தியின் முகத்திலே காணப்படும் வீரப் பொற்பு, பார்ப்பவர் உள்ளத்தைக் கவர்கிறது. மகிடாசுரன் முகத்திலே அச்சக் குறிகள் வெகு தெளிவாகத் தோன்றுகின்றன. மிகப் பெரிய போரை நம் மனக்கண் எதிரே விரித்துக் காட்டும் வண்ணம் இச்சுவரின்கண் உலகன்னை கொடிய அரக்கனோடு பொருகின்ற காட்சியைச் சிற்பி தெளிவாகக் காட்டியிருக்கின்றான். இக் குகைக் கோயிலிலுள்ள சிற்ப வேலைகள் அனைத்தும் சுவர்ச்சிற்பமாக அமைந்துள்ளன. சுவர்ச்சிற்பங்களில் ஒரு பாதியே வெகு தெளிவாகவும் எடுப்பாகவும் தோன்றும். மறுபாதி சுவரினுள்ளே புதையுண்டது போலத் தோன்றும்.

இம்மண்டபத்தின் தென்சுவரிலே திருமால் ஆதிசேடன் மீது அறிதுயில் செய்பவராகப் பொறிக்கப்பட்டிருக்கக் காணலாம். ஆதிசேடனது ஆயிரம் தலைகளிலொன்று பூமியைத் தாங்குவதாய்ச் செதுக்கி யிருக்கும் காட்சி வெகு நேர்த்தியாக இருக்கின்றது. கடல்மல்லையிலுள்ள இம் முதல் மண்டபமே பார்ப்பவர் உள்ளத்தைக் கவர்ந்து, பிற காட்சிகளையும் கண்டு களிக்கும் அவாவை எழுப்பிவிடும்.

உலகு அண்ணலின் கோயில்

மகிடாசுரமர்த்தினியின் கோயில் மீது ஒரு கோயில் இருந்ததெனவும், இக்கோயில் அதிக உயரத்திலிருந்ததால், பண்டைக் காலத்தில் நந்தா விளக்கொன்று இராப்பகலாக எரிந்து கொண்டிருந்ததெனவும், அதன் ஒளி இரவுதோறும் நாவாய்களுக்குத் திசைகாட்டியாகத் திகழ்ந்ததெனவும் கடல்மல்லையில் வாழ்பவர் கூறுகின்றனர். விளக்கிற்காகச்

செய்திருக்கும் அகல் மிகப் பெரிய தொட்டிபோல் அமைந் துள்ளது. தலசயனப் பெருமாளைக் காணவரும் அடியவர் குழாம் அக்காலத்தில் இந்தத் தொட்டியில் உழக்கெண்ணெய் ஊற்றவேண்டுமெனவும், அடியார்கள் பெய்யும் எண்ணெ யைப் பேரேட்டில் பதிவு செய்வதன் பொருட்டு இறைவனே இங்குக் கோயில் கொண்டு அமர்ந்தான் என்றும், அக் காரணம் பற்றியே ஈங்குள்ள இறைவர்க்கு 'உழக்கெண்ணெ யீசன்' என்ற காரணப் பெயர் வழங்கலாயிற்றென்றும் அவ் வூரார் கூறுகின்றனர். மற்றும் சிலர் இங்கே கோயில் கொண் டிருந்த இறைவனது திருநாமம் உலகண்ணல் என்பதெனக் கூறுகின்றனர்.

பஞ்சபாண்டவர் இரதம்

நவீன முறையில் அமைந்துள்ள் விளக்குத் தூணிற்குத் தெற்கிலே நேர் பாதையாகச் சென்றால் உலகமெங்கும் புகழ் பெற்ற பஞ்ச பாண்டவர் இரதங்களைக் காணலாம்.

நரசிங்க பல்லவன் குடைவித்த கோயில்கள் இருவகைப் படும். ஒருவகை மகிடாசுரமர்த்தினி போன்றவை; மற்றொரு வகை பஞ்சபாண்டவர் இரதங்களாம். மண்டபங்கள் குகைக் கோயில்களாகவும், இரதங்கள் ஒற்றைக்கற் கோயில் களாகவும் அமைந்துள்ளன. ஆனால், பொதுமக்கள் குகைக் கோயில்களை மண்டபங்கள் என்றும், ஒற்றைக்கற்கோயிலாக வுள்ள ஐந்து விமானங்களையும் இரதங்கள் என்றும் அழைக்க லாயினர்.

ஓர் இடத்தில் அடுத்தடுத்து அமைந்துள்ள இவ்வைந்து கோயில்களும் இருக்கின்ற இடத்தை அணுகியதும், ஒரு கோயில் மற்ற அனைத்திலும் பெரிதாகத்தெரிகின்றது. இதற் குத் 'தருமராச இரதம்' என்று பெயரிட்டுள்ளனர். இதன் கண் அழகிய சிற்பச் சித்திர வேலைப்பாடுகள் வெகு நுணக்கமாக அமைந்துள்ளன. இரண்டாவது அடுக்கின் நடுவில் 'கர்ப்பக் கிருகம்' என்னும் அறையைச் சிற்பிகள் வெகு அழகாகச் செதுக்கி இருக்கின்றனர். மாடப்புரைபோல் சிறிதாய் அமைந்த இவ்வறைக்கண் சோமஸ்கந்த விக்கிரகத்தை, அங்க இலக்கணங்களனைத்தும் தெளிந்து விளங்கச் செதுக் கிய சிற்பி தன் ஆற்றலை நன்கு விளங்கச் செய்திருக்கின்றான்.

பீமசேன இரதம் என வழங்கும் கோயிலின் முன்னும் பின்னும் மண்டபங்கள் காணப்படுகின்றன. அருச்சுனன் இரதம் எனவும், திரௌபதி இரதம் எனவும் வழங்கி வரு கின்ற இரு கோயில்களையும் ஒன்ருய் இணைக்கின்ற முன் மண்டபமும், இவற்றிற்கு எதிரே ஒரே கல்லில் வெட்டிய மதகரியின் சிலையுருவும், அரியேற்றின் சிலையுருவும் அமைந் துள்ளன. திரௌபதி இரதத்தின் மூலத்தானத்திற்குள் காண் கின்ற படிமம் துர்க்காதேவி என்பது வெகு தெளிவு. சிற்பி துர்க்கைச் சிலையின்கீழ் ஏவலனொருவனது உருவைச் செதுக்கியிருக்கின்ருன். இருதலையுஞ் சேரக் கட்டிய கூரை வீடுபோல் ஒரே கல்லில் செதுக்கியிருக்கின்ற திரௌபதி இரதம் சிறு குடில்போல் காண்கின்றது. நகுல சகாதேவர் இரதங்கள் என வழங்குபவை முற்றுப்பெருத ஒற்றைக்கற் கோயில்கள். பீம இரதம் என வழங்குவது ஒடிந்த வில் வளை விலே ஆக்கிய கூரையோடு விளங்குகின்றது. இக் கூரை எக்காரணத்தாலோ பிளவுபட்டுள்ளது. இவ்வைந்து ஒற்றைக் கற்கோயில்களுள் அக்காலத்திலிருந்த சிவலிங்கங்களை சிவ னடியார் தத்தம் ஊர்களிலே எழுப்பிய கோயில்களிற் பிர திட்டை செய்தற் பொருட்டுக் கொண்டுபோயினர் போலும்!

இவ்வொற்றைக்கற் கோயில்களை இரதங்கள் எனத் தவ ருக அழைத்ததற்குச் சில காரணங்களு முள. இவை இரத வடிவமாக அமைந்த காரணத்தால் இவற்றை இரதங்கள் என்றனரோ? அன்றி, அக்காலத்துக் கோயில்கள் அமைந்த வடிவத்திற்கு முற்றிலும் மாருகத் தேர்கள் போல் அமைந்த இக்கோயில்களின்கண் இருந்த இலிங்கங்கள் களவு போன தும், இவற்றுள் பிரதிட்டிக்கப் பெற்ற இலிங்கங்கள் இல்லா மையால் கோயில்கள் என்றுரைக்க மனமின்றி இரதங்கள் என்றனரோ? எங்ஙனமாயினும், நெடுங்காலமாக இவற்றைப் 'பஞ்ச பாண்டவர் இரதங்கள்' என்றே பலரும் அழைத்து வருகின்றனர்.

பஞ்சபாண்டவர் இரத அமைப்பு

பல நூற்றுண்டுகட்குமுன் நமது நாட்டினர் மனைகளை யும், மாடமாளிகைகளையும், அரண்மனைகளையும் சுட்டமண்ணு லும், மரத்தாலும் கட்டினர். அந்நாட்களில் தமிழகத்தின்

பெரும்பாகமும் காடாகவே இருந்தது. அக்காடுகளின் கருங்காலி, ஆச்சா, தேக்கு முதலிய மரங்கள் செழித்தன. அம்மரங்கள் செதுக்கு வேலைக்குப் பொருத்தமானவை; வைரம் பாய்ந்தவை; உயரமானவை. கட்டிடங்களில் சுவர் களில் காரையால் சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்தார்கள். அக்காலத்தில் வழக்கில் இருந்த கிளிஞ்சிற் சுண்ணும்பு சித்திரப் பூ வேலைகளுக்கும் பலவகை உருவங்கள் சமைப்பதற்கும் வெகுவாகப் பொருந்தியது. அக்காலத்து மரத்தச்சர் பதுமைகளையும், மலர்களையும், சித்திரங்களையும் மரத்தில் செதுக்குவதிலே தேர்ந்திருந்தனர். உத்திரங்களிற் சிறந்த பூக்கோலங்கள் செதுக்குவதில் அவர் பெரிதும் திறமை வாய்ந்தவர். அத்தச்சர்கள் தூண்களிலும், சுவர் களிலும், வாயிற் கதவுகளிலும், கதவு நிலைகளிலும், விமானங் களிலும், உத்திரங்களிலும், தூண்களின் போதிகைகளிலும், குறுக்கு விட்டங்களிலும் தம் சிற்பத் திறமைகளைக் காட்டி னர். அக்காலத்துக் கோயில்களுக்குச் சொந்தமாகப் பெரிதுஞ் சிறிதுமான தேர்களும், யாளி, பரிமா, அன்னம், கரிமா, மயில் முதலிய ஊர்திகளும் இருக்கும். கோயிலுக்குரிய இத்தேர்களிலும், ஊர்திகளிலும் சிற்பிகள் தமது ஆற்றலும் வேலைப்பாடும் விளங்க எழிலொழுகும் எண்ணற்ற சிற்பங் களைப் படைத்துப் புகழ்பெற்றனர்.

மரத்தச்சர் காட்டிய சிற்பத் திறமைகளை எல்லாம் மகேந்திரவர்மனது காலமுதல் கற்றச்சரும் கல்லிலே காட்டத் தொடங்கிவிட்டனர். மூலத்தானத்திற்கு மேல் அமையும் விமானமும், கூரியதாய் எழுகின்ற கோபுரமும் அமைப்பது மிகப் பழைய மரபு. இம்மரபின்படியே பல்லவரது காலத்தி லும் தமிழகச் சிற்பிகள் ஒரே கல்லைச் செதுக்கிக் குடைந்து கோயில்களை அமைத்தனர். இவை மரத்தச்சர்கள் செய்த இரதங்களின் வடிவிலே இருந்தன.

சிற்ப வேறுபாடுகள்

மகேந்திரவர்மனது காலத்தில் கற்றச்சர்கள் அமைத்த தூண்கள், நரசிங்கப் பல்லவனது காலத்தில் அமைந்த தூண் களிலும் பெரிதும் வேற்றுமை உடையன. மகேந்திரவர்மனது சிற்பிகள் தூண்களின்மேல் இருக்கும் போதிகைகளையும், கீழி

ருக்கும் பீடங்களையும் சதுரமாகச் செய்தனர்; தூண்களின் நடுவில் பட்டை தீட்டிய மூலைகளை அமைத்தனர்; போதிகை களிலும் பீடத்திலும் தாமரைப் பூக்களைச் செதுக்கினர்; தூண் களின் புறத்திலே மகேந்திரவர்மனது விருதுப் பெயர்களைப் பொறித்தனர். தூண்களின் மேலமைந்த போதிகையோடு சதுரப் பலகையும் வெட்டி யிருப்பதைக் காணலாம்.

நரசிங்கப் பல்லவனுடைய காலத்தில் கட்டிய குகைக் கோயில்களில் விளங்கும் படிமங்களும், வரிசை வரிசையாக அமைந்த அன்னங்களும், சிறுமணிக்கோவை நிரைகளும், பூ வேலைகளும், யாவும் மகேந்திரவர்மனுடைய காலத்தில் கட்டிய கோயில்களில் இருப்பவற்றைவிடச் சாலச்சிறந்த வேலைப்பாடுகளோடு விளங்குவன. நரசிங்கன் கட்டிய கோயில் தூண்களிலமைந்த போதிகைகள் உருண்டு இருக் கும். பந்து வடிவான இந்தப் போதிகைகளைக் 'குடதாடி' என்பர். குடதாடியின் மேற்பாகத்தில் பள்ளமான கழுத்து வளையமும் வெட்டியிருக்கும். கழுத்து வளையத்தின்மேல் ஒரு சதுரப் பலகை காணப்படும். சதுரப் பலகைமீது சதுரக் கல்லும், அதன்மீது தலைப் போதிகைப் பலகையும் அமைந்திருக்கும். இரண்டு முழ உயரத்திற் செதுக்கிய சிங்கத்தின் முதுகிலே தூண்கள் நிற்கின்ற பாவனையாய்த் தம்ப பீடங்கள் அமைந்திருக்கும். இவற்றைச் 'சிங்கத் தூண் கள்' என்பர். இவைதாம் நரசிங்கப் பல்லவன் காலத்திற் குடைந்த குகைக் கோயில்கள் எவை என்று சுட்டிக் காட் டுவன.

பகீரதன் தவம்

தீபத் தூணிற்கு வடகிழக்கிலே முற்றுப்பெறாத குகைக் கோயிலொன்று உளது. அதன் முன்பக்கம் ஐம்பது அடி நீளம் உடையது. அக்கோயிலின் தம்ப பீடங்கள் யானை யுருவிலே அமைந்தவை. அக்குகைக் கோயிலைச் சார்ந்த மிகப் பெரிய பாறையின் முன்பக்கம் முழுவதிலும் அக்காலத் துச் சிற்பிகள் பல உருவங்களைச் செதுக்கி வைத்திருக்கின் றனர். பாறைமீது விழுகின்ற மழைநீர் வடிந்து பாயும் பிளப் பொன்று நடுவிலே காணப்படுகின்றது. அப் பிளப்பிற்குத் தென் பக்கத்தில் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கின்ற உருவமொன்றைக் காணலாம். அஃது அருச்சுனன் தவஞ்

செய்வதைக் குறிப்பிடுகின்றதெனப் பலரும் கூறுவர். சிற்பக்கலை ஆராய்ச்சி வல்லார் சமீப காலத்தில் அதை ஆராய்ந்த பின் ஆங்குப் பொறித்திருக்கும் சிற்ப உருவங்கள் பகீரதனது தவத்தைக் குறிப்பிடுவன எனத் துணிந்தனர்.

தவம் செய்கின்ற பகீரதன் இரு கரங்களையும் சிரமேற் குவித்திருப்பதாக அச் சிலையுருவம் தோன்றுகிறது. அவன் இடதுகாற் பெருவிரல் நிற்கின்ற நிலையில் அங்குத் தோன்றுகின்றான். அவனது வலக்கால் தூக்கியிருக்கின்றது. இடக்கால் இயல்பாக இருக்கையில் வலக்கால் கூம்பியிருக்கின்றது. பகீரதனைச் சூழப் பல மனிதரின் உருவங்களும், பல வகையான மிருகங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. சிற்பி, நடுப்பிளப்பில் நாகலோக வாசிகளைக் கல்லில் செதுக்கிக் காட்டியிருக்கின்றான். பெரிய யானைகளின் வடிவங்களையும் செதுக்கி இருக்கின்றான். பெரிய யானை ஒன்றன் கீழ் அதன் குட்டியுமிருக்கின்றது. பகீரதன் தவம் செய்யும் இடத்திற்குக் கீழே பிளப்புக்குப் பக்கத்திற் சிறு கோயிலொன்றும் செதுக்கப் பெற்றிருக்கின்றது. அக்கோயிலுக்குள் விளங்கும் தெய்வத் திருமேனி எந்தக் கடவுளுடையதெனத் தெரிவதரிது. பிளப்புக்கு வடபால் கீழ்ப்பக்கத்திலே பகீரதனைப்போல் தவஞ் செய்கின்ற ஒரு பூனையைக் காணலாம். இச்சிற்ப வேலைகள் யாவும் ஏழாயிரத்து இருநூறு சதுர மீட்டர் பரப்பில் அடங்கியவை. இப்பாறையை நெடுநேரம் பார்க்கின்றவர்தாம் அதன்கண் விளங்குகின்ற அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தையும் ஒருவாறு தெரிந்து கொள்வர். இச் சிற்ப வேலைப்பாடுகள் எல்லாம் பாசுபதாஸ்திரத்திற்காக அருச்சுனன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்வதைக் குறிப்பிடுவன என்று நெடுங்காலமாகப் பலரும் கருதி வந்தனர்.

வராகாவதாரச் சிற்பம்

'அருச்சுனன் தவம்' என்ற சிற்ப வேலைகள் நிறைந்த பாறைக்குச் சற்று அப்பால், கண்ணனின் வெண்ணெய்த் திரள் எனப் பலரும் சுட்டுகின்ற ஒரு பாறையைக் காணலாம். இதற்குஞ் சற்று அப்பால் வராகசுவாமியின் குகைக் கோயிலைக் காணலாம். சிற்பி, வராகமூர்த்தியின் ஒரு காலை ஆதிசேட

னுடைய தலையில் வைத்துக் காட்டியிருக்கின்முன். பூதேவி திருமாலின் வலது தொடையில் அமர்ந்திருக்கிருள். திருமால் பூதேவியை அசுரரிடமிருந்து மீட்டுவந்த காட்சியைத்தான் சிற்பி இங்கே சித்திரித்திருக்கின்முன். இந்த வராகாவதாரச் சிற்பங்களிருக்கின்ற குகைக் கோயிலிலேயே திருமால் குறள் வடிவாகி மாவலிபால் நடந்து மூவடி மண்ணிரந்து அவ் வரக்கன் முடிமிசைத் திருவடி வைத்த திரிவிக்கிரமாவதாரத் தையும் சிற்பி வெகு அழகாகச் சிலையிலே சித்திரித்துக் காட்டியுளளான்.

கரைக் கோயில்

கடலலைகள் வந்து மோதுகின்ற தலசயன ஆலயந்தான் மகாபலிபுரத்திற்குச் செல்லுகின்றவர்கள் முடிவிலே காண வேண்டிய அழகிய காட்சி எனலாம். இதனைக் கரைக் கோயில் எனவுங் கூறுவர். இக்காட்சியைக் காண்கின்றவர் உள்ளத்தில் பல்வகை உணர்ச்சிகள் பொங்கி யெழும். கோயிலைச்சூழச் சிதைந்த கற்கள் கிடைக்கின்றன. கோயி லின் முன்னின்று கடலைப் பார்ப்பவருடைய உள்ளத்தில், கடலே! எங்கள் முன்னோர் கட்டி வைத்த அழகிய நகரத்தை விழுங்கியும் நினது பசி தணியாது கொந்தளிக்கின்றனையே! உனக்கு இஃதடாது' என்று ஒரு சிந்தனை எழாமலிராது; அங்கே நிற்பவருடைய உள்ளம் சற்று நேரத்திற்குள் அசைவற்று நின்றுவிடும். இடையிடையே பாரதநாட்டின் மிக உயர்ந்த நிலையைப் பற்றிய கருத்துக்கள் அடுக்கடுக்காய் எழும். உள்ளக் கோயில்மீது துயரக் கடலலை மோதும். அப்பொழுது கண்ணீரும் பெருகும்.

('இந்தியச் சிற்பங்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

அருஞ்சொற் பொருள்

கற்பாதை-காங்கிரீட்சாலை. திருத்தலம்-கோவிலுள்ள இடம். பகலவன்-கதிரவன். அண்மை-சமீபம். கரம்-கை. அயன்-பிரமன். அரி - திருமால். மலைமகள் - பார்வதி தேவியார். அரிமா - சிங்கம். மகிடாசுரன் - எருமை உருவில் உள்ள அரக்கன். பொற்பு - அழகு. பொருதல் - போர் செய்தல். நந்தாவிளக்கு - அணையா விளக்கு. அறிதுயில் - யோகநித்திரை. கர்ப்பக்கிருகம் - கோயிலில் கடவுளின் மூல உருவம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள இடம். அரி-சிங்கம்.

வினாக்கள்

1. மகாபலிபுரம் எங்கு அமைந்துள்ளது ?
2. குகைக் கோயிலின் அமைப்பைச் சுருக்கி வரைக.
3. 'மகிடாசுர மர்த்தனி' சிலையின் சிறப்பை எழுதுக.
4. "உழக்கெண்ணெயீசன்" என்று பெயர் வரக் காரணம் என்ன ?
5. இரதங்களின் பொது அமைப்பைச் சுருக்கி வரைக.
6. ஒற்றைக்கற் கோயிலின் அமைப்பைச் சுருக்கி வரைக.
7. மகாபலிபுரத்தில் காணப்படும் சிற்பங்களில் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.
8. பகீரதன் தவச் சிற்பத்தைப்பற்றிச் சுருக்கி வரைக.
9. கடற்கரைக் கோயிலைப்பற்றி 5 வரிகள் எழுதுக.
10. வராகாவதாரச் சிற்பத்தின் சிறப்பினைக் கூறுக.

பயிற்சி

நீவிர் காணும் இயற்கை எழில் மிக்க ஓர் இடத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

---

10. சிலப்பதிகாரம் தோன்றிய வரலாறு

வித்துவான் வே. க. ரங்காச்சாரி

பண்டைத் தமிழ் நாடு முடி மன்னர் மூவராகிய சேர சோழ பாண்டியரால் ஆளப்பெற்று வந்தது. இவர்களது ஆட்சியில் மக்கள் கவலையின்றி வாழ்ந்தனர். கல்விச் செல்வம் பொருட் செல்வம் இரண்டும் செழித்து விளங்கின. புலவர்கள் போற்றப்பட்டனர். கலைஞர்கள் பாராட்டப் பெற்றனர்.

இத்தகைய சிறப்புக்கள் பல வாய்ந்த தமிழகத்தின் ஒரு பகுதியாகிய சேர நாட்டில் சேரலாதன் என்னும் பெயருடைய அரசனொருவன் ஆட்சி புரிந்து வந்தனன். இவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். புலவர்களால் பாடப்பெற்ற புகழையுடையவன். பதிற்றுப்பத்து என்னுந் தொகை நூலிலுள்ள இரண்டாம் பத்து இவ்வரசனைக் குறித்துப் பாடப் பெற்றதேயாகும். இதனைப் பாடிய புலவர் பெயர் குமட்டூர்க் கண்ணனார் என்பது. இந்தப் பாடல்களைப் பாடியதற்காகச் சேர அரசன் அப்புலவருக்கு உம்பற்காட்டு ஐந்நூறு ஊர் பிரமதாயமும் முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டுள் வருவதனுள் பாகமும் கொடுத்தான். இவ்வரசன் சிறந்த வீரன். இமயம்வரை சென்று வெற்றி நாட்டியவன். அதனால் இவ்வரசனை "இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்" என்று சிறப்பித்துக் கூறுவர்.

நெடுஞ்சேரலாதனுக்குப் புதல்வர்கள் இருவர். மூத்தவன் பெயர் செங்குட்டுவன். இளையவனை இளங்கோ என அழைப்பர். இருவரும் இளமையிலே கல்வி கற்று அரசர்க்குரிய வீரம் பண்பு முதலியவற்றிலும் மேன்மை பெற்றுத் திகழ்ந்தனர்.

ஒரு நாள் சேரலாதன் தனது அரசவையில் அமைச்சர், சான்றோர், புதல்வர், நகரப்பெருங்குடிமக்கள் சூழச் சிங்காதனத்தின்மீது வீற்றிருந்தனன். அப்பொழுது, அங்கு வந்த நிமித்திகன் ஒருவன் அரசனை நோக்கி, "நீ விரைவில் பொன்னுலகம் சேர்வாய்" என்று கூறிவிட்டுப் புதல்வர்களிரு

வரையும் கூர்ந்து பார்த்தனன். பின்பு, அரசனை நோக்கி, "இவ் விருவரில் உமக்குப் பிறகு சேர நாட்டை யாளும் உரிமை உமது இளைய மகனுக்கு ஏற்படப் போகிறது'' எனக் கூறி னன். இதனைக் கேட்ட செங்குட்டுவனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. தம்பிமீது கோபமும் ஏற்பட்டது. நிமித்திகன் சொற்களைச் செவியுற்ற இளங்கோ அவன்மீது மிக்க சினம் கொண்டான். தனது தமையனாரின் முக வேறுபாட்டைக் கண்டான். உடனே இருக்கையிலிருந்து எழுந்தான். "அவை யோர்களே! இந்த நிமித்திகன் கூறியன தவறானவை; மூத் தவனிருக்க இளையவன் ஆட்சி பீடம் ஏறுவது நம் நாட்டு அரசர் மரபில் என்றும் இல்லாததொன்று; இவன் கூறிய வற்றைப் பொய்ப்பிக்க இப்பொழுதே நான் துறவறம் மேற் கொள்ளுகிறேன்'' என்று கூறிவிட்டு அவையிலிருந்து வெளி யேறினன். அங்கிருந்தோர் அனைவரும் இளங்கோவின் செயலைக் கண்டு வியந்தனர். செங்குட்டுவன் தன் தம்பியின் தியாகச் செயலை நினைந்து கண்ணீருகுத்தான்.

அவையிலிருந்து வெளியேறிய இளங்கோ துறவுக் கோலம் பூண்டு திருக்குணவாயில் என்னும் ஊரினுள் இருந்த சைனக் கோட்டத்தில் தங்கியிருந்தார். மக்களுக்கு நல்லுரை பகர்ந்தும் தமிழ் நூல்களை ஆராய்ந்தும் காலத்தைக் கழித்து வந்தார். சேரலாதனுக்குப் பின்பு செங்குட்டுவன் அரியணை ஏறினன். இவன் அடிக்கடி, துறவு பூண்ட தம்பியிடம் சென்று உரையாடி வருவான். இளங்கோவடிகளும் (துறவு பூண்ட பிறகு அடிகள் என்று வழங்கினர்.) அப்போதைக்கப்போது சேரன் செங்குட்டுவனின் அவைக்களத்துக்கு வந்து செல்லுவார்.

இங்ஙனமிருக்கும் பொழுது, சேரன் செங்குட்டுவன் மலைவளங் காண விரும்பி அமைச்சர், படைகள் புடைசூழ இளங்கோவடிகளுடன் சென்றனன். பேயோற்றங்கரை மணலில் இருக்கையமைத்துத் தங்கிருயிந்தான். மதுரையம் பதியைச் சேர்ந்த சாத்தனுர் என்னும் புலவர் பெருமானும் அங்கு இருந்தனர். அப்பொழுது அம்மலையிலுள்ள குறவர்கள் கையுறைப் பொருள்கள் பலவற்றுடன் வந்து செங்குட்டு வன் முன் வைத்து வாழ்த்தி, "அரசே! இம்மலைப் பக்கத்தி

லுள்ள வேங்கை மரத்து நிழலில் வாடிய தோற்றமுடைய பத்தினிப் பெண் ஒருத்தி வந்து நின்ருள்; அவளிடம் விண்ணுலகத் தேவர்கள் நெருங்கி, 'உனது கணவன் இதோ வருகின்ருன்; நீ அவனுடன் துறக்கம் புகுவாயாக' என்று கூறினர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு விமானம் வந்தது. அதனில் அழகே உருவமைந்த ஆடவன் ஒருவன் வீற்றிருந்தனன். அவன் இப் பத்தினித் தெய்வத்தை அழைத்தனன். அவள் விரைந்து சென்று கணவனுடன் விமானத்திலமர்ந்து விண்ணுலகஞ் சென்றனள். இவ்வியத்தகு காட்சியை எம் கண்களால் கண்டோம்'' என்று கூறினர்.

அப்பொழுது செங்குட்டுவன், அருகிலிருந்த சாத்தனுரை நோக்கினன். அரசனது குறிப்புணர்ந்து சாத்தனுர் கூறத் தொடங்கினுர்: அரசே! ஆத்திமாலே அணிந்த சோழ அரசனுடைய பழைய நகரங்களில் சிறந்து விளங்குவது காவிரிப்பூம் பட்டினம். அங்குப் பெருங்குடி வணிகர் மரபில் தோன்றிய கோவலன் என்று ஒருவன் இருந்தான். அவனது மனேவியின் பெயர் கண்ணகி. மாதவி என்ற நாடகக் கணிகையிடம் கோவலனுக்கு நட்பு ஏற்பட்டது. தனது பெரும் பொருளேயும் தொலேத்தான். பின்பு, தன் மனேவி கண்ணகியுடன் பாண்டியன் தலேநகரமாகிய மதுரைக்கு வந்தான். மனேவியின் சிலம்புகளில் ஒன்றை விற்றுப் பொருள் பெற்று வாணிபம் இயற்றி, இழந்த பொருளே மீண்டும் அடைய எண்ணினுன்.

மதுரைக்கு வந்த மறுநாள், அவன் கண்ணகியின் சிலம்புகளில் ஒன்றை வாங்கிக் கொண்டு விற்பதற்காகக் கடைத்தெருவிற்குச் சென்ருன். அங்கு, அரண்மனேப் பொற்கொல்லனேக் கண்டு அவனிடம் இச் சிலம்பை விலேமதிக்கு மாறு கேட்டனன். சிலப்பைக் கண்ட பொற்கொல்லன் 'இது மிக உயர்ந்த சிலம்பு; அரசமாதேவிதாம் இதனே அணியும் தகுதியுடையவர்; யான் சென்று அரசனிடம் இதனேப்பற்றி அறிவித்து வருகிறேன்; நீ இங்கேயே இரு' என்று கூறிக் கோவலனே ஓரிடத்தில் தங்கச்செய்து போயினன். அப்பொற்கொல்லன் அரசியின் சிலம்பொன்றை வஞ்சனேயாற் கவர்ந்தவன். அரசனுக்குத் தன்மீது சிறிதும் ஐயம் தோன்ருமல் இருக்க இவ் வமயத்தைப் பயன்படுத்திக்கொள்ள

எண்ணினான். அதற்கேற்ப அரசனிடம் சென்று, 'தேவி யாரின் சிலம்பினைப் பிறர் நாட்டுக் கள்வன் ஒருவன் கையிற் கண்டேன்' என்று உரைத்தனன். அச் சொற்களைக் கேட்ட பாண்டிய அரசன், காவலாட்களை அழைத்து, 'சிலம்பு திருடிய கள்வனைக் கொல்லுவதற்காக அவனையும் அச்சிலம்பையும் இப்பொழுதே இங்குக் கொண்டு வருக' என்று சொல்ல முதலில் நினைத்தான். பின்பு, முற்பிறப்பில் செய்த தீவினைக்கு அப்பொழுது பயன் ஏற்படப்போவதால், சிறிதும் ஆராயாமல் 'அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக' என்று கட்டளையிட்டான். காவலர் அங்ஙனமே செய்தனர். அங்ஙனம் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி பத்தினிப் பெண்ணாதலின், பாண்டியன் முன் சென்று வழக்குரைத்து, அரசன் இயற்றிய அநீதியை எடுத்துக்காட்டினள். தனது செங்கோல் வளைந்ததை யுணர்ந்து வருந்திப் பாண்டியன் சிங்காதனத்திலிருந்து மயங்கி விழுந்து இறந்தான். பின்பும் சினம் அடங்காமல் கண்ணகி மதுரையையும் தீப்பற்றி எரியச் செய்தாள். அந்தக் கண்ணகிதான் இக்குறவர் கண்ட பெண். அவர்களுடைய முற்பிறப்புத் தீவினை இப்பிறப்பில் பயனைத் தந்தது.

இவர்களது முற்பிறப்புத் தீவினை இன்னது என, மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் கூறியதை, மதுரை வெள்ளியம்பலத்தில் துயின்று கொண்டிருந்த யான் கேட்டேன்; அதனைக் கூறுகின்றேன். முற்பிறப்பில் கோவலன், பரதன் என்னும் பெயருடன் சிங்கபுரி அரசனிடம் ஏவலாளாக இருந்தான். ஒரு நாள், கடைத்தெருவில் வாணிபம் புரிந்து கொண்டிருந்த சங்கமன் என்னும் வேற்று நாட்டு வாணிகனைப் பகைவரது ஒற்றன் எனக் கருதி அரசனிடம் அழைத்துப்போய்க் கொலை செய்வித்தான். சங்கமனது மனைவி நீலி என்பவள் மிகவுந் துன்புற்றுப் பலவாறு முறையிட்டு அழுது பதினான்காம் நாள் ஒரு மலையில் ஏறி நின்று, தன் கணவனை யடைந்து விண்ணுலகஞ் சேர்ந்தாள். அங்ஙனம் செல்லும் பொழுது அவள் 'எங்களுக்கு இப்படிப்பட்ட துன்பத்தைச் செய்தவர் மறுபிறப்பில் இவ்வாறான நிலையை யடைக' என்று கூறினாள். அவ்வாறே, கோவலன் கண்ணகி ஆகியோர் இப்பிறப்பில் துன்புற்றனர். 'மூவரசர்க்கும் இயைபுடையது.

ஆதலின் தாங்கள் இவ்வரலாற்றை ஒரு காப்பியமாக இயற்றி யருள வேண்டும்' என்று இளங்கோவடிகளை நோக்கிச் சாத்தனுர் வேண்டினர். அதனைக் கேட்ட இளங்கோவடிகளும், "அரசன் அறவொழுக்கத்தில் சிறிது தவறினுலும், அறக்கடவுளே கூற்றமாக வந்து கொல்லுமென்பதும், கற்புடைப் பெண்டிரை மக்களே யன்றித் தேவர்கள் முதலாயினேரும் போற்றுதல் இயல்பு என்பதும், முன் செய்த இருவினையும், முறையே செய்தவரை நாடி வந்து தன் பயனை நுகரச் செய்யும் என்பதும் ஆகிய இம்மூன்றும் சிலம்பு காரணமாக வெளிப்பட்டன ஆதலின், 'சிலப்பதிகாரம்' என்ற பெயரால் நாம் ஒரு காப்பியம் இயற்றுவோம்'' என்று கூறினுர். பின்பு, இளங்கோவடிகள் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று பிரிவாகப் பகுத்து மூவரசர் நாடுகளிலும் இயைபுடைய கோவலன் கண்ணகி ஆகியவர் வரலாற்றினைச் சிலப்பதிகாரம் என்ற பெயரில் ஒரு பெரிய நூலாக இயற்றினுர். ஒவ்வொரு காண்டத்திலும் உட்பிரிவுகள் பலவுள. அவற்றிற்குக் காதைகள் எனப் பெயர். இங்ஙனம் இளங்கோவடிகள் இயற்றிக் கூற, மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் கேட்டனர்.

அருஞ்சொற் பொருள்

பிரமதாயம்-அந்தணர்களுக்குக் கொடுக்கும் பரிசு. நிமித்திகன்-சோதிடன். இருக்கை - ஆசனம். கையுறைப்பொருள் - கையில் கொண்டு செல்லும் பொருள்; பெரியோர், குழந்தை, அரசர் முதலியவரை வெறுங்கையுடன் சென்று காணலாகாது. துறக்கம் - சுவர்க்கம். அறவொழுக்கம் - தரும மார்க்கம்.

வினுக்கள்

1. மூவேந்தர் காலத்தில் தமிழகம் எவ்வாறு இருந்தது?
2. இமயவரம்பன் என்று பெயர் வரக்காரணம் என்ன?
3. அரசவையில் நிமித்திகன் யாது கூறினுன்? அதனுல் உண்டான விளைவு யாது?
4. செங்குட்டுவனிடம் குறவர் கூறியவை யாவை?
5. கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனுர் எவ்வாறு எடுத்துரைத்தனர்?
6. கோவலன் முற்பிறப்புப்பற்றி எழுதுக.
7. சிலப்பதிகாரம்பற்றிக் குறிப்பு வரைக.

பயிற்சி:— உமக்குத் தெரிந்த ஏதாவது ஒரு நூல் தோன்றிய வரலாற்றினை எழுதுக.

11. பல நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள்

சோம. லெ.

"புதிதாக ஒரு நாட்டுக்குப் போகுமுன் அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை நன்ருகக் கேட்டுத் தெரிந்து கொள்" என்பது கன்ப்யூசியஸ் என்ற சீனப் பெரியார் வாக்கு. "உரோமர்களைப் போலவே உரோமாபுரியில் நடந்துகொள்" என்ற பழமொழியும் இவ்வாக்கைத் தழுவியதே. ஆயினும் நான் புதிய நாடுகளுக்குச்சென்ற பின்னரே, அந்த அந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அறிய நேர்ந்தது. அவற்றையே இக்கட்டுரையில் குறிப்பிடுவேன்.

ஒரு நாட்டு மக்களைப்பற்றிப் பொதுவாகச் சொல்லுவது சரியன்று. ஒரு நாள், இலண்டனில், ஸ்ட்ராண்டு சாலையில், ஸ்காட்லாந்துக்காரர் இருவர் என்னைப் பார்த்து நான் இந்தியன் என்பதை அறிந்துகொண்டு, மகாத்மா காந்தியடிகளின் மரணத்தைப்பற்றி என்னிடம் துக்கம் விசாரித்தனர். பேசிக் கொண்டே சிறிது நடந்தோம். அது பகல் உணவு நேரமாக இருந்ததால், அருகிலிருந்த ஓர் உணவுச் சாலைக்குள் நான் சென்றேன்: அவர்களும் என்னைப் பின்தொடர்ந்தனர்; ஒரே மேசையருகிலேயே என்னுடன் அவர்களும் அமர்ந்தார்கள். இவ்விருவருமே நான் முதன் முதலாகக் கண்ட ஸ்காட்சுக்காரர் ஆவர். ஸ்காட்லாந்துக்கு நான் போனதில்லை. ஸ்காட்சுக்காரர் கணக்கில் வல்லுநர் என்றும், மிகச் சிக்கனமானவர் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அந்த ஸ்காட்சுக் காரரைக் கண்டவுடன் பல ஆண்டுகளுக்குமுன் நான் படித்த பின்வரும் பத்திரிகைக் குறிப்பு என் நினைவுக்கு வந்தது. அதாவது, "ஆங்கிலேயருடைய தலை வழுக்கையாயிற்று; திரும்பவும் மயிர் வளரும்படி செய்ய அவர் பெரும் பொருள் செலவு செய்தார்; ஒரு ஸ்காட்சுக்காரரின் தலை வழுக்கையாயிற்று; அவர் உடனே சீப்பை விற்றுவிட்டார்!" என்பதாகும். இதனல் நானே அந்த ஸ்காட்சுக்காரர்களுக்குச் சேர்த்துப் பணம் கொடுக்க முற்பட்டேன். ஆனல், அவர்கள் எனக்கும் சேர்த்துத் தாமே பணம் செலுத்தினர். விருந்தின

ரைப் பேணும் பண்பு நம் நாட்டவரின் தனி உரிமை அன்று: எல்லா நாட்டினருக்கும் பொதுவான பழக்கம் என்பதைச் சொல்லவே இந்நிகழ்ச்சியைப்பற்றி இங்கு விரிவாகக் குறிப் பிட்டேன்.

விருந்தோம்பும் முறை

"உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்" என்ற நமது பழமொழியைப் போல "வீட்டில் ஒரு விருந்தினர் இருப்பது வீட்டில் ஒரு கடவுள் இருப்பது போலாகும்" (Guest in the home is God in the home) என்று 'செக்' மொழியில் ஒரு பழமொழி இருப்பதாகப் பிராட்டிஸ்லாவா நகரில் ஒரு நண்பர் கூறி, அவருடைய பங்கீட்டுக்குரிய பொருள்களை எனக்குத் தரலாம் என்று நான் தங்கியிருந்த உணவு விடுதி அதிகாரிக்குத் தெரிவித்தார்.

ஆனால், மேனாட்டவர்கள் விருந்தினர் எத்தனை பேர் என்பதையும், யார் யார் என்பதையும், எப்போது வருவார்கள், எவ்வளவு நாட்கள் தங்குவார்கள் என்பதையும் முன்பே அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். முன் அறிவிப்பின்றி விருந்தினர் வருவதால், தம் திட்டங்கள் பயனற்றுப் போகும் என்பதே அவர்கள் கருத்தாகும். மேலும், அது தனிப்பட்டவரின் உரிமையைக் கட்டுப்படுத்துவதாகுமென்று மேலை நாட்டவர் எண்ணுகின்றனர்.

உரிமையைப் பேணுதல்

இரயில் பிரயாணம் செய்யும் போது, டிக்கட் சோதிப்பவர், உறங்குபவரைத் தட்டி எழுப்பினால், அது அவருடைய உரிமையில் தலையிட்டதாகுமென்று நினைக்கும் அமெரிக்கர் தம் நாட்டு இரயில்களில் ஒவ்வொரு பிரயாணியின் இடத்துக்கு எதிரிலும், டிக்கட்டைப் பிடித்துக் கொள்ளக்கூடிய ஒரு கைப்பிடியை வைத்திருக்கிறார்கள். பிரயாணிகள் இரயிலில் ஏறியவுடன், டிக்கட்டை அவ்விடத்தில் செருகிவிடுகிறார்கள். டிக்கட் பரிசோதிப்பவர் டிக்கட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சரிபார்த்து, அவற்றில் துளையிட்டுவிட்டு, மீண்டும் அங்கேயே வைத்துவிடுகிறார்.

இந்த உரிமை மனப்பான்மையால் மேல்நாடுகளில் ஒருவர் செயலில் மற்ருெருவர் தலையிடுவதில்லை. மகன் திருமணத்தை முடிவு செய்வதில், அவன் பெற்ரேர் தலையிடுவதில்லை. எந்தச் செயலிலும் ஒருவனுடைய திட்டத்தில் அவன் நண்பர்கள் குறுக்கிடுவதில்லை. கணவனுக்கு வரும் கடிதத்தை மனைவி பிரிப்பதில்லை ; மனைவிக்கு வரும் கடிதத்தைக் கணவனும் பிரிப்பதில்லை.

குழந்தைகட்கு மேனுட்டார் கொடுக்கும் உரிமை எல்லையற்றது. "அமெரிக்காவைப்பற்றி எனக்கு வியப்பைத் தருவது, அங்கே பெற்ரேர்கள் தம் குழந்தைகட்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முறையே ஆகும்" என்று வின்ட்சர் கோமான் ஒரு முறை விளையாட்டாகச் சொன்னர். பிரயாணத்தின் போது, குழந்தைகள் துன்பப்படாமலிருப்பதற்காகப் பிரிட்டனில் அவர்களைச் சிறு பிரம்புக் கட்டிலில் போட்டு, அக்கட்டிலைக் கணவனும் மனைவியுமாகப் பிடித்துக் கொண்டு செல்வர்.

தொழிற் சிறப்பு

சில குறிப்பிட்ட தொழில்களைச் செய்வது இழிவு என்ற கேடுதரத்தக்க மனப்பான்மை வேறு நாடுகளில் இல்லை. வேலை செய்வதில் உயர்வு தாழ்வு கிடையாது ; எந்த வேலையும் கடவுளின் தொண்டு; அது மக்களை உயர்த்துவது என்பதே அவர்கள் கருத்தாகும். பற்பல நாகரிக முன்னேற்றங்கள் இருந்தும், துணி துவைத்தல், வீடு சுத்தம் செய்தல், பற்றுத் தேய்த்தல், அசுத்தங்களை அகற்றுதல் ஆகிய வேலைகளைப் பிறர் உதவியின்றி ஒவ்வோர் அமெரிக்கனும் தானே செய்கிருன்.

ஜெர்மானியரும் அமெரிக்கரும் தம் வேலையைத் தளராத ஊக்கத்தோடும் நல்ல மனநிலையோடும் செய்கின்றனர். அவர்கள் வேலையில் துன்பப்படுவதாகச் சொல்லுவதில்லை. தம் வேலையில் ஒரு பெருமையை உணருகிருர்கள். அவர்கட்குத் தன்னம்பிக்கை உண்டு. பிறரையே நம்பி வாழ்பவன் வெற்றி காண்பதில்லை என்ற உண்மையை அவர்கள் அறிந்தவர்கள். உழைப்புக்குத்தான் பயன் என்பதை அமெரிக்கர்

தம் குழந்தைகட்கு வலியுறுத்துகின்றனர். கடவுளைக் கேட்டு விரும்பும் நலன்களை அடையலாம் என்று சிறுவர்கட்குக் கற்பிப்பது தவறு என்பது அவர்கள் கருத்து. அமெரிக்கச் சிறுவர் சிறுமியர் தம் ஏழாம் ஆண்டுமுதலே, நாள்தோறும் சிறிது நேரம் ஏதாவதொரு வேலையைச் செய்து, தம் சிறு செலவுகளுக்குத் தாமே பொருள் தேடிக்கொள்ளுகின்றனர். இத்தகைய தம் வருவாயிலிருந்து, குழந்தைகள் கிறிஸ்துமஸுக்குத் தம் பெற்றோர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வாங்கிக் கொடுக்கின்றனர். நான் பார்த்த அமெரிக்கக் குடும்பங்களிலெல்லாம் இவ்வாறு தங்கட்குத் தங்கள் குழந்தைகள் அன்பளிப்பாய்த் தந்த பொருள்களை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் என் நண்பர்கள் எனக்குக் காட்டினார்கள்.

பொழுதுபோக்கு வேலைகள்

ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா இங்கெல்லாம் வசிப்பவர்கள் எல்லோரும் தாம் நாள்தோறும் செய்யும் வேலைகளிலிருந்து மாறுதலடைய ஏதாவதொரு பொழுது போக்குத் தொழில் (Hobby) வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தொழில்களுள் தபால் முத்திரைகளைச் சேர்ப்பது எங்கும் பரவியுள்ளது. பல நாட்டு நாணயங்களைச் சேர்ப்பவரும் உளர். பலவகைக் கற்களைச் சேர்த்தல், பெரியோர்களின் கையெழுத்துக்களைப் பெறுதல், நிழற் படங்களைத் தொகுத்தல், பலவகையான தீப்பெட்டிகளைச் சேர்த்தல், பலவகையான பீங்கான்களைச் சேர்த்தல் போன்ற பல பழக்கங்களும் உண்டு. இந்தப் பொழுதுபோக்கு வேலைகள், இப்போது பலருக்கு முழுநேர வேலையாகவும், வாழ்க்கையில் அதே ஒரு பித்துப் போலவும் ஆகிவிட்டன. பலவகைக் கற்களைச் சேர்ப்பதில் அமெரிக்கருக்கு உள்ள பித்தை அறிந்த ஜப்பானியர், ஹிரோசிமாவில் அமெரிக்கர் போட்ட அணுக்குண்டிலிருந்து சிதறிய சிறுசிறு சில்களை, ஒரு சில் 5 டாலர் (ரூபாய் 23-75) விகிதம் அமெரிக்கருக்கே விற்றனராம். இதுவரை, அமெரிக்கர், தாம் போட்ட அணுக்குண்டையே 5 லட்சம் டாலருக்கு வாங்கிக்கொண்டிருப்பதாக ஒரு பத்திரிகை கேலியாக எழுதியிருந்தது.

புது வழக்கம்

பிறந்த நாள் விழா, திருமண ஆண்டுவிழா, நண்பர்களை முதன் முதலிற் கண்ட நாள் விழா, இவற்றை யெல்லாம் வாழ்த்துச் செய்திகள், அன்பளிப்புகள் அனுப்பியும், நடத்தியும் கொண்டாடுவது பல நாடுகளில் இப்போது புது வழக்கம் ஆகிவிட்டது.

பிறர்க்கு உதவி செய்தல்

வாழ்க்கையில் தம்மைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் நம்மைப்போல எல்லா நாட்டினருக்கும் உண்டு. ஆனால் அவர்கள் தனித்தனியாக அறம் செய்யாமல் பொது நிலையங்கள் வாயிலாக இயக்க முறையில், பெரும் அளவில் திட்டமிட்டுச் சமூக நன்மைக்கான பணிகள் செய்கிறார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறலாம். சுவிஸ் நாட்டவர் செஞ்சிலுவைச் சங்கத்துக்குப் பெரும் பொருள் கொடுத்திருக்கிறார்கள். போரால் தஞ்சம் என்று அவர்கள் நாட்டுக்கு வந்த பல நூறாயிரம் ஜெர்மனியருக்கும் பிற நாட்டவருக்கும் அவர்கள் எல்லா உதவிகளையும் செய்தனர். அமெரிக்கர் ஞாயிற்றுக்கிழமைதோறும், கிறித்தவக் கோயில்களில் பொருள் சேர்த்து நூறாயிரக்கணக்கான உணவுப் பார்சல்களைப் பாழடைந்த ஜெர்மனிக்கு ஆகாய விமானத்தின் மூலம் கொடையாக அனுப்பினார்கள். அமெரிக்க நாட்டு மடாதிபதிகள் பற்பல கல்லூரிகளை உலகெங்கும் நிறுவியுள்ளனர். ஓய். எம். சி. ஏ. என்னும் கிறித்தவ இளைஞர் சங்கம் போன்ற பல இயக்கங்கள் வாயிலாகவும் பெருந்தொண்டு செய்கின்றனர்.

பிறரை இகழாமை

நான் சென்ற நாடுகளில், எக்காரணத்தாலாவது ஒருவனுக்கு உடலின் ஒரு பகுதி—கால், கை, அல்லது வேறு உறுப்பு—போய்விட்டால், அதற்காக அவரைப் பிறர் நேரிலோ மறைவிலோ இகழ்வதில்லை. அவர் ஊக்கமிழந்து விடும்படியாக அவரிடம் ஒருவரும் நடந்து கொள்ளுவதில்லை. அவருடைய இழந்துபோன உடலுறுப்பைப்பற்றி ஒன்றும்

பேசாமல், மற்றச் செய்திகளைப்பற்றியே அவரிடம் பேசுவார்கள். "ஐயோ! உனக்குக் கை போய் விட்டதே!" என்று அவரிடம் அழுவதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புக்களை இழந்த பல நூறுயிரம் பேர், எல்லா உறுப்புக்களுமுடையவர்கள் செய்யும் வேலைகள் அனைத்தையும் விஞ்ஞான உதவியால் மகிழ்ச்சியுடனும் திறமையுடனும் செய்வதை, ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஒவ்வொரு நாளும் கண்டேன்.

பெண்கள் நிலை

ஆடவர் செய்யும் எந்த வேலையையும் பெண்டிருஞ் செய்கின்றனர். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் பெண்களுக்குத் தக்க மதிப்புக் கொடுக்கப்படுகின்றது. பெருஞ் செல்வர்களும் தமது அலுவலகத்திலுள்ள பணிப் பெண்களையும் மதிப்பாகவே நடத்துகின்றனர். மனம் ஒத்தாலன்றிச் செல்வம் பதவி இவை காரணமாக அங்கே திருமணம் நடைபெறுவதில்லை. அம்மகளிர் வாழ்க்கை முறைபற்றிய நூல்களைக் கற்பதோடு, பல இடங்களுக்கும் சென்று பொது அறிவையும் வளர்த்துக்கொள்கிறார்கள்.

குறைந்த உறக்கம்

ஆண் பெண் என்ற வேறுபாடுகளை வெளிநாட்டார் ஏற்றுக்கொள்ளாதது போலவே, இரவு பகல் என்ற கடவுளின் வரையறையையும் அமெரிக்கரும் பிரஞ்சுக்காரரும் ஏற்றுக் கொள்ளவில்லை. பகலில்தான் செய்யவேண்டும் என்றோ, அல்லது பகலில் செய்யக்கூடாது, இரவு வேலை என்றோ எந்த வேலைக்கும் வரையறை கிடையாது. "மணி, நேரம் என்பது மக்களின் கற்பனை; இரவும் பகலும் ஈசனுக்கு ஒன்றே" என்பது அவர்கள் கோட்பாடு. இதனால் பிற நாட்டவர்களில் பெரும்பான்மையோர் நம்மைவிடக் குறைவாகவே உறங்குகின்றனர்.

உறங்கும் முறை

உறக்கத்தைப்பற்றி மற்றொன்று குறிப்பிடவேண்டும். உறங்கும் சிறிது நேரத்தில் பிறர் தொல்லையின்றி மேல் நாட்டார் உறங்குகின்றார்கள். நியூயார்க் நகரின் ஒரு பகுதி

யாகிய குயின்சில் முப்பதாவது மாடியில் குடியிருக்கும் ஒரு நண்பர் வீட்டுக்கு நான் சென்றபோது, அவருடைய ஆறு மாதக் குழந்தை தனிப் படுக்கை அறையில் உறங்கியது எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

கூட்டம் நடக்கும் முறை

அமெரிக்காவில் கூட்டங்கள் நடக்கும் முறையும் குறிப்பிடத் தக்கது. மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் தொடங்குவதாக இருந்தால், சரியாக 6 மணிக்கு அந்தக் கூட்டம் நடக்கும் இடத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கதவுகளெல்லாம் மூடப்பட்டுவிடும். கூட்டம் முடிந்த பின்னரே அவை மீண்டும் திறக்கப்படும். இதனுல் கூட்டத்துக்கு யாரும் காலந் தாழ்த்து வருவதோ அல்லது கூட்டம் முடியுமுன் சிலர் எழுந்து செல்வதோ அங்கே நிகழாதனவாகும்.

பேசும் முறை

மூன்று நான்கு பேர்கள் சந்திக்கும்போது, ஒருவர் பேசுங்கால் மற்ருெருவர் குறுக்கிட்டுப் பேசுவது நாகரிகமற்றதாகக் கருதப்படுகின்றது. ஒருவர் பேசி முடித்த பின்னரே அடுத்தவர் பேசுவார். அல்லது, இன்றியமையாமல் உடனே கூற வேண்டியதிருப்பின், பேசிக்கொண்டிருப்பவரின் உடன்பாட்டைக் கேட்பது வழக்கம்.

கல்வியில் ஆர்வம்

கல்வியில் அமெரிக்கருக்கு உள்ள ஆர்வத்துக்குச் சான்ருகப் பின்வரும் இரண்டு நிகழ்ச்சிகளையுங் கூறலாம். தம் முன்னுள் ஆசிரியர் கல்லூரியினின்றும் ஓய்வுபெறும் நாளில் அவர்கள் கல்லூரிக்குச் சென்று அந்த ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவர். ஹார்வார்டு, கொலம்பியா பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தம் உயிலில் (will) அப் பல்கலைக் கழகங்களுக்காக ஒரு தொகையை ஒதுக்கி வைக்கிருர்களாம்.

பொதுவாக எல்லா மக்களும் கலையில் விருப்பமுடையவர்கள். ஏனைய துறைகளில் சிறப்பாக முன்னேறியுள்ள அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் கலையுணர்ச்சி மிக விரைவாக உருவாகிக்கொண்டு வருகிறது.

நாணய வழக்கு

நாணயங்களுக்குப் பெயரிடுவதில் நம்மைப்போன்ற வழக்கம் பிறநாட்டவரிடமும் உண்டு. இரண்டணு நாணயத்தைத் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் பணம் என்கிறோம். 100 ரூபாய் நோட்டைப் பச்சை நோட்டு என்கிறோம். இதே போல் ஆஸ்திரேலியர் 3 பென்சை த்ரம் என்றும், 5 பவுன் நோட்டை பைவர் என்றும், 100 பவுன் நோட்டை செஞ்சரி என்றும் கூறுவர். அமெரிக்கர், 5 சதத்தை நிக்கல் என்றும், 10 சதத்தை டைம் என்றும் சொல்லுகிறார்கள். நாணயமே இல்லாத 4 பைசாவை நாம் துட்டு என்பதுபோல் நாணயமே இல்லாத 21 சில்லிங்கை ஆங்கிலேயர் கினி என்பர்.

உல்லாசப் பிரயாணம்

மேலை நாடுகளிலுள்ள மற்றொரு பழக்கம், ஆண்டுக்கு ஒரு முறையாவது அதற்கு மேற்பட்டாவது, தத்தம் நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் சிலநாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு உல்லாசமாய்ப் பிராயணம் செய்வதாகும். பல வாரங்கட்கு முன்பே இப்பிரயாணத்தைத் திட்டமிட்டு, அதன் செலவுக்காகச் சிறிது சிறிதாகப் பொருள் சேர்த்து அதைத் தனியே வைத்திருப்பது வழக்கம். மிகுதியானவர்களை ஒரு மலைக்காவது தீவுக்காவது குறைந்த செலவில் குழுவாக அழைத்துச் செல்லும் நிலையங்களும் உள்ளன.

மற்றும் சில வழக்கங்கள்

ஜெர்மனியில் சாலைகள் சந்திக்குமிடங்களில் ஒவ்வொரு சாலையிலும் அந்தச் சந்திப்பிலிருந்து எந்த எந்தத் திக்குகளில், எந்த எண் முதல் எந்த எண்வரை உள்ள கட்டிடங்கள் இருக்கின்றன என்ற விளக்கமானது, பெயரைத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகையிலேயே கொடுக்கப்பட்டிருக்கும். மேலும் சாலைகளில் ஒற்றைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் ஒரு புறமும், இரட்டைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் எதிர் வரிசையிலும் இருக்கும்.

அமெரிக்கர் மாதத்தின் எண்ணை முதலிற் குறித்து அதன் பின்னரே தேதியின் எண்ணை எழுதுவர். உதாரணமாக, 1949 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 27 ஆம் நாள் என்பதற்கு 10—27—1949 என்று எழுதுவர்.

பிரெஞ்சுக்காரர், ஜெர்மானியர் தவிர ஏனைய உலக மக்கள் எல்லோரும் கடவுள் அன்பு உடையவர்களாக இருக்கின்றனர்.

முடிவுரை

பொருளாதாரச் செழிப்பான நாடுகளிலெல்லாம், மக்கள் கல்வியில் ஆர்வமும், கட்டுப்பாடும், சுறுசுறுப்பும் உடையவர்களாக இருக்கின்றனர்கள். ஆகையால் நாமும் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமானால் இப்பழக்கங்களைக் கையாளுதல் இன்றியமையாததாகும்.

அருஞ்சொற் பொருள்

வல்லுநர்-சமர்த்தர். பேணுதல்-உபசரித்தல். விருந்து - விருந்தினர். பார்சல் - மூட்டை. தொண்டு - சேவை. வரையறை - எல்லை. குழு-கூட்டம்.

வினாக்கள்

1. கன்ப்யூசியஸ் என்ற சீனப்பெரியாரின் வாக்கு யாது? அதனை விளக்குக.
2. ஸ்காட்சுக்காரரைப்பற்றி ஆசிரியர் குறிப்பிடுவது யாது?
3. மேலைநாடுகளில் விருந்தோம்பும் முறை எவ்வாறுள்ளது?
4. மேனாடுகளில் புகைவண்டியில் டிக்கட்டு சோதனை எவ்வாறு நடைபெறுகிறது? ஏன்?
5. உரிமையைப் பேணுதல்பற்றி ஆசிரியர் குறிப்பிடுவது யாது?
6. தாம் செய்யும் தொழில்பற்றி மேனாட்டு மக்களின் கருத்து யாது?
7. அமெரிக்கர்களின் பொழுதுபோக்குத் தொழில்கள் யாவை?
8. அமெரிக்கர் பிறருக்கு உதவி செய்யும் முறையைச் சுருக்கி எழுதுக.

9. மேனுடுகளில் பெண்களின் நிலை எவ்வாறுளது ?

10. அமெரிக்கர் ஓய்வு பெறுவதைப்பற்றி ஆசிரியர் கூறுவது யாது ?

11. ஜெர்மனிச் சாலைகளில் வீடுகளின் இலக்கங்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?

12. பொருளாதாரத் துறையில் முன்னேற ஆசிரியர் கூறும் வழிகள் யாவை ?

பயிற்சி

1. நம் நாட்டில் கடைப்பிடிக்கப்படும் விருந்தோம்பல் என்னும் வழக்கத்தைப்பற்றி 15 வரியில் ஒரு கட்டுரை வரைக.

2. மேனுட்டு மக்களையும் நம் நாட்டு மக்களையும் தொழில்துறையில் ஒப்பிட்டுக் கூறுக.

12. குடும்பக் கலை

திரு. எஸ். சுவாமிநாதன், B. A., L. T.

குடும்பம் என்பது பலரும் கூடிவாழும் தொகுப்பு ஆகும். தலைவன், தலைவி, மக்கள், பணியாட்கள் ஆகியோர் குடும்பத்தில் இன்றியமையாத உறுப்பினர் ஆவர். இவர்கள் அனைவருடைய ஒத்துழைப்பினாலும் முயற்சியினாலுமே குடும்ப வாழ்க்கை நன்கு நடைபெற இயலும்.

குடும்பம் ஓர் இயந்திரம்

திறம்பட இயங்கவேண்டிய இயந்திரத்துக்கு அதன் பகுதிகள் பழுதுபடாமல் இருத்தல் மிக மிக அவசியமானது. அப்பொழுதப்பொழுது அவற்றைக் கண்காணிக்க வேண்டும். ஏதேனும் குறை காணப்பெறுமானால் உடனே அதனைப் போக்குதல் கடமை. அங்ஙனம் முதலிலேயே கவனிக்கப் பெறாவிட்டால், அக்குறை பெரிதாகி முடிவில் இயந்திரமே பயனில்லாது போகும். அதுபோலவே, குடுமபத்தில் கணவன் மனைவியர் ஒருமித்த கருத்துக் கொண்டவராய் இருப்பது மிகவும் அவசியமானது. எச்செயலையும் இருவரும் ஆராய்ந்து இயற்றல் நன்மை பயக்கும். மக்கள் வயதுவந்தவராயின் அவர்களிடமும் ஆலோசித்து எச்செயலையும் செய்யலாம். பணியாளரிலும், வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர் பலருளர். அவர்களுடனும் குடும்ப வாழ்க்கை பற்றிய இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். தவறு எல்லோரிடமும் இருக்கலாம். ஆனால் அதனைப் பெரிதுபடுத்தாமல் அதனைப் போக்கும் வழிகளைச் சிந்தித்து ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். ஒரே குடும்பத்திலுள்ளவர்கள் ஒருவர் மற்றவரைப் பற்றிக் குறைகூறிக் கொண்டிருந்தால் குடும்ப ஒற்றுமை குலையும். பிசிராந்தையார் என்னும் புலவர்

" மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளையரும் "

எனத் தம் குடும்ப ஒற்றுமையைப் பெருமிதத்துடன் கூறுவதனைப் புறநானூற்றுள் காணலாம்.

அங்கத்தினர் ஒத்துழைப்பு

ஒவ்வோர் உறுப்பினரும் தத்தமக்கு எனச் சில செயல்களை ஒதுக்கிக் கொள்ளுதல் நலம். ஆடவர், பெண்டிர், புதல்வர், புதல்வியர், ஏவலாட்கள் முதலான பலரும் அவரவர் பங்கினைத் தவறாது இயற்றினால் குடும்பம் மிக்க சீரும் சிறப்புமாக விளங்கும். ஒருவர் அறியாததனை மற்றவரிடம் வினவி உணர்ந்துகொள்ளலாம். குடும்ப வாழ்க்கையில் பெரியோர் சிறியோர் என்ற வேற்றுமையுணர்ச்சி கூடாது. வருமானத்திற்கு ஏற்பத் தேவைகளை நிரப்ப வேண்டும். சூழ்நிலைக்கு ஒத்த முறையில் ஒவ்வொருவரும் தம்மை அமைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. ஒத்துழைப்பினால் எதனையும் செய்து முடிக்கலாம். பெருமையுடன் வாழ வழி ஏற்படும்.

குடும்பத் தலைவன் தலைவியர் பொறுப்புக்கள்

குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் செயல்படுவதற்கு முதன்மையாக இருப்பவன் குடும்பத் தலைவன் எனலாம். மனைவி, மக்கள், உறவினர், பணியாட்கள் அனைவருடைய செயல்கள், இன்ப துன்பங்கள் ஆகியவற்றில் தலைவன் பங்கு மிகுதி. வருவாயில் பெரும்பகுதி குடும்பத் தலைவன் வழியாகவே வருகிறது. தனது பொறுப்பினை நன்கு தெரிந்து கொண்டு, குடும்பத் தேவைகளுக்கு ஒத்த முறையில் வருவாயைத் தேடிக்கொள்ள வேண்டும். மற்றவர் அனைவரும் பெரும்பாலும் தலைவனை நம்பி வாழுபவர்களாகவே இருப்பர். தம் மக்களுக்கு உரிய வயதில் கல்வி கற்பித்தல் முதலிய வற்றைச் செய்வதில் சிறிதும் அலட்சியமாக இருத்தல் கூடாது. வருங்காலத்தில் தம் மக்கள் சிறப்பாக வாழ்தற்கும், தனது பிற்கால வாழ்க்கைக்கு உதவும் முறையிலும் அவர்களைப் பயிற்ற வேண்டும். குடும்பத்தலைவி என்ற வகையில், தலைவர்க்கு அடுத்த முக்கியப் பொறுப்பினை ஏற்பவள் வாழ்க்கைத் துணைவியே யாவாள். இவளது முயற்சியினாலேயே ஒரு குடும்பம் பெருவாழ்வு பெற்று, பலருடைய நன்மதிப்பையும் அடைய இயலும். தன் கணவனின் வருவாய்க்குத் தக்க செலவினைச் செய்து, இருப்பதனைக் கொண்டு மேன்மையாகக் குடும்பத்தை நடத்த வேண்டும். பிறரைப்

பார்த்து மிதமிஞ்சிச் செலவு செய்தல் தொல்லையே தரும். தனது தலைவனின் குறிப்பறிந்து நடத்தலும், குழந்தைகளை நல்வழியில் வளர்த்தலும், பொறுமையைக் கடைப்பிடித்தலும் தலைவியின் சிறந்த கடமைகளாம். வீட்டுக்கு விளக்கம் தருபவள் தலைவியே. இதனாலேயே "மனைக்கு விளக்கம் மடவார்" என்று ஒரு புலவர் கூறிப்போந்தார். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குடும்பத் தலைவியரின் இலக்கணங்களை 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற தலைப்பின்கீழ்ப் பத்துக் குறட்பாக்களில் அழகு பட எடுத்தியம்பியுள்ளார்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்பது வள்ளுவனார் வாக்கு.

வருவாய்க்குத் தக்க செலவு

நமது நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் வருவாய் வெவ்வேறு நிலையில் அமைந்துள்ளது. ஆனால் செலவோ, வருவாய்க்கு மிகுதியாக உளது. இது நன்றன்று. தொடக்கத்திலிருந்தே குடும்ப நிலைக்கேற்பச் செலவு செய்து பழகிக் கொள்ளவேண்டும். இருக்கும்போது ஆடம்பரமாகச் செல வழித்துவிட்டால் பின்னால் வருந்த நேரிடும். பழகிய ஒன்றை விடுவது அரிது. அதனால், ஒரு பழக்கத்தை மேற்கொள்ளும் பொழுது, இதனை இறுதிவரை நம்மால் கைக்கொள்ள முடியுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொருள் என்பது மிகவும் கொடியதொன்று. அதனால் விளையும் தீமைகள் பல. 'குடிப் பிறப்பழிக்கும்; விழுப்பங் கொல்லும்." இன்று கையில் பொருள் இருக்கிறது என்று அளவுக்கு மீறிச் செலவு செய்துவிட்டால், இல்லாதபொழுது பிறரிடம் சென்று கடன் வாங்கும் நிலை உண்டாகும். பின்பு அதனைக் கொடுக்க இயலாமல் மேலும் மேலும் கடன் வாங்க நேரிடும். இறுதியில், கடனைக் கொடுப்பதற்காக வீட்டிலுள்ள பொருள்களையும் இழந்து மதிப்புக் கெட்டு, மற்றவர் முன்னிலையில் தலைகுனிந்து செல்லும் அவல நிலை ஏற்படும். நெருங்கிய நண்பர்களும், பணம் கொடுக்கல் வாங்கலினால் பகைவராவர். ஆதலின், முதலிலிருந்தே வருவாய்க்குத் தகுந்த முறையில்

வாழ்க்கைச் செலவை வகுத்துக்கொண்டால் குடும்ப வாழ்க்கையை ஒரு சீரான நிலையில் நீண்டகாலம் நடத்த இயலும்.

" ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போன திசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு "

என்ற ஔவையார் பாடல் இது குறித்து எழுந்ததேயாகும்.

வீட்டு அமைப்பு

வீட்டைத் தூய்மையுடன் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். "சுத்தம் சோறுபோடும்" என்பது பழைய மொழி. சிறு குடிசையாயினும் துப்புரவாக இருப்பது சிறந்தது. கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைச் சேர்த்து வைத்தல் ஆகாது. வெளியிடங்களுக்குச் சென்று வீட்டுக்குள் நுழைபவர் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு செல்ல வேண்டும். இல்லாவிட்டால், கைகால்களிலுள்ள அழுக்குகள் அனைத்தும் வீட்டில் படியும். அங்கு உள்ளவர்கட்கும் நோய் ஏற்படலாம். குடிக்கும் தண்ணீர், உடுக்கும் ஆடை, உணவுப் பொருள்கள் முதலியவற்றை மிகவும் தூய்மையாக வைத்துக்கொள்ளுவது முக்கியம். நம் வெளியுடலை நீராடித் தூய்மைப் படுத்திக் கொள்ளுவது போன்று, குடியிருக்கும் வீட்டினையும் பார்வைக்கு அழகாகத் தோற்றமளிக்கச் செய்ய வேண்டும். நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு வீட்டுத் தூய்மை தான் முதன்மையானது. ஒருவன் நல்வாழ்வு வாழ்வதற்குரிய பொருளை, உடல்நலத்துடன் இருந்தால் எப்படியேனும் சம்பாதிக்கலாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி நாமறிந்த தொன்று. நோயுள்ளவனாக இருப்பின் வாழ்க்கை சீரழியும். ஆகவே, வீட்டு அமைப்பு நன்முறையில் இருப்பது, குடும்ப வாழ்க்கையின் அடிப்படை எனலாம்.

மக்கட் பராமரிப்பு

குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் தாம் பெற்ற மக்களை நல்ல முறையில் வளர்த்து உருவாக்குவது சிறந்த கடமையாகும். இளமையில் பெற்றோர் எங்ஙனம் பயிற்சியளிக்கின்றார்களோ அதுவே அவர்கட்கு வாழ்க்கை இறுதி

வரை நின்று துணைபுரியும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்'' என்பது முதுமொழி. இளவயதில் ஏற்படும் பழக்கம் பசுமரத்தாணி போல் அவர்கள் மனத்தில் பதியும். ஆதலின், தாய்தந்தையர் தம் மக்களுக்குக் கல்வி கற்பித்தல், நல்லொழுக்கத்தைப் போதித்தல் முதலியவற்றை அவர்களது இளமைப் பருவத்திலேயே செய்தற்குத் தவறக்கூடாது. ஒரு மகனுடைய நன்னிலைக்கும் தாழ்வுக்கும் பெற்றோரே காரணமாவர். இந்தப் பொறுப்பினை உணர்ந்து அதற்கேற்ற வகையில் செயல்புரிவது குடும்பத் தலைவன், தலைவி ஆகியோரது தலையாய பொறுப்பு. வருங்காலத்தில் நமது புதல்வன் மிக மேன்மையான நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பெற்றோர் செயலாற்றுதல் முறையாகும்.

" தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் ''

என்றார் பொய்யில் புலவர்.

சிறு சேமிப்பு

குடும்ப வாழ்க்கையில் சிறு சேமிப்புத் திட்டம் ஒரு முக்கியப் பகுதியாகும். அவரவர் வருவாயில் தேவையான செலவு போக ஒரு சிறு தொகையையாவது மாதந்தோறும் சேமித்து வைப்பது சிறந்தது. பல குடும்பத்தினரால் இங்ஙனம் செய்ய முடிவதில்லை. வருவாயே போதாமல் கடன் வாங்கித் துன்புறுகின்றன. அவர்களுக்கு இந்த உபதேசம் ஏருது. இருப்பினும், இருப்பதில் மிகச் சிக்கனமாகச் செலவழித்து, சிறிதளவு சேர்த்து வைப்பது வருங்காலத்துக்குப் பயன்படும். பொருள் எவ்வளவு இருந்தாலும் செலவழியும் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால், தேவைகளை முடிந்தவரையில் குறைத்து, வாழ்க்கையை ஆடம்பரமின்றி நடத்தி, சிறிதளவாவது சேமிப்பதுதான் வாழ்க்கையின் நல்ல இலட்சியங்களில் ஒன்று எனலாம். பிற்காலத்துக்கு என்று நினையாமல், இருப்பவற்றை மற்றவர்க்குக் கொடுத்து நாமும் நன்கு உண்டு உடுத்து வாழவேண்டும் என்ற கொள்கை நம் நாட்டில் பழங்காலத்தில் வேரூன்றி யிருந்தது. இக்காலத்தில் இது முழுதும் பொருந்தும் என்று சொல்வதற்கில்லை. காலம் மிக வேகமாக மாறிக்கொண்டு வருகிறது.

எல்லோரும் என்றும் ஒரே நிலையிலிருப்போம் என்று கூற இயலாது. ஆதலின், வருங்காலத்தையும் நினைவில் வைத்து, இப்பொழுதே நமது வருவாயில் சிறிது ஒதுக்கி வைக்க வேண்டும். இதற்காகவே, நமது அரசியலார், "சிறு சேமிப்புத் திட்டத்"தின் அவசியத்தை நாடெங்கும் சொற் பொழிவுகள் வழியாகவும், புத்தகங்கள் மூலமாகவும் பரப்பி வருகின்றனர்.

முடிவுரை

ஆகவே, குடும்பக் கலையில், குடும்பத்திலுள்ளவர் ஒத்துழைப்பு, தலைவன் தலைவியர் பொறுப்புக்கள், வருவாய்க்குத் தக்க செலவு, வீட்டமைப்பு, மக்கட் பராமரிப்பு, சிறு சேமிப்பு என்பன இன்றியமையாத பகுதிகளாம் என்று உணரலாம்.

அருஞ்சொற் பொருள்

பணியாள் - வேலையாள். வினவி - கேட்டு. தொல்லை - துன்பம் மனை-வீடு. மடவார்-பெண்கள். தற்கொண்டான்- தன்னை மணந்த கணவன். மாண்பு - மாட்சிமை. விழுப்பம் - சிறப்பு. தூய்மை - தூய தன்மை. அவை - சபை.

வினாக்கள்

1. குடும்பம் என்றால் என்ன ?
2. ஆசிரியர் குடும்பத்தை எதனுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார் ?
3. தலைவன், தலைவி இவர்களின் தகுதிகள் யாவை ?
4. வருவாய்க்குத் தக்க செலவு என்னும் பொருளில் அமைந்துள்ள பாடலை எழுதிப் பொருள் கூறுக.
5. சிறு சேமிப்பு இன்றியமையாதது என்று கூறக் காரணம் என்ன ?
6. "குடும்பக் கலையில் மக்கட் பராமரிப்பு மிக அவசியமானது" ஏன் ?
7. வீட்டுத்தூய்மை குடும்ப வாழ்க்கைக்கு அடிப்படை என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும் ?

பயிற்சி

உனது குடும்பத்தின் மாத வருவாயைக் கொண்டு ஒரு மாதத் திற்குச் செலவுப் பட்டியல் தயார் செய்.

13. மாணவர் இலக்கியப் பேரவை

வித்துவான் பூவாளூர் சுந்தரராமன், B.O.L.

செயலாளர்: பேரன்புள்ள பெரியோர்களே! எனதருமை நண்பர்களே! இன்று நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளைக் காண வந்துள்ள உங்களுக்கும், நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளப் போகும் நண்பர்களுக்கும் நல் வரவு கூறுகின்றேன். இன்றைய கூட்டத்திற்கு உயர் திருவாளர் கண்ணப்பன் அவர்களைத் தலைவராக இருந்து வெற்றிகரமாக நடத்தித் தருமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

(கை தட்டல்)

கண்ணப்பர்: எனதருமை மாணக்கர்களே! நண்பர்களே! நம் பள்ளியின் இலக்கியப் பேரவையின் சார்பாக நடைபெறும் சொற்போர் மன்றத்தின் இன்றைய நிகழ்ச்சிக்கு நடுவராகவிருந்து, முடிவினைக் கூறி, வெற்றிகரமாக அதனை நடத்தித் தருமாறு, செயலாளர் வேண்டிக் கொண்டார். அவருக்கும் உங்களுக்கும் மிக்க நன்றி. நடுவராக இருப்பவர் நடுவுநிலைமை தவருது வெறுப்பு விருப்பின்றிச் செயலாற்ற வேண்டும் என்பது யாவரும் அறிந்தது. எனது முடிவு ஒரு சாராருக்கு வெறுப்பையளிக்கலாம்; வேருெரு சாரார் அதை விரும்பி ஏற்றுக் கொள்ளலாம். எப்படி ஆயினும் நியாயத்திற்கு முரணுக நான் செல்லேன். சொற்போரில் ஈடுபடுபவர் தலைவர் கூறியபடி நடக்க வேண்டும். தனக்குக் கொடுத்த நேரத்தை வீணுக்காது சுருக்கமாகவும், பொருள்படவும் பேசி, குறித்த நேரத்தில் பேச்சை முடித்துவிட வேண்டும். இன்றையச் சொற்போருக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் 'கிராம வாழ்க்கை சிறந்ததா? நகர வாழ்க்கை சிறந்ததா?' என்பதாகும். இப்பொழுது கிராம வாழ்க்கையின் சிறப்புப்பற்றித் தோழர் அரங்கநாதனும், நகர வாழ்க்கையின் சிறப்புப்பற்றித் தோழர் அந்தோனியும் பேசுவார்கள். பேசுபவர் ஒருவரை ஒருவர் தாக்காது வரம்புடன் பேச வேண்டும். பேசும்

போது கைதட்டுதல், கூச்சலிடுதல் முதலியன எவையுமின்றி நிகழ்ச்சியை ஊன்றிக் கவனிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். முதலில் தோழர் அரங்கநாதன் பேசுவார்.

அரங்கநாதன் : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, அன்புத் தோழர்களே! வணக்கம். மனிதன் பிறந்தான். எதற்கு? தனக்காகவா? தன்னலங் கருதியா? பிறப்பின் குறிக்கோள் யாது? வாழ்க்கையின் குறிக்கோள் பிறருக்குத் தொண்டாற்றுவதே. தன்னலமில்லாத் தகைமை, பிறருக்கென வாழும் பெருமை இவையே வாழ்க்கையின் குறிக்கோள்களாக அமைய வேண்டும். இவை நகர வாழ்க்கையில் இல்லை. ஆங்கு நடைபெறுவது மனித வாழ்க்கை அல்ல; இயந்திர வாழ்க்கைதான். ஒரு வீட்டில் குடியிருப்பவர் அதே வீட்டிலுள்ள பிறரை அறியார். அவரது நன்மை தீமைகளில் பங்குகொள்ள மாட்டார். அவர்களுடன் உரையாடுவதும் இல்லை. இப்படியாயின் இதனை உயிர் வாழ்க்கை என்றும், இல்லற வாழ்க்கை என்றும் எவ்வாறு குறிப்பிடுவது? தவிரவும், பாருங்கள் சென்னையை! செல்வம் மிக்க பெரு மக்கள் காற்றோட்டமுள்ள மாளிகைகளில் வாழ்ந்தாலும் எத்தனை நடுத்தர வகுப்பினர் இருக்க இடமில்லாது தவிக்கின்றனர்; நடைபாதை யோரங்களில் வாழ்கின்றனர்! என்ன நகர வாழ்க்கை! அன்று; நரக வாழ்க்கையே அது. எதற்கும் பணம்! காற்று, தண்ணீர் இவற்றிற்கும் பணம் கொடுத்தால்தான் நமக்குக் கிடைக்கும். அவ்வாறு பணம் தந்தாலும் கிடைப்பது அசுத்தமான காற்றும் தண்ணீருமே. வேண்டிய வசதிகள் கிடையா. உணவினைப் பொறுத்தமட்டில் நல்ல புதிய காய்கறி வகைகள் கிடைப்பதில்லை. காய்ந்துபோனவையே கிடைக்கின்றன. அவற்றில் என்ன சத்து இருக்கப் போகின்றது? இல்லறத்தார்க்கு இன்றியமையாத விருந்தோம்பல் கிடையாது. வீட்டை நோக்கி விருந்தினர் வந்தால், விரும்பி ஏற்றுப் பேணுவதற்கு முரணாக வெறுத்து விரட்டுவது நகரப் பழக்கமாகிவிட்டது.

காரணம்? உணவுப்பொருள் பற்றுக்குறை; அரிசி யில்லை, இடமில்லை என்ற காரணங்கள்தாம். நகர மாந்த ராயினும், செல்வராயினும், சீர்மிக்க வேந்தனுயினும் உணவிற்காக உழவனையே எதிர்பார்க்கின்றனர். அத்த கைய உழவுத்தொழில் நடைபெறுவது கிராமங்களில். கிராமத்தில் கண்களுக்கு இனிய காட்சிகளும், மனத் திற்கு மகிழ்ச்சியூட்டும் மந்தமாருதமும், உடலுக்கு ஏற்ற நன்னீரும் நிறைய உண்டு. அவற்றிற்குக் கட்டண மில்லை, அளவில்லை. கறந்த பாலுண்டு. தோற்கன்றைக் காட்டிக் கறப்பாரில்லை. அச் செயலை வெறுப்பார் கிராம மக்கள். உண்மை விளம்பிகள்—மாசற்ற மனத்தினர். பிறர்க்கெனத் தம்முயிரையும் தரத் தயங்காதவர். அங்குச் சூதில்லை, வஞ்சனையில்லை, புரட்டில்லை. நேர்மை மிக்கது கிராமம். உலகுக்கு உயிராம் உணவையளிப்பது கிராமம். ஆதலின் கிராம வாழ்க்கையே சிறந்தது என்று கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

தலைவர்: இனி அடுத்தபடியாக, திரு அந்தோனி 'நகர வாழ்க்கை சிறந்தது' என்பதுபற்றிப் பேசுவார்.

அந்தோனி: மாண்புமிக்க தலைவர் அவர்களே! எனதாருயிர் நண்பர்களே! முதலில் உங்களுக்குப் பணிவான எனது வணக்கம். எனது நண்பர் அரங்கநாதன் அவர்கள் உணர்ச்சியுடன் மனத்தைக் கவரும் முறையில் கிராம வாழ்க்கையின் சிறப்பை எடுத்துப் பேசினுர். ஆனுல் நகர வாழ்க்கையை இவ்வளவு இழித்துப் பேசியிருக்க வேண்டாம். நாம் வாழ்வது கற்காலத்திலல்ல; நாகரிகம் வளர்ச்சியடையாத காலத்தில் அல்ல. இருபதாவது நூற்றுண்டில் வாழ்கிறோம். மனிதன் தன் அறிவால் ஆற்றக்கூடாதது இல்லை என்பதை வாயளவில் மட்டு மின்றிச் செயலில் செய்து வெற்றி காணும் புது யுகத் தில் வாழ்கிறோம். இந்த யுகத்தில் மாந்தருக்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. கல்வி யறிவு இல்லாது இக்காலத்தில் இனிது வாழ்வது இயலாது. அக்கல்வி யறிவு கிராமத்தில் கிடைக்குமா? கிடைக்காது. போகட்டும், பள்ளிக் கல்வி வேண்டாம். படித்த மக்கள்

தொடர்பாவது அங்கு ஏற்பட வாய்ப்புளதா? அதுவும் இல்லை. படித்தவரைக் கிராமப் பகுதியில் கணக்கிட்டுக் கூறிவிடலாம். ஆகையால் கல்வியைக் கற்க வேண்டின் நகரத்தை நாடவேண்டும்.

இரண்டாவதாக, நாம் கிராமத்திலேயே வாழலாம். சிறந்தது கிராம வாழ்க்கையே என்று வைத்துக் கொள்ளலாம். அங்குள்ள சூழ்நிலையைப் பார்த்தால் ஒரு வரும் அங்கு வாழ மனமொப்ப மாட்டார்கள். குப்பை, சாணி முதலியன ஒதுக்குப்புறத்தில் குவித்து வைக்கப்பட மாட்டா. கால்நடைகளைக் குறிப்பிட்ட இடங்களில் கட்டாமல் கண்டவிடங்களிலும் கட்டுவதனால் எங்கும் அசுத்தமாகக் காணப்படும். இது நோய்க்கு அடிப்படை. ஏதாவது நோய் ஏற்பட்டால் உடனே மருத்துவரைத் தேட வேண்டும். அவர் ஆங்குள்ளாரா? இல்லை. நகரத்திற்கு ஓடவேண்டும்.

எனது நண்பர் உணவு, காய்கறிகள்பற்றிக் கூறினார். இன்று உள்ள நிலையில் எவரையும் கேட்கலாம். கிராமங்களைவிட எல்லாப் பொருள்களும் நகரங்களிலேயே எளிதாகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

உணவுப் பொருள்களுக்குக் கிராமங்களை நாட வேண்டிய அவசியம் நகரங்களுக்கு உண்டுதான். ஆயினும், உணவு உற்பத்திக்கு இன்றியமையாத எஃகு முதலிய சாதனங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன; புதிய உர வகைகள் அவர்களுக்கு எங்குக் கிடைக்கின்றன என்பவற்றை நண்பர் மறந்துவிட்டார் போலும். நகரங்களில்தான் அவை கிடைக்கும் என்பதனை நினைவூட்ட விரும்புகிறேன். ஆகையால், கல்வி, சுகாதரம், மருத்துவ வசதி முதலியன எல்லாம் நிறைந்த இடம் நகரம் தான். ஆதலின் கிராம வாழ்க்கையைவிட நகர வாழ்க்கையே சிறந்தது என்பது என் கருத்து.

(கை தட்டல்)

கண்ணப்பர்: அன்புமிக்க அருமை மாணுக்கர்களே! இன்று எடுத்துக்கொண்ட பொருள்பற்றித் தோழர் அரங்க

நாதனும், அன்பர் அந்தோனியும் சீரிய முறையில் பேசி நம் மனத்தைக் கவர்ந்துவிட்டனர். நம்மையும் அவர்கள் கருத்து வழியே செல்லும்படி தக்க ஆதாரங்களுடன் எடுத்துரைத்துச் சொற்பொழி வாற்றினர். இப்பொழுது முடிவு சொல்லும் பொறுப்பு என்னுடையது. நான் கூறுவது யாதெனில், நகர வாழ்க்கையும் சிறந்தது, கிராம வாழ்க்கையும் சிறந்தது. நகர முன்னேற்றம் சிறப்புற, கிராம முன்னேற்றம் அவசியமானது என்று நம் தலைவர்கள் காரணத்துடன்தான் கூறியுள்ளனர். ஆகையினால் கிராம மக்கள் நலத்தை நகர மாந்தர்கள் கருத்தில் கொண்டு அங்குள்ள குறைகளை நீக்கப் பாடுபட வேண்டும். கிராம மாந்தரும் நகர மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் காய்கறிகளையும் தேவைக்கு ஏற்ப, கண்ணியமான முறையில் அளித்து உதவ வேண்டும்.

மாணவர்களாகிய நீங்களும் விடுமுறை நாட்களில் கிராமங்களுக்குச் சென்று ஆங்குக் காணப்படும் குறை பாடுகள் நீங்கும்படியாக மக்களுக்கு நல்லுரைகள் கூறி, பொதுநலச் சேவை புரியவேண்டும். இவ்வாறாயின் கிராம வாழ்க்கையும், நகர வாழ்க்கையும் நல்வாழ்க்கை யாக அமையும். இதுவே நம் நாட்டுக்குத் தக்கது. எனக்குத் தலைமை தாங்க வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றி. சொற்போரில் பங்கெடுத்துக் கொண்டவர் களுக்கு என் பாராட்டு உரித்தாகுக.

செயலாளர் : அன்பிற்குரிய தலைவர் அவர்களே! எனதரு மைச் சகோதரமணிகளே! இறுதியில் நன்றி கூறுவது என்பது எனது கடமை. நம் தலைவர் தவிர்க்கமுடியாத பல அலுவல்களுக்கிடையே நம்முடனுமிருந்து பேரவை யில் பங்கு கொண்டு தலைமை தாங்கி, இன்றைய கூட் டத்தை நன்முறையில் நடத்திக் கொடுத்ததற்காக இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் என் நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன் றைய விவாதத்தில் பங்குகொண்ட எனதன்பர்கள் திரு. அரங்கநாதன் அவர்கட்கும், திரு. அந்தோனி

யவர்கட்கும் எனது உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக. இவ்வளவு நேரம் இந் நிகழ்ச்சியைக் கண்காணித்துவந்த உங்களனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

வினாக்கள்

1. அரங்கநாதன் கிராம வாழ்க்கை சிறந்தது என்று எவ்வாறு உறுதிப்படுத்தினான்?
2. அந்தோனி நகர வாழ்க்கையின் சிறப்புக்கு எடுத்தியம்பிய காரணங்கள் யாவை?
3. தலைவரின் தகுதிகள் யாவை?
4. கண்ணப்பர் கூறிய முடிவு யாது?

பயிற்சி

உனது பள்ளியில் நடைபெறும் 'பட்டிமன்ற' நிகழ்ச்சியைச் சுருக்கி எழுது.

14 குமணன்

நாடகம்

புலவர் “ அரசு ”

1

[இடம்: முதிரமலைச் சாரலிலுள்ள வேனில் விடுதியில் ஒரு கூடம். காலம்: மாலை.

இளங்குமணன் உலாவுகிறான். அழகுநம்பி அமர்ந்திருக்கிறான்.]

இளங்.: ஒரு பூங்கொத்திலே இரண்டு மலர்கள்! ஒன்றை மக்கள் விரும்புகிறார்கள்; வண்டுகள் வட்டமிடுகின்றன. மற்றொன்றை மக்களும் விரும்பிலர்; வண்டுகளும் நாடவில்லை. அதாவது மணமுமில்லை! தேனுமில்லை. இதனைக் கேட்டதாவது உண்டோ நீ?

அழகு: அது இயற்கையில்லையே.

இளங்.: ஒரு புலிக்கு இரண்டு குட்டிகள். ஒன்றுக்கு மட்டும் நகங்களும் பற்களும் வேட்டையாடுந் திறமையும் உண்டு. மற்றொன்றுக்கு ஒன்றுமேயில்லை. இஃதாவது உண்டா?

அழகு: ஒருபோதும் இம்மறுதலை இல்லை.

இளங்.: இரண்டு கைகளிலும் இரண்டு விளக்குகளை ஏந்துகிறோம். ஒன்றுமட்டும் ஒளிவீசுகிறது; மற்றொன்றுக்கு அத்திறமையே இல்லையாமே?

அழகு: ஏன் இப்படி வினவுகிறீர்கள்?

இளங்.: மக்களிலுங்கூட அரசகுடும்பந் தவிர மற்றைய குடும்பங்களிலே பிறக்கும் பிள்ளைகளில் உரிமை வேறுபாடுண்டா? ஏன் இந்த அரச மரபிலே மட்டும் இவ் வேறுபாடு? மூத்தவன் அரசாள்வது; இளையவன் ஏமாந்து போவது ஏன்?

அழகு (புன்முறுவலுடன்): இதற்குத்தானா இந்த உவமைகள்? அரச குடும்பத்தின் இயற்கை அப்படி! மரபு அது!

இளங். (வெறுப்புடன்) : என் உள்ளத்திலே வெறுப்புக்கனல்! உன் இதழ்களிலே புன்முறுவலா? (நின்று) மரபு என்கிருயே ; மரபு முறையை ஏற்படுத்தியவர் யார்!

(உலாவுகிருன்)

அழகு : மக்களே ஏற்படுத்திஞர்கள்.

இளங். : மக்களாவது? அரசனே ஒழுக்கம் வகிப்பவன். ஆகவே, எவனுவது அரச குடும்ப மூத்த மகன் ஒருவன் இந்த இழிவழக்கை ஏற்படுத்தியிருப்பான். அதனுல் நான் எந்தச் செல்வாக்குமின்றி நாற்புறம் மதில்களாலே தடையுற்றிருக்கிறேன்! ஒருநாள் முன்னதாகப் பிறந்தாலும் போதும்! அவன் அறிவீனனுயும் வலிமையற்றவனுயு மிருந்தாலும் அரசன்!

அழகு : ஆரிய அரசர்களின் வழக்கமும் அதுதானே. கௌரவ மரபிலே திருதராட்டிரன் குருடனுக இருந்தும் அரசன்! அவன் தம்பி அவனை அரியணையிலே அமர்த்தி விட்டுத் தான் ஏவலனுக இருந்து நாட்டை நடத்திஞன்.

இளங். : ஏன் அப்படிச் சொல்கிருய்? (நின்று) கைகேயி அவ் வழக்கத்தை முறித்தெறியவில்லையா? இராமனுக்குக் கிடைத்த அரசைப் பரதனுக்குக் கொடுக்க விதி செய்தனளே.

அழகு : ஆனுல், அதைப் பரதன் ஒப்புக்கொள்ளவில்லையே. அண்ணனையே அரசனுக்கித் தான் பிரதிநிதியாகத் தானே ஆண்டான்? மேலும் பதினுன்காண்டுகளே ஆண்டான். இராமனும் அந்தக் காலம்வரை காட்டிலே அலைந்தான்.

இளங். : (வெறுப்புடன்) எல்லாம் பின் பிறந்தவர்களின் கோழைத்தனத்தாலே விளைந்தது! பின்பிறந்த இளங்கோவடிகளுக்கு அரசாளும் நல்லூழ் இருக்கிறதென்று கணி கூறினுன் என்பதை அறிவாயே! அந்தக் கோழையும் அப்போதே துறவியாகிவிட்டார். முயன்ருல் அரசராகி யிருக்கலாம்.

அழகு : இருக்கலாம்.

இளங். : இருக்கலாமென்பதென்ன ? அதுதானே நடக்க வேண்டியது. நாம் முயன்று அந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும். மக்கள் அமைத்ததை மக்களே மாற்ற முடியும்.

அழகு : அது உங்கள் ஒருவராலேமட்டும் இயல்வதா ?

இளங். (நின்று) : உண்மை. என்னுலேமட்டும் எப்படி இயலும்? எல்லாத் தம்பியர்களும் ஒத்துவருவார்களா ?

அழகு : மேலும், பொதுமக்கள் உங்கள் சார்பிலே உழைப்பார்களா ?

இளங். (இருக்கையிலே அமர்ந்து) : ஆம் ! அவர்களும் வர மாட்டார்கள். போரிடுவதாயினும் படைகளெல்லாம் அவர்கள் சார்பிலேயே உள்ளன. (தலையிலே கையை வைத்துக்கொண்டு சிந்தனையுடன்) வேறு வழியில்லையா ?

அழகு : நேர்வழி கிடையாது.

இளங். (சோர்வுடன்) : ஆம், நேர்வழி கிடையாது. ஆனுல், என் அரசாட்சிக் காதல் வீணுவதா? (சீற்றத்துடன்) மேலும், கண்முன்னே நடக்கும் கருத்துக்கொவ்வாக் காட்சிகளைக் கண்டு முடவனைப்போல முடங்கிக் கிடப்பதா ?

அழகு : ஒவ்வாக் காட்சி எது ?

இளங். : கொடை கொடையெறு கூட்டங் கூட்டிப் புலவர்களைக் கொழுக்க வைப்பதைத்தான் கூறுகிறேன். இந்த வள்ளல்களில்லாவிட்டால், அந்த வறிய புலவன் பெரிய புரவலனுன இளவெளிமானை இகழ்ந்துரைப்பானு? பொருளை உழைத்துழைத்துக் கொடுப்போர் உண்ணவும் உடுக்கவும் இடர்ப்பட்டுக் கிடக்கிறுர்கள். அப்பொருளைச் சிறிதும் உழைப்பின் அருமையறியாதோர் வாரி வாரி வழங்கி வள்ளல்களெனப் பெயரெடுக்கிறுர்கள். அவர்களைப் புகழ்ந்து பாடுவதனுலேயே புலவர்களாய்விட்ட புல்லர்கள் அப்பொருளைப் பெற்று, அழகாக உடுத்து உண்டு அமைகிறுர்கள். என்னே இழிசெயல் !

அழகு: இறைவன் இறையென்ற போர்வையாலே ஏழைகளின் உழைப்புப் பொருள்களை எடுத்துக்கொள்கின்றான். புலவன் கொடை யென்ற நெறியிலே தடையின்றிச் சென்று, பொருளை வாங்கி, வயிற்றை நிரப்புகிறான். இதுதான் உலகியல்!

இளங்.: எப்படியாவது இதனைத் தடுக்கவேண்டும், நம்பி! ஏதாவது வழி—நேர்வழியில்லாவிட்டாலும்—கூறு.

அழகு (அன்புடன்): என்னிடம் அவ்வேலையை விடுங்கள்.

இளங். (மகிழ்வுடன்): நீதான் செய்யவேண்டும். ஏதாவது வழியுண்டா?

அழகு: எத்தனையோ வழிகள்! "வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில் — பொருந்துதல் தானே புதுமை?" தங்களுக்கேன் அந்தக் கவலை? தங்கள் உள்ளம் அசைந்தால் உடனே அசையும் அவ் வள்ளலின் உயிர்! என் பொறுப்பு அது.

இளங்.: உன் பொறுப்பா? (நடுங்குகிறான்.)

அழகு (நகைத்து): ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? பின் பிறந்த குறையா? தம்பிகளெல்லோருமே கோழைகளா?

இளங்.: ஏனோ என் உள்ளம் தடுமாறுகிறது!

அழகு (வாட்டத்துடன்): அப்படியானால் அடிமையாகவே அடைபட்டுக் கிடக்கவேண்டியதுதான். அரசாட்சிக் காதலை அகற்றி யெடுத்தெறிந்து விடுங்கள்.

இளங். (எழுந்து): ஓ! ஒருபோதும் அமைந்திரேன்! நம்பி, நீ விரும்பியபடியே உரிமை தருகிறேன். வள்ளலை எப்படியாவது வானாட்டுக் கனுப்பிவிடு.

அழகு: நன்று! அப்படி வாருங்கள் வழிக்கு. (மகிழ்வுடன்) இன்றே இளங்குமணர் பிறந்த நாள்! ஒழிக வள்ளல்களின் ஆட்சி!

2

[இடம்: குமணன் அரண்மனையில் ஓர் இடம்.

காலம்: முன்னிரவு.

குமணர் ஓரழகிய பொற் பீடத்திலே அமர்ந்திருக்கிறார். அமைச்சர் முடிநாகராயர் எதிரிலே நடுக்கத்துடன் நிற்கிறார்.]

குமணர் (புன்முறுவலுடன்): ஏன் இப்படி நடுங்குகிறீர்? மலை கலங்கினாலும் மனங் கலங்கலாமோ? அமைதியாய்க் கூறுங்கள். அப்படி அமர்ந்துகொள்ளுங்கள். கலக்கத்திலே, கூறவேண்டியதைக் கோட்டை விடாதீர்கள்!

முடி (வாய்குழற): ஆம், ஆம்! நாம் . . நாம் . . கோட்டை விடக் கூடாதுதான். (அமர்கிறார்.)

குமணர் (அமைதியுடன்): பகைவர் முற்றுகையா நேர்ந்தது?

முடி: அப்படியிருந்தாலும் அச்சமில்லையே!

குமணர்: அவ்வாறு நேர்ந்தால்தானே கோட்டைவிட வேண்டும்? அதைவிட நாட்டிற்கு அச்சம் ஏது?

முடி (தயக்கத்துடன்): எப்படிக் கூறுவேன்? நன்மையைத் தரும் நீரும் நிழலும் ஒவ்வாத நிலையை அடைந்து தீமை செய்வதைப்போல, நேர்ந்துள்ளது, 'எட்பிளவு அன்ன சிறு உட்பகை.'

குமணர் (புன்முறுவலுடன்): உட்பகையா? நம் ஆட்சியிலா?

முடி: ஆம் அரசே! தாங்கள் புன்முறுவல் செய்வது வியப்பாயிருக்கிறது. நாட்டின் நலன்—தமிழன் உயிர் ஆகிய தங்கள் ஆட்சி அழியச் சூழ்ச்சி நடக்கிறதே!

குமணர்: எள்ளின் பிளவு அன்ன சிறியது என்றுதானே கூறினீர்? அதற்கும் அஞ்ச வேண்டுமா? மூட்டைப் பூச்சிக்கு அஞ்சியோ வீட்டைப் பிரிப்பார்?

முடி (வியப்புடன்): என்ன கூறுகிறீர்கள்? "எட்பிளவு அன்ன சிறுமைத்தே ஆயினும்—உட்பகை உள்ளதாம்

கேடு" என்ற வள்ளுவர் வாய்மொழியை நோக்கினீர்களா? மூட்டைப் பூச்சியை நசுக்காமல் விட்டால் அயர்ந்து உறங்கல் ஆகுமோ? "முனைவருகார் கூர்முள் வேலை முளையிலே கிள்ளின் அல்லால்—நனிவர வயிர்த்தபோது நவியமும் மடியும் அன்றே?"

குமணர் (புன்முறுவலுடன்): இவ்வளவு நீர் வற்புறுத்திக் கூறும்போது புறக்கணித்தல் இயலாது. சூழ்ச்சியாளர் யார்?

முடி. (அச்சத்துடன்): தங்கள் தம்பியே.

குமணர் (வியப்புடன்): என்ன! என் தம்பியா? என்ன சூழ்ச்சி?

முடி.: ஆம். தங்கள் தம்பியே தங்களைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறார்.

குமணர் (புன்முறுவலுடன்): என்னைக் கொல்லவா சூழ்ச்சி செய்கிறான்? நன்று! அவனுக்கு உரிமையிருக்கிறது! படையுண்டா? துணையுண்டா?

முடி. (வியப்புடன்): அவரும் அழகு நம்பியுமே! வேறு யாரும் இல்லை. தங்களை, திடீரென்று இறந்ததாகப் பிறர் நம்பும் வண்ணம் சூழ்ச்சியுடன் கொல்ல முடிவு செய்தனர் இன்று மாலை!

குமணர்: நன்று! நீர் எவ்வாறறிவீர்?

முடி.: இன்று மாலை, வேனில் விடுதியிலே தனியேயிருந்து ஆராய்ந்து முடிவுசெய்தனர். அடியேன் பக்கத்தறையிலே மறைந்து நின்று கேட்டேன்.

குமணர் (சிந்தனையுடன்): இப்போது அவர்கள் எங்கே?

முடி.: அழகு நம்பியின் அரண்மனையிலுள்ளனர்.

குமணர்: இதற்கு என்ன செய்யவேண்டும் என்கிறீர்?

முடி.: அவர்களைச் சிறைப்படுத்தத் தங்கள் ஆணை வேண்டும்.

குமணர்: அவர்களை என்றால் யாரை?

முடி.: அழகு நம்பியையும் தங்கள் தம்பியையும்.

குமணர் (புன்முறுவலுடன்): என் தம்பியைச் சிறைப்படுத்துவதும் என்னைச் சிறைப்படுத்துவதும் ஒன்றே. கண்ணைக் குத்த வருகிறதென்று விரலை வெட்டுவார்களா?

முடி. (திடுக்கிட்டு): மன்னிக்க வேண்டும், அரசே! தங்கட்குத் தெரியாததில்லை. அரசருக்குக் கேடு சூழ்வார் யாவராயினும் ஒறுத்தற் குரியாரே.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

அன்றோ?

குமணர்: உண்மையே ஆயினும் அவன் ஏன் என்னைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறானென்றறியாமல் எப்படிச் சிறைப்படுத்துவது? அது அரசியற் குற்றமாக இன்றி அண்ணன் தம்பி முறையிலே இருந்தால் என்ன செய்வீர்?

முடி.: அரசுரிமை பெறவே இம்முடிவுக்கு வந்துளார். எனினும்...

குமணர்: எனினும் என்பதே வேண்டாம். இது அரசியற் குற்றமா?

முடி.: ஆம் அரசே! அரசர் வேறு, நாடு வேறு அல்ல; அரசருக்குச் செய்யும் தீமை நாட்டையும் பற்றும்.

குமணர்: வேறோரரசன் என்னை வென்று நாட்டைக் கைப்பற்றுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அது நாட்டிற்குக் கெடுதியா!

முடி: ஆம் அரசே! போர் நடந்தால் நாட்டிற்கும் இடையூறுதானே? தங்களரசரை எதிரியுடன் சண்டையிடத் தனியே விட்டுவிட்டுக் குடிகள் இருப்பார்களோ?

குமணர்: போரிடும் வரையிலேதான் இடையூறு. மறுபடி இல்லையே! நன்று! நான் இதைப்பற்றிச் சிந்தனை செய்து வைகறையிலே அறிவிக்கிறேன். (புன்முறுவலுடன்) இன்றைய இரவிலேயே அப்படியொன்றும் நேராது என் ஆருயிர்க்கு. நீர் உம் அரண்மனையிலே கவலையின்றித் துலலாயிம்.

முடி (எழுந்து வணங்கி நின்று): நன்று! சென்று வருகிறேன். அரசர் பெருமான் உயிர் இந்த நாட்டின் உயிரேயாகும். தங்கள் செயலின் ஒவ்வோரசைவும் இந்நாட்டின் நலத்திலேயே மிளிர்கிறது. (கண் கலங்க) ஆகையால்...

குமணர் (அன்புடன்): கலங்காதீர்! சென்று வருவீராக. நாட்டின் நலமே என் நலன் என்பதை மறவேன். மேலும் உம் அன்பையும் கடமை யுணர்வையும் ஒரு போதும் மறக்க முடியாது.

முடி (வணங்கி): நான் செய்த நல்வினை. (செல்கிருர்.)

குமணர் (எழுந்து உலாவிக் கொண்டே): என் தம்பி என்னைக் கொல்ல விரும்புகிருன். (நகைக்கிருர்.) திங்களிலே வெப்பம் உண்டாவதுண்டோ? நம் மரபிலே இத்தகைய பிள்ளை பிறப்பது நன்ருே? (நிற்கிருர்.) என்னை நேரிலே கண்டு கேட்டால் முழுமனதுடன் நாட்டை யளிப்பேனே! பாரி தன் பகையரசர்க்கே நாட்டையும் உயிரையும் அளிக்கவில்லையா? என் தம்பி என்னைக் கொல்ல விரும்பினுற் கொன்று கொள்ளட்டும்! (உலாவுகிருர்.) இதற்காக அவனையோ அவன் நண்பனையோ சிறைப்படுத்திஞல் நம் குடும்பத்தின் உயிர் நாடி நைந்து நாற்றமெடுத்துவிடும்! அப்படியே அவன் கொல்லலாமென்று விட்டுவிட்டாலும் அதே நிலைதான்! குடிகள் அவனை வெறுப்பார்கள். அந்தோ! என்ன செய்யலாம்? சிறைப்படுத்துவதுந் தவறு! சூழ்ச்சியிலகப்படுவதுந் தவறு! (நின்று)

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை—குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்கு"

என்று வள்ளுவர் கூறுகிருர். (உலாவுகிருர்) மறைந்து விட்டால் என்ன? ஆம் அதுதான் நன்று; அவனுக்கும் பாவமில்லை! நமக்கும் பழியில்லை. அரசபோகத்திலே வெறுப்புற்றுத் துறவு பூண்டதாக ஒரு முடங்கல் எழுதி வைத்துவிட்டு மறைந்துவிடுவோம். (நின்று) என்னே ஊழ்வினையின் கோலம்! நடந்துகொண்டே

யிருக்கும்போது இரண்டுகாலும் முடமாயினாற் போலா யிற்று நம் வாழ்க்கை! (உலாவுகிறார்.) தமிழ்ப் புலவருடன் உரையாடுவதையும் தமிழினினிமையைச் சுவைப் பதையும் எப்படி விடுவது? இறைவா! என் செய்தனே!

[அமர்ந்து ஒரு முடங்கல் எழுதுகிறார். சுருட்டித் தம் இலச்சினையிடுகிறார். அப்படியே கட்டிலின்மேல் வைக்கிறார்- மற்றொரு முடங்கல் எழுதுகிறார். இலச்சினையிடுகிறார்.]

வாயிற் காவலா! (வாயிற் காவலன் வருகிறான்.)

வா. கா.: அரசர் வாழ்க!

குமணர்: இவ் வோலையை விடியற் காலையிலே அமைச்சரிடம் கொடு. எங்காவது விட்டுவிடப் போகிறாய்; போ.

வா. கா. (வணங்கி): ஆணைப்படி அரசே! (செல்கிறான்.)

குமணர் (தனக்குள்): உடனுறை வாழ்க்கைத் துணைவிக்கும் அறிவிக்காமற் செல்ல நேர்ந்ததே! (மாறுவேடம் அணிந்து வெளியே வருகிறார். மெய்க்காவலன் பின் தொடர்கிறான். அதைத் தடுத்துவிட்டுச் செல்கிறார்.)

3

[இடம்: அமைச்சர் முடிநாகராயர் அரண்மனை.

காலம்: காலை.

முடிநாகராயர் தனியே உலாவிக்கொண்டிருக்கிறார்.]

முடி. (தனக்குள்): "என் தம்பியைச் சிறைப்படுத்துவதும் என்னைச் சிறைப்படுத்துவதும் ஒன்றே." என்ன தூய உள்ளம்! ஆராய்ந்து அமைதி பெற்ற உள்ளம்! தன்னலத்தைத் தகர்த்தெறிந்து தணிந்த உள்ளம்! எதிரியின் பிழையாலே தாக்கப் பெற்றுந் தன்னிலை கலங்காத தனியுள்ளம்..................எப்படிப் புகழ்வேன்? இத்தகைய அரசருடன் பிறந்தானே, தாமரை மலருடன் புறவிதழ்போல்! பகலுடன் இரவுபோல்! அறத்துடன் மறம்போல்!.........எப்படியாவது அக்கொடியாரை ஒறுத்தல் வேண்டும். அன்பைக் கடமையால் நீக்க வேண்டும்—! ஆம். அதுதான் அரசர் கடமை. அவர்க்குத் தன் கடமையைத் தெளிவுற எடுத்துக் காட்டாவிட்டால்

நான் செய்ந்நன்றி மறந்தவனுவேன்! மறத்திற்குத் தூண்—கொடுமைக்குக் கைப்பிடி — ஆவேன்!......நாட்டுக்காக வாழ்கின்ற நல்லரசர்! தமிழுக்காக வாழ்கின்ற தகைசான்ற புலவர்! புலவர்கட்காக வாழ்கின்ற புரைபடாத சிந்தாமணி!.........இத்தகைய அரசரை இழப்பதா?.........(நின்று) ஏன் இவ்வெண்ணம் எழுகிறதெனக்கு? அவரை ஏன் இழப்பேன்? (உலாவிக்கொண்டே) தம்பிக்கு அரசை அளித்து விடுவாரோ? அங்ஙனமேல், குரங்கினிடம் அகப்பட்ட பூமாலையாய் விடும் இந்நாடு!......(கண் கலங்க) கூடாது! எப்படியாவது கொடுமையை நிமிர்த்தவேண்டும். (வாயிற் காவலன் வருகிறுன்.) என்ன வேண்டும்?

காவலன் (வணங்கி): அரசரிடமிருந்து தூதன் வந்திருக்கிறுன்.

முடி.: வரச்சொல். (காவலன் செல்கிறுன்.) இப்பொழுதே சென்று வள்ளலின் உள்ளத்தை மெள்ளத் திருப்ப வேண்டும். (தூதன் வருகிறுன்.) வா அப்பா! அரசர் கூப்பிட்டாரா?

தூதன் (வணங்கி): இத்திருமுகத்தைத் தங்களிடம் அளிக்கச் சொன்னுர் அரசர். (திருமுகத்தைக் கொடுக்கிறுன்.)

முடி. (வாங்கிப் பிரித்துக்கொண்டே): இப்போது என்ன செய்கிறுர்! தனியே இருக்கிறுரா? அவையில் இருக்கிறுரா? எப்போது எழுந்தார்?

தூதன் (வணங்கி): மன்னிக்க வேண்டும்; இரவு தாங்கள் வந்த ஒரு நாழிகைக்கெல்லாம் உருவை மாற்றிக்கொண்டு வெளியே சென்றவர் இன்னும் வரவில்லை! (அமைச்சர் திருமுகத்தைப் படிக்கிறுர்; முகம் மாறுகிறது; கையிலிருந்த திருமுகம் நழுவுகிறது.)

முடி. (தன் அச்சத்தையும் கலக்கத்தையும் வெளிக் காட்டாமல்): சரி, நீ போய் அவருடைய அறையைப் பூட்டி வைத்து விடு! நான் வரும்வரையிலே திறக்காதே! போ விரைவில்.

தூதன் (வணங்கி): நல்லது. போய் வருகிறேன். (செல்கிறுன்.)

முடி. (துக்கத்துடன்) : மனக்கோட்டை மண்ணாகிவிட்டதே. மறத்தினுக்கஞ்சி அறம் மறைந்துவிட்டதே! இருள் வருமுன் ஒளி மறைந்ததே! (திருமுகத்தை எடுத்து வாய் விட்டுப் படிக்கிறார்.)

"அமைச்சரே! இன்றிரவு நீர் கண்டதாகக் கூறிய என் தம்பியின் சூழ்ச்சியை வெளியிடலாகாது! வெளியிடலாகாதென்பது மட்டு மன்று! மறந்தே விடவேண்டும். எள்ளளவும் நான் மறைந்த உண்மை நாட்டிலே வெளிவரலாகாது!

"என்னிடத்திலே நீர் உண்மையன்பு கொண்டிருந்தால்—அதில் ஐயமில்லை எனக்கு—என் தம்பியுடன் ஒத்துழைத்து அவனை நன்னெறியிலே செலுத்த வேண்டும். என் மரபிற்குக் களங்கம் வரா வழியை நாடியே மறைகிறேன்.

"நான் அரசியலிலே வைத்த பற்றை நெருப்பிலே போட்டு விட்டேன். அது நன்றாக எரிந்து விட்டது! மீண்டும் உயிர் பெறாது. ஆகையாலே, தேடும் முயற்சியைச் சிக்கற விடுவீராக.

"கண்ணீர் வருகிறது! கலங்குகிறது உள்ளம்! எழுத்தை மறைக் கிறது ஏக்கம்! நான் கௌதம புத்தரல்லேன்! அவர் தம் மனைவியை யும் மகவையும் ஒரு முறை கண்ணுற் பார்த்துவிட்டுத் துறவிலே சென்றார்! நான் என் காதற்கொடியைப் பார்க்காமலே வெளியேறு கிறேன். பார்த்தேனானால் எல்லாம் மறைந்துவிடும்! உள்ள உறுதி ஓடிவிடும். அவளை ஒருவருமறியாமல் உமது ஆதரவிலே வைத் திருக்க வேண்டுகிறேன். எனக்கு மறைவிடம் சரியாகக் கிடைத் தால் வந்து அழைத்து வந்துவிடுகிறேன்.

"எல்லாவற்றையும் ஒழுங்காக முடிப்பீரென்னும் எண்ணம் உண்டு எனக்கு.

"என் அறையிலே எழுதி வைத்திருக்கும் திருமுகத்தைப் படித் துக்காட்டிக் குடிகளை அமைதியுறச் செய்வீராக! என் இளவலுக்குத் துணைபுரிக!"

—குமணன்.

(கண்ணீர் வர உலாவிக்கொண்டே): உள்ளமே! கலங்காதே! செயல் சிதைந்துவிடும். இனி நெருப்புச் சுடலாகாது! கதிரவன் ஒளி வீசலாகாது! காற்று வீசலாகாது...என்னே என் கடமை! குமணன் வள்ளல் எல்லோருக்கும் இனிய பொருள்களை அளித்தார். எனக் குக் கசக்கும் நஞ்சையே கொடுத்தார். (விம்மி விம்மி அழுகிறார்.)

["குமணன்" என்னும் நாடக நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.]

அருஞ்சொற் பொருள்

வேனில்விடுதி-வெயிற்காலத்தில் வெப்பக் கொடுமையில்லாத இடம். இழிவழக்கு-கெட்டவழக்கு. அறிவீனன்-அறிவில்லாதவன். ஏவலன் - பணியாள். கணி - சோதிடன். கொடை - ஈகை. வறிய - ஏழையான. இடர்ப்படுதல் - துன்பமடைதல். புல்லர்கள் - அற்பர்கள். நெறி - வழி. உலகியல் - உலக வழக்கு. கோட்டைவிடுதல்-ஏமாந்து போதல். ஒறுத்தல்-தண்டித்தல். வைகறை-விடியற்காலை. முடங்கல்-திருபம். இலச்சினை-அடையாளம்.

வினாக்கள்

1. இளங்குமணன் அரசாட்சியைக் கைப்பற்றச் செய்யும் சூழ்ச்சி யாது?
2. இளங்குமணன், அழகு நம்பி இவர்களது உரையாடலைச் சொந்த வாக்கியத்தில் சுருக்கி வரைக.
3. அமைச்சர் மன்னனிடம் கூறியது யாது?
4. குமணன் அமைச்சனை நோக்கி யாது கூறினான்?
5. குமணனுக்கு உண்டான உள்ளப் போராட்டத்தை எழுதுக.
6. குமண வள்ளல் தம்பியைக் கைதியாக்கக் கூடாது என்று நினைத்தது ஏன்?
7. கடிதத்தில் மன்னன் அமைச்சருக்கு எழுதிய செய்தி யாது?

இடஞ்சுட்டி விளக்குக:

1. "வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்—பொருந்துதல்தானே புதுமை?"
2. "எட்பிளவு அன்ன சிறு உட்பகை"
3. "மூட்டைப்பூச்சிக்கு அஞ்சியோ வீட்டைப் பிரிப்பார்?"
4. "அரசுக்குக் கேடு சூழ்வார் யாவராயினும் ஒறுத்தற் குரியாரே."
5. "திங்களில் வெப்பம் உண்டாவதுண்டோ?"
6. "இருள் வருமுன் ஒளி மறைந்ததே."

பயிற்சி

உங்கள் செய்யுட் பகுதியில் வரும் கதைப் பகுதிகளை நாடகப படுத்தி நடிக்கப் பழகவும்.

15. சிறு சேமிப்பு

[இக்கட்டுரை அரசினர் கொடுத்துள்ள மாதிரிப் பாடத்தைத் தழுவி எழுதப்பட்டது.]

பணத்தின் அவசியம் :

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு" என்றார் வள்ளுவர். காலையில் துயிலெழுந்தவுடன் கையில் காசில்லை யென்றால் எவ்வளவு துன்பமாகவுள்ளது? பணமின்றி எதையும் வாங்க முடிவதில்லை. வேண்டுமானால் கடையில் சில பொருள்களைக் கடனாக வாங்கலாம். அன்றாடம் தேவையான இன்றியமையாப் பொருள்களை வாங்குவதற்குப் பணமில்லையெனில் எவ்வளவு துன்பப் படுகிறோம்? பொருளில்லையேல் நம் வேலை யனைத்தும் நின்று விடுமல்லவா?

இதனால் பணத்தின் இன்றியமையாமையை நாம் நன்கு உணரலாம். பண்டைக் காலத்தில் நாணயங்களோ கரன்சி நோட்டுக்களோ (ரூபாய்த் தாட்கள்) புழக்கத்திலில்லை. மக்கள் தங்களிடமுள்ள பொருள்களைப் பிறருக்குக் கொடுத்து விட்டுத் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். இதுவே "பண்டமாற்று" என்று கூறப்பட்டது.

நாளடைவில் இப்பண்டமாற்று முறை வளர்ந்தது. வாணிகமும் செழித்து. அப்பொழுது பண்டமாற்று முறைக்குப் பதிலாக வேறு அளவை தேவைப்பட்டது. அதனால் நாணயங்கள் தோன்றின. அவை தோல் அல்லது உலோகங்களால் செய்யப் பட்டன. அவற்றின் மதிப்பும் உலோகம், தோல் இவற்றைவிட உயர்ந்திருந்தது. தற்காலத்தில் நாணயங்களுடன் கரன்சி நோட்டுக்களும் புழக்கத்தில் வந்துள்ளன. இவற்றிற்கு அரசினர் உறுதிமொழியளித்திருப்பதால் மக்கள் தயங்காமல் வாங்கிக் கொள்கின்றனர்.

மக்களின் மதிப்பை அறிய, பொருளே சிறந்த அளவையாகும். பண்டமாற்றினால் பொருளின் மதிப்பை அளப்பது எளிதல்ல; எத்தனை ஆப்பிள் பழங்கள் ஒரு கத்திக்கு ஈடாகும் என்றோ, ஒரு சட்டைக்கு எத்தனைக் காகிதங்கள் சமம் என்றோ கூறுவது எளிதாகாது.

மக்கள் பொருளுற்பத்தி செய்தோ, வியாபாரம்செய்தோ, வேலைகளைச் செய்தோ பொருளீட்டுகின்றனர். ஈட்டிய பொருளைக் குடும்பத்திற்கும் தமக்கும் செலவழிக்கின்றனர். நகரங்களில் வாழ்பவர் காய்கறி, மின்சாரம், தண்ணீர் இவைகளுக்காகப் பொருளைச் செலவிடுகின்றனர். கிராம மக்கள் இவ்வளவு மிகுதியாகச் செலவழிப்பதில்லை. ஆயின் அவர்களுக்கும் தேவையான பண்டங்களை வாங்குவதற்குப் பொருள் தேவைப்படுகிறது. இதனால் செல்வம் ஓரிடத்தில் நிற்காது சென்று கொண்டே இருக்கும். பொருள் ஓரிடத்தில் தேங்கி நிற்பது கூடாது. இவ்வளவு சிறப்புடைய செல்வத்தை எங்ஙனம் ஈட்ட வேண்டும்? எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும்.

பொருள் நிர்வாகம் :

குறைந்த வருவாயுள்ள மனிதன் தனக்குத் தேவையான துணிமணிகளையோ, வேறு பொருள்களையோ எளிதில் வாங்க முடியாது. அவனை நம்பி வாழ்கின்றவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டும். ஆகவே அவன் பொருளை மிகுந்த கவனத்துடன் செலவழிக்க வேண்டும்.

மிகுதியான வருவாயுடைய மனிதன் நன்கு வாழ்க்கையைச் சுவைக்கலாம். ஆடம்பரமாக வாழலாம். ஆனால் அவனும் பொருளைச் செலவழிப்பதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். ஊதாரித்தனமாக வருவாய்க்கு அதிகமாகச் செலவழித்தால் வருவாய் போதாமல் கடன் வாங்க நேரிடும். கடன் வாங்கும் பழக்கம் ஒருமுறை ஏற்பட்டால் அது அவனை விடவே விடாது. அதனால் அவன் மதிப்பிழந்து, நண்பர்களிழந்து பெருந் துன்பமடைவான்.

செலவழிக்கும் பணத்தை எந்த முறையில் செலவழிக்க வேண்டும் என்று நன்றாக ஆராய்ந்த பிறகே செலவழிக்க வேண்டும். அநாவசியமாக நாம் செலவு செய்தால் நாம் இன்னல் படுவதோடு நம் சமுதாயமே பேரிழப்புக்காளாகி விடும். சான்றாகத் தீபாவளிக்கு நாம் வெடிகளை வாங்குகின்றோம். நம்மைப் போன்றே பலரும் வாங்குகின்றனர். தேவையற்ற வெடிகளுக்காக வியாபாரிகளும் தம் பணத்தைச் செலவிட நேரிடுகின்றது. இன்றியமையாத உணவுப் பொருள்கள், மருந்து போன்றவை வாங்க முடியாத நிலை வந்துவிடுகின்றது, இதனால் சமுதாயமே துன்பமடைகின்றது.

தேவைகள் :

ஒரு குடும்பத்திற்குப் பணத்தின் தேவை மூன்று வகைகளில் ஏற்படுகின்றது. உடனடித் தேவை, சேய்மைத் தேவை, எதிர்பாராத் தேவை என்பன.

உடனடித் தேவை: குடும்பம் நடத்த இன்றியமையாது வேண்டப்படும் உணவு, உடை முதலிய பொருள்களை வாங்குவதற்கான தேவை.

சேய்மைத் தேவை: பள்ளி திறந்தவுடன் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்குதல், திருமணம், இன்பச் செலவு போன்றவைகளுக்கு உண்டாகும் தேவை.

எதிர்பாராத் தேவை: திடீரென உடல் நலம் கெட்டு மருத்துவச் செலவு போன்றவைகளுக்கு ஏற்படும் தேவை.

இவைகளுக்கெல்லாம் கையில் பொருளில்லாவிட்டால் மிகவும் வருந்த நேரிடுமல்லவா ?

இதற்கு என்ன செய்வது ? 'விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும்' என்னும் பழமொழிக்கேற்ப வருமானத்திற்குத் தக்க செலவு செய்ய வேண்டும். இதைச் செயலுக்குக் கொண்டு வந்தால் கடன் வாங்க வேண்டிய அவசியமே ஏற்படாது. வருங்காலத்திற்கும் சேமித்து வைக்கலாம்.

அறிவாளியானவன் மாதந்தோறும் வருமானத்தை உறுதிப் படுத்திக்கொண்டு அவசியமான செலவினங்களைத் திட்டமிட்டுச் செய்வான். குறிப்பேட்டில் செலவைக் குறிப்பான். இவ்வாறு குறிப்பேட்டில் செலவினத்தை எழுதினால் தான் தேவையற்ற செலவினங்களைத் தவிர்க்க முடியும். வருமானத்திற்கேற்பக் குறிப்பிட்ட தொகையையும் சேமித்து வைக்கலாம்.

செலவழிக்கும்போது தனக்காக எவ்வளவு, குடும்பத்திற்கு எவ்வளவு என்று சிந்தித்துச் செலவழிக்க வேண்டும். தேவையற்ற பொருள்களுக்கு உள்ள பொருளைச் செலவழித்து விட்டால் இன்றியமையாத பொருள்களை வாங்க முடியாமல் வருந்த நேரிடும்.

சேமிப்பின் சிறப்பு:

சேமிப்பு என்பது ஒரு சிறந்த அறம். நம்முள்ளத்தில் அது கட்டுப்பாட்டுணர்ச்சியை உண்டாக்கும். அநாவசிய

ஆசைகளைத் தடுக்கும். வருங்காலத்தில் மகிழ்ச்சியோடு வாழ வழி செய்யும். சேமிப்பு நாட்டின் நல்வாழ்விற்கும் அடி கோலும்

பொதுத்துறைச் செலவினங்கள் :

குடும்பத்தை நன்கு நடத்த நமக்குப் பொருள் தேவைப் படுகின்றது. சமுதாய நலப்பணிகள் சில புரிய நம் சமுதாயத் திற்குப் பணம் தேவைப்படுகிறது. சாலைகள் போடுதல், குளங் கள் வெட்டுதல், மின்சார வசதிகள் செய்தல், புகை வண்டிகள் கட்டுதல் ஆகிய பணிகளைத் தனிப்பட்டவர் செய்ய இயலாது. நகராண்மைக் கழகம், பஞ்சாயத்து ஒன்றிப்பு, அரசாங்கம் போன்றவைதான் செய்ய இயலும். மக்களுக்கு நன்மை புரிய மக்களால் ஏற்படுத்தப்பட்ட அரசினரின் கடமைகள் இவை. நாட்டில் வெளிநாட்டுப் படையெடுப்புப் போன்ற அவசரநிலை யில் நாட்டுக் காப்புக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்யவேண்டும். இவைபோன்ற பணிகளைப் புரிய அரசுக்குப் பொருள் தேவைப்படும் அல்லவா? அரசுக்குப் பணம் ஏது? தனிப்பட்ட மக்கள் தாமனுபவிக்கும் நன்மைகளுக்கு ஈடாக வரிகள் செலுத்துகின்றனர். இத்தகைய வரிகள் மூலமாகவும், வெளி நாட்டுக் கடன் மூலமாகவும், அரசு பொருளைப் பெறு கின்றது. மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்கிறது.

தனிப்பட்டவர் தாம் சம்பாதிக்கும் செல்வம் அனைத்திற்கும் உரியவராவர். அச்செல்வத்தை அவர் தமக்கும் தம்மைச் சேர்ந்தவருக்கும் செலவிடலாம். சிறுதொகையை வரியாகவும் சேமிப்பு மூலமாகவும், அரசுக்குக் கடனாகவோ, வங்கியின் மூலமாகவோ பிராவிடண்ட் நிதி மூலமாகவோ கொடுத்து உதவுகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டம் :

நம் நாட்டு அரசியல் திட்டத்தின்படி எல்லா மக்களுக்கும் சில உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசு மக்களின் நல் வாழ்விற்குப் பாடுபடுகிறது. இதற்காகப் பல திட்டங்களை வகுத்துள்ளது. *1961* ஆம் ஆண்டுடன் இரண்டு திட்டங்களை முடித்து விட்டு மூன்ருவது திட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

திட்டங்களின் தேவை :

தனிப்பட்ட குடும்பங்களை வெற்றிகரமாக நடத்த சில திட்டங்கள் தேவைப்படுகின்றன, அதுபோன்று நாடு

முன்னேற, நாட்டின் செல்வம் கொழிக்கத் திட்டங்கள் தேவைப் படுகின்றன. இத்திட்டங்களினுல் நாட்டின் பல முன்னேற்றங் களே நாம் வகுக்கலாம். நம்நாடு விவசாயநாடு. நாட்டில் உணவுப் பற்ருக் குறையை நீக்க விவசாயத்திற்கு முதலிடம் தர வேண்டும். குடியரசு நிலைக்கக் கல்வி அவசியமானது. தொழிற்றுறை வளர்ச்சியால் நாட்டின் பொருளாதாரம் தழைக் கும். எனவே இவை திட்டங்களின் மூலம் வகுக்கப்படு கின்றன.

நம் அரசு விவசாய வளர்ச்சிக்குப் பல நீர்த்தேக்கங்களைக் கட்டி, வாய்க்கால்களை வெட்டி, மின்சாரத்தை விரிவுபடுத்திப் பல முன்னேற்றப் பணிகளைப் புரிந்துள்ளது. தேவைப் பொருள்களுக்குப் பிறர் கையை எதிர்பாராது சுய தேவையை நிரப்பப் பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. புகைவண்டி கட்டும் தொழில் நிலையம், கப்பல் தொழிற்சாலை, பெரிய உருக் காலைகள், இன்னோரன்ன தொழில் நிறுவனங்களையும் நிறுவி யுள்ளது. இவற்ருல் மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத் துள்ளன. இவை நம் நாடு விடுதலையடைந்த பிறகு தோன்றிய முன்னேற்றங்கள் என்பதை நாம் மறக்கமுடியாது. இத்தகைய முன்னேற்றங்களுக்குக் காரணம் ஐந்தாண்டுத் திட்டங்களே என்பதில் ஐயமில்லை; முதல் திட்டத்தின் முதலீடு ரூ. 3360 கோடி. இரண்டாம் திட்டத்தின் முதலீடு ரூ. 6750 கோடி; மூன்ரும் திட்டச் செலவு சுமார் ரூ. 11,600 கோடி.

இத் திட்டங்களுக்கு ஏற்படும் செலவுக்கான பணம், வரி, வெளி நாட்டுக் கடன், மக்களின் சிறு சேமிப்பு இவைகளின் மூலமாகவே கிடைக்கின்றது. இதனுல் இச்சிறு சேமிப்பு எவ் வளவு இன்றியமையாதது என்பதை உணரலாம். நம் திட்டம் நிறைவேறச் சிறு சேமிப்புப் பெரிதும் உதவுகிறது எனலாம்.

சேமிப்பினுல் உண்டாகும் பயன்கள் :

இச் சிறு சேமிப்பு மக்களின் வருங்காலத்தை மகிழ்ச்சி நிரம்பியதாகச் செய்வதுடன், சமுதாயத்திற்கும் பயன்படு கிறது. நாம் பணத்தைச் சேமித்துப் பெட்டியில் போட்டு வைத்தால் அது மதிப்பில் உயராது. போட்ட பணம் அப் படியே இருக்கும். கையில் உள்ள பணம் வீணுகவும் செல வழிந்து விடலாம். கையில் பணத்தை வைத்துக் கொண்டால் கண்ட பொருள்களை வாங்க ஆவல் ஏற்படும். ஆகையால்

நாம் சேமித்து வைத்த தொகையை அஞ்சல் சேமிப்பு வங்கியில் போட்டு வைத்தால் அல்லது சேமிப்புப் பத்திரங்களை அல்லது சேமிப்புத் தலைகளை வாங்கினால் நம் பணம் அரசாங்கத்தினிடம் செல்லும். நம் பணமும் அவர்களிடம் பாதுகாப்பாக இருக்கும். அது மட்டுமின்றி அப்பணம் பெருகிக் கொண்டே வரும். அரசினரும் தம் திட்ட வேலைகளை நன்கு செய்ய இயலும்.

சிறு சேமிப்புத் திட்டங்கள் :

இச்சிறு சேமிப்புக்காக அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. அவைகளைப் பற்றிக் காண்போம்.

1. தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்கள் :

இவை அஞ்சலகங்களில் விற்கப்படுகின்றன: பல இடங்களில் கிடைக்கின்றன. அதற்குத் தனி வட்டி 6-25%; தொடர் வட்டி 4.75%. பத்துரூபாய்க்கு ஒரு பத்திரம் வாங்கினால், பன்னிரண்டாம் ஆண்டின் முடிவில் ரூபாய் 17-50 கிடைக்கும். பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவரும், சிறுமியரும் இவற்றை வாங்கலாம்.

2. சேமிப்புத் தலைகள் :

சிறுவர்கள் தங்களிடமுள்ள சிறு தொகைகளை வீணாக்காமல் இத் தலைகளை வாங்கலாம். இருபத்தைந்து பைசா, ஐம்பது பைசா, ஒரு ரூபாய் ஆகிய இனங்களில் இத்தலைகள் அஞ்சலகங்களில் விற்கப்படுகின்றன. அஞ்சலகத்தினர் இலவசமாக வழங்கும் கவர்ச்சியான அட்டையில் இத்தலைகளை ஒட்டி வைக்கலாம். ஐந்து அல்லது பத்து ரூபாய்க்கு இத்தலைகள் சேர்ந்து விட்டால் தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்களாகவோ, தவணைப் பரிசுப் பத்திரங்களாகவோ மாற்றிக் கொள்ளலாம். அல்லது அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கைத் தொடங்கலாம்.

3. பரிசுக் கூபன்கள் :

திருமணம் போன்ற விழாக்களில் சிறந்த பரிசாக வழங்க அழகிய கூபன்களைவாங்கி மணமக்களுக்குப்பரிசாக வழங்கலாம். இவையும் அஞ்சலகத்தில் விற்கப்படுகின்றன. 5, 10 ரூபாய் இனங்களில் கிடைக்கின்றன. கவர்ச்சிகரமான உறையில் இடப்பட்டுப் பரிசு வழங்கத்தக்க முறையில் விற்கப்படுகின்றன. இக்கூப்பன்களைத் தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்களாகவும் மாற்றிக் கொள்ளலாம்.

4. சமுதாய நலத் தவணைச் சேமிப்புத் திட்டம் :

நாம் பணத்தை ஐந்து, பத்து, பதினைந்து ஆண்டுத் தவணைகளில் மாதந்தோறும் வங்கியில் போட்டு வர வேண்டும். தவணை முடிவில் வட்டி சேர்த்து ஒரு கணிசமான தொகையைப் பெறலாம். மாதம் ஐந்து ரூபாய் வீதம் ஐந்தாண்டுகளுக்குக் கட்டிக் கொண்டு வந்தால் முடிவில் 325 ரூபாய் பெறலாம். 25 ரூபாய் நமக்கு வட்டியாகக் கிடைக்கிறது. இத் தொகையை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இடையில் பணம் நமக்குத் தேவைப்படினும் கட்டிய பணத்தில் பாதியைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். அதனைப் பிறகு செலுத்தலாம்.

5. அஞ்சலகச் சேமிப்பு வங்கி :

இது சிறுவர்களுக்குக் கூட பயன்படக் கூடியது. இரண்டு ரூபாயிலிருந்து இவ் வங்கியில் கணக்கைத் தொடங்கலாம். ஒரு ரூபாயாக இருப்பினும் அதை நம்கணக்கில் செலுத்தலாம். ஒரு ரூபாய்க்குக் குறைவாக இருப்பின் சேமிப்புத்தலை வாங்கி அஞ்சலக அலுவலரிடம் கொடுத்தால் அவர் கணக்கில் குறித்துக் கொள்வார். நம்மிடம் கணக்குப் புத்தகம் கொடுக்கப்படும். இவ் வங்கியில் நாம் செலுத்திய பணத்திற்கு 3% வட்டியும் அளிக்கப்படுகிறது.

6. பிரீமியப் பரிசுப் பத்திரம் :

எல்லா அஞ்சலகங்களிலும் இவை கிடைக்கும். இவை 5, 110 ஆகிய இரு இனங்களிலும் விற்கப்படுகின்றன. இப் பத்திரங்களை வாங்கியவர் போட்டியில் கலந்தவராகக் கருதப் படுவார்கள். ஐந்து ரூபாய் பத்திரத்திற்கு அதிர்ஷ்டமிருந்தால் 15,000 ரூபாயும், 100 ரூபாய்க்கு 50,000 ரூபாயும் முதற் பரிசுத் தொகையாகப் பெறலாம். ஐந்து ரூபாய் இனத்தில் 567 வேறு பரிசு களும், 100 ரூபாய் இனத்தில் 242 வேறு பரிசுகளும் உண்டு. பரிசு கிடைக்காவிட்டாலும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு பத்திரத்தின் விலை திருப்பித் தரப்படும். ஐந்து ரூபாய்க்கு 5-50 ; 100 ரூபாய்க்கு 110 ரூபாய்கள் தரப்படும்.

இவற்றுள் எதையேனும் நாம் மேற் கொள்ளலாம். எவ்வளவு சேமிப்பது என்பது முக்கியமல்ல. சேமிப்பு என்னும் வழக்கம் ஏற்பட வேண்டும்; இதுவே முக்கியமானது. இச்

சேமிப்பு வருங்காலத்தை மகிழ்ச்சியோடு இருக்கவும், பாரத சமுதாயம் முன்னேறவும், நாட்டின் செல்வம் தழைக்கவும், அதனுல் வளம் கொழிக்கவும் உதவுகிறது. ஆதலின் வீண் செலவு செய்ய வேண்டாம். நாட்டுக்கு உதவுவோம்; அதனுல் நாமும் நலன் அடைவோம்.

வாழ்க-பாரதம் !

அருஞ்சொற்பொருள்

இன்றியமையாமை - அவசியம். ஈட்டுதல் - சம்பாதித்தல். ஊதாரித்தனம் - மிகுதியாகச் செலவிடுதல்.

விஞக்கள்

1. கூட்டுவாணிகம் என்ருல் என்ன? தற்காலத்தில் அது பொருந்துமா? சான்றுகூறி விளக்குக.
2. மக்கள் மதிப்பை நாம் எவ்வாறு அளவிடலாம்?
3. நாம் ஏன் பணத்தை வீணுகச் செலவிடக் கூடாது?
4. பணத்தின் தேவையை எத்தனே வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை? ஒவ்வொன்றையும் சான்று கூறி விளக்கு.
5. அறிவில்லாமல் செலவு செய்வதால் ஏற்படும் தீமை யாது?
6. அறிவாளி பணத்தை எங்ஙனம் செலவழிப்பான்?
7. "பொதுத்துறைச் செலவினங்கள்" என்பதை விளக்கு.
8. மக்கள் நலத்திற்கு அரசு யாது செய்கிறது?
9. பொருளேச் சேமிக்க அரசாங்கம் என்னென்ன வசதிகளேச் செய்துள்ளது?
10. திட்டத்தின் இன்றியமையாமையை விளக்குக.

16. அருள் உணர்ந்த அண்ணல்

பேராசிரியர் அன்பு - கணபதி

வீரமும் காதலும் மக்கள் வாழ்வுக்கு மிக இன்றியமையாதன. இவை இரண்டனையும் பழந்தமிழர் தம் கண்ணெனப் போற்றினர். வீரத்தைப் புறம் என்றும் காதலை அகம் என்றும் கூறிப் பொருளிலக்கணம் கண்டவர் தமிழர். சங்க காலத்துப் பெரும்பாலான நூல்கள் இவை இரண்டும் பற்றி எழுந்தனவே. இவற்றின் விளக்கத்தினையும் சிறப்பினையும் பழந்தமிழிலக்கியங்களில் நாம் படித்துச் சுவைக்கலாம்.

வீரமாவது அஞ்சாமை ; எடுத்த செயலை இடைவிடாது முயன்று, வரும் இடையூறுகள் கண்டு அஞ்சாது அவற்றை நீக்கி ஏற்றம் பெறுதல். போரில் காட்டுவது மட்டும் வீர மன்று; வாழ்வின் எத்துறையிலும் வீரம் காட்டலாம்; வென்று வாகை சூடலாம். அஞ்ச வேண்டாதவை கண்ட விடத்து அஞ்சாமை வீரம்; அஞ்சுவதற்கு அஞ்சுதலும் வீரமே. வழியொடு வரும் செயல்களைச் செய்ய அஞ்சுவது நெறிதானே ! எனவே இவ்வச்சமும் வீரத்தின் பாற்பட்டதே. இதனையே,

> அஞ்சுவது அஞ்சாமை பேதைமை ; அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்

என வள்ளுவரும் குறித்தார்.

வீரத்தில் ஈரமும் வேண்டும். ஈரமாவது அன்பு. அன்பில்லா வீரம் மணமில்லா மலரே. அறத்தில் போலவே மறத்திலும் அன்பு வேண்டும் ; அன்பில்லா மறம் அறமன்று.

> அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் ;
> மறத்திற்கும் அஃதே துணை.

என்பது வள்ளுவர் காட்டும் நெறி. பொதுவாகப் போரில் காட்டுவதையே நாம் வீரம் என்று கூறுகின்றோம். இது பொது விதி. பழங்காலத் தமிழ் மன்னரும் மறவரும் காட்டிய வீர இயல்பினைப் புறநானூறு போன்ற பழந்தமிழிலக்கியங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. போரில் அம்மன்னரும் மறவரும் புலப்படுத்திய வீரம் நம் உள்ளத்தைத் தொடுவன ; உயிரை ஓம்புவன.

பழைய தமிழ்மன்னர்கள் தம்வீரங்காட்டப் போரில் ஈடு பட்ட வரலாறுகள் பலஉண்டு. போர் என்றால் அம்மன்னர்க் கும் வீரர்க்கும் விருப்பு மிகுதி. ஆனால் அந்தப் போரினால் ஏற்படும் அழிவுகள் எண்ணத் தொலையாதன. பல உயிர்களும் பொருளும் யாருக்கும் பயன்படாது வீணே அழியும். இதனை உணர்ந்த அந்தக் காலத்துச் சான்றோரும் புலவருமாகிய பலர், அம்மன்னருக்கும் வீரர்க்கும் அவ்வப்போது அறங் கூறினர்; அருள் உணர்வு வளர்த்தனர். பல்லாயிரக் கணக்கான வீரரையும் படையினையும் அழித்து ஒழித்த அசோகன், முடிவில் அருள் உணர்வு பெறவில்லையா? அவ் வாறு போரில் பல உயிர்களைக் கொன்ற தமிழ் மன்னர் பலர் இறுதியில் தம் புன்மை உணர்ந்து அருள் உணர்வு பெற்றனர்.

மிகப் பழங்காலத்தில் பாண்டிநாட்டினை நெடுஞ்செழியன் என்ற பாண்டிமன்னன் ஆண்டுவந்தான். முடியுடை வேந்த னாகிய இவன் பெருவீரன்; வள்ளல். இவன் மிகவும் சிறிய பருவத்திலே அரசுக்கட்டில் ஏறினான். இவனது வீரம் கொடை முதலிய அருங்குணங்களைப் பாராட்டிக் கல்லாடனார், இடைக் குன்றூர் கிழார், மாங்குடி மருதனார் முதலிய புலவர்கள் பாடி யுள்ளனர். பத்துப் பாட்டுள் ஒன்றான மதுரைக் காஞ்சியின் தலைவன் இவன். இதனைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார் நெடுஞ்செழியனது வீரம், கொடை, குணச் சிறப்பு இவற்றை எல்லாம் அந்நூலில் அணிபெற வைத்து விளக்கியுள்ளார். அந்நூலை இவன்மீது பாடியதன் மூலம் அவன் கொண்டிருந்த போர்வெறியைத் தணித்து, அருள் உணர்வு பெறச் செய்துள் ளார். இப்பாண்டியன் சிறந்த புலமையாளன். சங்கப் புலவர்களை ஒத்துப் பாவன்மை பெற்றிருந்தான்; புறநானூற் றில் இவன் பாடிய பாடலொன்றும் இடம் பெற்றிருப்பது இவன் பாவன்மையை நமக்குப் புலப்படுத்துவதாக உள்ளது.

மிக்க இளமையில் ஆட்சி உரிமை பெற்ற இவன் மதுரையிலிருந்து திறமுற நாட்டை நடத்தினான். இவனது நாளோலக்கம் பலவகையான அரசியல் தலைவர்கள், வீரர்கள், புலவர், பாணர், பாடினி முதலியவர்களால் எப்பொழுதும் நிரம்பியிருந்தது. வீரர், புலவர் முதலியோரை வருக என அழைத்து வேண்டும் பரிசளித்துச் சிறப்பிப்பது நாள் தோறும் இவன் செய்து வந்த முதற் பணியாக இருந்தது. கடல் நடுவே தோன்றும் ஞாயிறுபோலவும், விண்மீன்களிடை

விளங்கும் திங்கள் போலவும் கணக்கற்ற வீரர் முதலியோர் நடுவண் நெடுஞ்செழியன் கொலுவிருந்து அரசியல் பணிகளைச் செவ்வனே நடத்திவந்தான். இந் நெடுஞ்செழியன் மண்டிலத்தலைவர், வீரர், அறிஞர், கூத்தர் முதலிய பலரையும் அழைத்து உபசரித்து அரியணையில் வீற்றிருந்த சிறப்பினை மாங்குடி மருதனார் பாராட்டுகிறார்.

நெடுஞ்செழியன் ஆட்சிக்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே இவனைச் சிறுவன், திறமில்லாதவன் என எண்ணிய சேரனும் செம்பியனும் ஆகிய முடியுடை வேந்தர் இருவரும் இவனை அழித்துப் பாண்டிநாட்டைக் கைப்பற்றச் சேர்ந்து திட்டமிட்டனர். இதற்குத் துணையாகத் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஐந்து குறுநில மன்னர்களையும் உடன் சேர்த்துக் கொண்டனர். இவர்கள், எழுவர் சார்பில் சேரன் நெடுஞ்செழியனுக்கு ஓலை யனுப்பினான்: இச் சேரன், போர்வன்மை பெற்ற வீரன். சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற நீண்ட பெயரினையுடையவன். 'செழியன் பாண்டி நாட்டு உரிமையைத் தங்களிடம் தந்து விட வேண்டும்; இல்லையேல் போர்' என்பது சேரன் அனுப்பிய செய்தி. இதனைச் செவிமடுத்த செழியன் சீறி எழுந்தான். 'என்னை இளையவன் என்று இகழ்ந்த எழுவரையும் செருமுனையில் சந்திப்பேன்' என ஓலை கொண்டு வந்த தூதுவன் மூலம் செய்தி விடுத்தான். பின்னர் அவையில் வீற்றிருந்தோரைப் பார்த்து வஞ்சினம் கூறினான்.

"இளையன் என்று என்னை எளிதாக எண்ணினர். என் வலிமை கண்டு அஞ்சினார்களில்லை. சினத்தால் செருக்கிச் சிறுசொல் கூறினர். அவ்வேந்தர்களைப் போரில் தோற்றோடு மாறு தாக்கி முரசத்தோடு அவர்கள் எழுவரையும் சிறை பிடிப்பேன். அங்ஙனம் நான் செய்யேனாயின் என் நிழலில் வாழும் குடிகள் தங்க வேறு நிழல் காணாது 'கொடியவன் எம் தலைவன்' என்று அழுத கண்ணீருடன் கூறுமாறு அவல ஆட்சியினை நான் நடத்தியவனாவேன். சிறந்த கல்வியும் கேள்வியுமுடைய மாங்குடிமருதன் முதலாகச் சொல்லப்பட்ட பெரும் புலவர்கள் என் நாட்டைப் பாடாது நீங்குவாராக என் சுற்றம் துன்புறுக. இரவலர்க்கு ஈயாத வறுமையுடையேன் ஆக."

இது பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினம். இதில் குடிகளிடத்தும், இரவலரிடத்தும் செழியன் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் அருளும் எத்துணை அழுத்த மானவை என்பது விளங்குகின்றது.

சொல்லியபடி இரும்பொறை முதலிய எழுவரொடு போர் தொடுத்த பாண்டியன் தன் பெரும்படையைத் தானே தலைமை வகித்துச் செலுத்தினுன். சோழநாட்டுத் தலையாலங்கானம் என்ற ஊரில் இருபடைகளும் சந்தித்தன. அங்கு நடந்த பெரும் போரில் நெடுஞ்செழியன் தன் வீரங்காட்டி வாகை சூடினுன். சேரலிரும்பொறை முதலிய எழுவரையும் முறியடித்துத் தன் பெருமை காத்தான்; வஞ்சினம் நிறைவேற்றினுன்.

இவ்வாறு சேரலிரும்பொறை உள்ளிட்ட எழு வரை வென்ற செழியன் அவர்கள் அரணங்களையும் காவன் மரங் களையும் அழித்தான். இப்போரில் ஆயிரக்கணக்கான வீரர் மறைந்தனர்; யானை, குதிரை முதலிய படைகள் அழிந்தன மேலும் சாலியூர், முதுவெள்ளிலை முதலிய ஊர்களை வென்று கைக்கொண்டான். பரதவரை வென்ருன். இவ்வாறு பகை வரை வென்று அவர்களிடமிருந்து பறித்து வந்த பொருள் களை வீரர் புலவர் முதலியோர்க்கு ஏராளமாக வாரி வழங்கினுன்.

இங்ஙனம் இவன் ஆட்சியின் பெரும் பகுதியைப் போரி லேயே கழித்தான்; பகைவரையும் அவர் நாடுகளையும் பாழாக்குவதில் செலவிட்டான். ஆயினும்; இவன் தன் நாட்டு மக்களுக்கு வேண்டும் நன்மை செய்வதில் சிறிதும் தளர்ந்தா னில்லை. குடிபுறந் தழுவிச் செம்மையாகவே கோலோச்சினுன். ஆண்டில் ஐம்பது கடந்த பிறகுங்கூட இவனுக்குப் போரி லிருந்த விருப்புச் சிறிதும் குறையவில்லை. இவன் கொண்டி ருந்தது போர் வெறி என்று சொல்லுமளவுக்கு இவனிடத்தில் போர் விருப்பம் பெருகி யிருந்தது.

மாங்குடி மருதனுர் இவனது அவைக்களக் புலவரில் தலைவராகி விளங்கினுர். இவனிடத்தில் அளவு மீறிய அன்பு வைத்திருந்தார். இவன்நல்ல குணங்களை எல்லாம் பாராட்டி னுர். ஆனுல் இவன் கொண்டிருந்த போர்க் குணம் மட்டும் இவருக்குப் பிடிக்காதிருந்தது. இதனை மன்னனிடம் சொல்லு வதற்குத் தக்க காலம் பார்த்திருந்தார்: சமயம் வாய்க்க

வில்லை. ஐம்பது வயதிற்குப் பிறகும் இவன் போர் விருப்பு மாறாதது கண்டு எங்ஙனமேனும் இவன் உளத்தை அருள் வழியில் திருப்ப வேண்டுமென எண்ணினார்; அதனைத் தம் கடமையாகவும் கருதினார். அதன் பொருட்டு அவர் எழுதிய நூலே மதுரைக்காஞ்சி. காஞ்சியாவது உலக நிலையாமை கூறுவது; அவ்வாறு கூறுவதன் மூலம் அருள் உணர்வு எழுப்புவது. மதுரையிடத்து ஆண்ட நெடுஞ்செழியனுக்குக் கூறிய காஞ்சியாதலின் இது மதுரைக்காஞ்சி எனப்பட்டது

மருதனார் இந்நூலின் தொடக்கத்தில் தாம்கொண்ட கருத்தை வெளியிடவில்லை. நெடுஞ்செழியனின் முன்னோர் இயல்பு, இவனது வீரம், கொடை, கோன்மை, சால்பு முதலிய வற்றையும் மதுரையின் பெருவளத்தையும் நன்கு எடுத்துப் பாராட்டினார். பின்பு சில அடிகளில் தம் உள்ளக் கருத்தை உணர்த்தினார் :

" இவ்வுலகத்துப் பொருள்கட்கு நின்னோடு என்ன உறவு உண்டு? இதனை உணர்க. நின்னிடத்து இருக்கும் மாயை கெடுவதாக. அம்மாயையைக் கொல்லும் போர்த்தொழில் வல்ல தலைவனே! பெரியதாயிருப்பதொரு பொருளை யான் கூறுவன்; என்றால் அது காட்டுதற்கு இயலாது."

இவ்வாறு நிலையாமை கூறி அருள் உணர்வு எழுப்பிய மருதனார் பின்னும் கூறினார் ;

" மன்னனே! உன்னைப் போல வீரப்புகழ் பரக்க இவ் வுலகில் இதற்கு முன்பு எத்துணையோ மன்னர்கள் வாழ்ந்தனர். மக்கட்குரிய மன்னுணர்வு அற்ற அவர்கள் எல்லோரும் வீணே மாண்டொழிந்தனர். அங்ஙனம் முன்பு இறந்தவர் கடலலையால் கரையில் சேர்க்கப்படும் மணலினும் மிகப்பலர்."

மாங்குடி மருதனாரின் பொருளுரை கேட்டுப் பாண்டியன் தெளிவு பெற்றான்; அவர் உரைவழி நின்றான்; உலக நிலை யாமை உணர்ந்தான்; நண்பர் பகைவர் என்ற வேறுபாடு நீக்கி அனைவரையும் மக்கள் என்று கருதினான்; விருப்பு வெறுப்பு விடுத்த வீரனானான்; போர்வெறி நீங்கினான்; அருள் உணர்வு பெற்ற அண்ணல் ஆனான்; முடிவில் உலகில் அருள் நெறி வளர்த்து அமைதி பெற்றான்.

அருஞ்சொற்பொருள்

ஏற்றம் - சிறப்பு. வாகை - வெற்றி. மறம் - வீரம். மறவர் - வீரர். ஓம்புவன - போற்றுவன; காப்பன. புன்மை - இழிசெயல் நாளோலக்கம் - நாள் + ஓலக்கம் = அரசன் நாள்தோறும் வீற்றிருந்து ஆட்சி செய்யும் அவை. வஞ்சினம் - சூளுரை; சபதம். அரணம் - கோட்டை.

வினாக்கள்

1. வீரமாவது யாது ?

2. நெடுஞ்செழியனைப் பாராட்டிப் பாடிய புலவர்கள் யாவர் ?

3. நெடுஞ்செழியன் பாவன்மை யுடையவன் என்பதை எதனால் அறியலாம் ?

4. நெடுஞ்செழியனை எதிர்த்த அரசர்கள் யார் யார் ?

5. தன் அவையோரைப் பார்த்து நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினம்யாது ?

6. 'மதுரைக் காஞ்சி'—சிறு குறிப்பு எழுதுக.

7. மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை ?

———

171526

RTR/134